தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 295

# காஞ்சி மன்னன் அம்மானை

வெளியிடுபவர் :

பன்மொழிப் புலவர், பேராசிரியர்

மு. சதாசிவம்

இயக்குநர்

சரசுவதி மகால் நூலகச் சங்கம்

தஞ்சாவூர்.

1990] [விலை ரூ. 10-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 295

# காஞ்சி மன்னன் அம்மானை

பதிப்பாசிரியர் :

**எம். சீராளன்,** பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,

நூலகர் II, சரசுவதி மகால் நூலகச் சங்கம்.

வெளியிடுபவர் :

பன்மொழிப் புலவர், பேராசிரியர்

மு. சதாசிவம்

இயக்குநர்

சரசுவதி மகால் நூலகச் சங்கம்

தஞ்சாவூர்.

1990 ] [ விலை ரூ. 10-00

முதற் பதிப்பு — 1970

இரண்டாம் பதிப்பு — 1990

வெளியீடு

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

அச்சிட்டோர்

ஜெமினி அச்சகம்

மேலவீதி, தஞ்சாவூர்.

# நூன் முகம்

காஞ்சி மாநகரையாண்ட மன்னன் ஒருவனின் திருமணச் செய்தி பற்றிக்கூறும் இந்நூல் 'காஞ்சி மன்னன் அம்மானை' என்று பெயர் பெற்றுள்ளது. நாடோடிப் பாடல்களில் கதையைத் தழுவிவரும் நெடும்பாடல்கள் அம்மானை என்று பெயர் பூண்டிருத்தலைக் காண்கிறோம். அவ்வகையைச் சார்ந்த இந் நூலிலும் கொச்சை மொழிகள், உலக வழக்குச் சொற்கள், யாவருக்கும் விளங்கும் உவமானங்கள், ஒரு செய்தியையே மீண்டும் மீண்டும் சொல்லுதல், முதலியன காண்கிறோம்.

காஞ்சி மன்னன், பாண்டியன் மகள் மீது காதல் கொள்கிறான். மதுரைப் பாண்டியன் பெண் கொடுக்க மறுக்கவே மாறுவேடத்தில் சென்று பாண்டியன் மகளை மணக்கிறான். இக்கதை நூலின் முற்பகுதியாக அமைந்துள்ளது. காஞ்சியன் தன் மனைவி மசக்கையினால் மலைமிதுக்கம் பழம்வேண்ட, மலைக்குச் செல்லுங்கால் குறவர்களிடம் அகப்பட்டுக்கொள்கிறான். அது சமயம் குறமாதின் உறவு உண்டாகிறது. ஆனால் இவ்வுறவு இடையில் முறியடிக்கப்பட்டு சோகத்தில் முடிவுறுகின்றது. இக்கதை இரண்டாம் பாகமாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கதைப்போக்கை நோக்குங்கால் ஆறுமுகன் வள்ளி தெய்வயானையை மணந்த பாங்கில் அமைந்துள்ளது. நூலாசிரியரும் "மாயோன் மருமகளை மொய்குழலை இக்கதைக்கு முன்பாக வைத்தேனே" என்று கூறியுள்ளார்.

இந்நூலைச் செய்தவர் இன்னாரென்று தெரியவில்லை. ஆனால் சுவடியின் ஈற்றுக்குறிப்பில் சுவடியைப் படியெடுத்தவர் விபரமும், எழுதிய காலமும் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. "காவிரிக்கரை அருகான கிள்ளியூரிலிருக்கும் வெள்ளான நில பிரமபிலி... பிள்ளை மகன் கோனேரியப்ப பிள்ளை மகன் ஆனையப்ப பிள்ளை மகன் நாகனாத பிள்ளை காஞ்சியன் கதை எழுதி முகிந்தது முற்றும்-குரோதி-ஷு பங்குனி-மீ ௨௪ வ" இது தவிர வேறு செய்தி ஒன்றும் நூலில் இல்லை. மேலும் இக் கதையில் வருகின்ற காஞ்சி மன்னன் பெயர் 'தேசிகன்' என்றும் அவன் ஊர் 'பூங்குறிச்சி' என்றும் ஊகிக்க கீழ்க்கண்ட அடிகள் ஏதுவாக அமைந்துள்ளன. இச்செய்தி ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்கு உதவியாய் இருக்குமென நம்புகிறேன்.

"சிலைநுதலா ளப்போது தேசிகனோ டென்சொல்வாள்"
"மன்னரே பூங்குறிச்சி மாநகரே வந்தருளும்"

என்பனவாகும்.

இப்பெயருடைய இரண்டு சுவடிகள் (எண்கள் 407; 694 a) மகாலில் உள்ளன. பின்னது அபூர்த்தியாக இருப்பதோடு சிறிதும் ஒப்புநோக்க இயலாவண்ணம் சிதைந்துள்ளது. ஆகவே 407 ஆம் எண்ணுள்ள சுவடி ஆய்ந்து இந்நூலாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இப்பிரதியும் கடைசியில் சில இடங்கள் அரித்தும் முறிந்துமுள்ளதால், அந்த இடங்களில் இணைந்துள்ள சொற்களை அடைப்புக் குறியினுள் தந்துள்ளேன். மேலும் இந்நூல் நெடும் பாடலாக அமைந்துள்ளதால் படிப்போருக்கு சுவையூட்ட இடையிடையே சிறு தலைப்புகள் கொடுத்துள்ளேன். சிற்சில இடங்களில் அடிக்குறிப்பும், பொருள் விளக்கமும் உதவியாய் இருக்குமெனக் கருதி இணைத்துள்ளேன்.

இந்நூலைப் பதிக்கத் தொடங்கும் முன்னும் பின்னும் இப் பிரதி வேறு நூலகங்களில் உள்ளதா என்றும், அச்சாகியுள்ளதா என்றும், ஆய்ந்தேன். அத்துடன் பல நூலகங்களின் பட்டியல் களிலிருந்து இதுவரையில் தெரிய வந்த அம்மானை நூல்களின் தலைப்புகளையும் சேகரித்தேன். அவ்வாறு தொகுத்த அம்மானைப் பட்டியல் ஒன்றையும் வரிசைப்படுத்தி இங்கே தந்துள்ளேன். இது அம்மானை நூற்களின் ஒரு முழுமையான பட்டியலாக இல்லாவிடினும் ஆய்வாளருக்கு உதவியாய் இருக்கு மெனக்கருதி இணைத்துள்ளேன். இந்நூலைப் பயன்கொள்ளும் அன்பர்களும், கண்ணுறும் அன்பர்களும், இதில் சேர்க்கப்படாத அம்மானை நூற்பெயர்களை தெரிவித்தால் நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

## அம்மானை நூல்களின் அகரவரிசைப் பட்டியல்

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 1. | அதிரியரம்மானை | — |
| 2. | அந்தோணியார் அம்மானை | தோமைப்பிள்ளை பட்டங்கட்டியார் |
| 3. | அம்மானை | அல்லி மரைக்காயர் |
| 4. | அர்ச். அந்தோணியார் அம்மானை | ஜகராவ் முதலி, எஸ் |
| 5. | அர்ச். கித்தேரியம்மாள் அம்மானை | வீரமாமுனிவர் |
| 6. | அர்ச். மரிகருத்தம்மாள் அம்மானை | அப்துல்லா சாயபு |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 7. அரிச்சந்திரன் அம்மானை | — |
| 8. அரியன் சண்டை அம்மானை | — |
| 9. அல்லி அரசாணி அம்மானை | — |
| 10. அலசம்மானை | அருணாசல செட்டியார் |
| 11. ஆலாசிய அம்மானை | — |
| 12. இராமப்பையன் அம்மானை | — |
| 13. இராமய்யன் அம்மானை | — |
| 14. இராமனம்மானை or இராமரம்மானை | — |
| 15. ஐவர் அம்மானை | — |
| 16. கஞ்சனம்மானை | — |
| 17. கள்ளழகர் அம்மானை | — |
| 18. காஞ்சி மன்னன் அம்மானை | — |
| 19. காராளன் அம்மானை | — |
| 20. காட்டுபாவா சாகிபு அவர்கள் அம்மானை | முத்து முகமது புலவர் |
| 21. குமார தேவர் ஞானவம்மானை | — |
| 22. குருட்சேத்திர அம்மானை | — |
| 23. சந்தத்தோணியார் அம்மானை | — |
| 24. சித்திர புத்திரனார் அம்மானை | சிதம்பரநாதன் |
| 25. சிவகங்கை அம்மானை | — |
| 26. சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும் | — |
| 27. சீரங்க அம்மானை | — |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 28. சீராளன் அம்மானை என்னும் சிறுத்தொண்ட பத்தன் கதை | புகழேந்திப்புலவர் |
| 29. சீவகசிந்தாமணி அம்மானை | — |
| 30. ஞானசவுந்தரி அம்மானை | — |
| 31. ஞானவம்மானை | — |
| 32. தருமர் அசுவமேத அம்மானை | அருணாசல செட்டியார் |
| 33. தாவிதரசன் அம்மானை | — |
| 34. திரௌபதி அம்மானை | — |
| 35. திருவிளையாடல் அம்மானை | — |
| 36. தேவமாதா அம்மானை | — |
| 37. நபியவதார அம்மானை | சையது மீரான் புலவர் |
| 38. நெல்வேலி அம்மானை | இராசகோபாலப்பிள்ளை, கோ. |
| 39. பஞ்சரதி அம்மானை | வேல்முருகா பாண்டியன் |
| 40. பப்பரத்தியார் அம்மானை | செயீது மீராப்புலவர் |
| 41. பாகவத அம்மானை (முதற்புத்தகம்) | மாரியப்பக்கவிராயர், மு. |
| 42. பாகவத அம்மானை (II) | சங்கரமூர்த்திக்கோனார், அ. |
| 43. பார்சுவநாதர் அம்மானை | — |
| 44. பார்ப்பரம்மாள் அம்மானை (இரண்டாம் புத்தகம்) | — |
| 45. பாரத அம்மானை | கிருஷ்ணன் |
| 46. பொன்னர் சங்கர் அம்மானை | வாரணவாசிக் கவிராயர் |
| 47. மகாபாரத அம்மானை | — |
| 48. மஹாராணி அம்மானை | சுப்பா ரெட்டியார் |
| 49. மதுரைவீரன் கதை அம்மானை | சங்கரமூர்த்திப்புலவர் |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 50. மதுரைவீரன் அம்மானை | மீனாட்சி தாசர் |
| 51. மாகபுராண அம்மானை | — |
| 52. மாகஸ்நான புராண அம்மானை | — |
| 53. மாணிக்கவாசகர் அம்மானை | சங்கரமூர்த்திப்புலவர் |
| 54. மார்க்கண்டன் அம்மானை (or) மார்க்கண்டேயன் அம்மானை | — |
| 55. மூவரம்மானை | — |
| 56. மேரிகருதம்மாள் அம்மானை | — |
| 57. ரூத் அம்மானை | சட்டாம்பிள்ளை, ஏ. என். |
| 58. வள்ளியம்மை அம்மானை | — |
| 59. விராடபர்வ அம்மானை | முனிசாமி முதலியார் |
| 60. விரைய்யன் அம்மானை | — |
| 61. வேதாந்த வம்மானை | — |
| 62. வேம்பத்தூர் ஐயா அம்மானை | — |
| 63. வைகுந்த அம்மானை | புகழேந்திப்புலவர் |
| 64. வைகுண்ட அம்மானை | தென்விரையாம்பதியார் |

இந்நூலின்கண் சில செய்திகள் மிக அழகாகவும் தெளிவாகவும் வருணிக்கப்பட்டுள்ளன. ஒப்புமை நயமும், உவமைநயமும் துயில் தொறும் நயம் பயப்பவை. பாண்டியன் மகளை உவமிக்கும் புலவர், அவள் அங்க வருணனைகளை பல்வேறு கனிகட்கும், மலர்கட்கும் ஒப்பிடுகின்றார். அவையடக்கம் கூறுமிடத்து "கொற்ற விழுதாலின் கனியின் சிறுவிதைபோல் சிற்றெறும்பு வெள்ளைத்திரை கடலையுண்ட தொக்கும்" என்று கூறி புலமையை வெளிப்படுத்துகிறார். அறியாத் தொழிலைத் தொடர்வது அரிது என்பதை சுட்டிக்காட்ட விழைந்தவர் "நாமறியா வாணிபந்தான் நஞ்சோடே யொக்கும்" என்று

காஞ்சியன் மூலம் தெரிவிக்கின்றார். அதாவது காஞ்சிமன்னன் பாண்டியன் மகளை மணக்க மாறு வேடத்தில் பொற்கொல்லன் துணையுடன் அவன் தம்பி என்று கூறிக்கொண்டு அரண்மனை யில் பொற்கொல்லன் பணியை ஏற்கிறான். அதுசமயம் அவன் பட்ட தொல்லைகளைக் கூறவந்த புலவர் உண்மையை எடுத் துரைக்கிறார். மேலும் மறைமுகமாகக் காஞ்சியனும் பாண்டியன் மகளும் சந்திக்க பொற்கொல்லன் முயற்சியால் செய்மாளிகை ஒன்று அமைக்கப்படுகிறது. அதனைக் கண்டு

> "தட்டி யடித்ததோ தகடா யிணைத்ததோ
> கட்டிப்பொன் தானுருக்கிக் கருப்பிடித்து வார்த்ததுவோ"

என்று யாவரும் வியந்ததாகக் கூறி வருணிக்கிறார். யானைக்கு மதப்படுத்த என்னென்ன பொருட்கள் சேர்க்கப்படுகின்றன என்ற விபரம் இந்நூல் மூலம் அறியலாம். வசியம் பண்ணுதல் என்ற முறை பன்னெடுங்காலமாக இருந்ததாகக் கேட்டிருக் கிறோம். அந்த வசிய முறைக்கு பயன்படும் பொருட்களை குறமாதின் வாயிலாக அறியமுடிகிறது. இன்றுகூட நம்மிடையே இருந்துவரும் சகுனம் பார்க்கும் முறையின் விளக்கம் பேசப்படு கிறது. விலங்குகளையும், அவற்றின் செயலையும் கூறி நல் நிமித்தமும் தெளிவாகக் கூறப்படுகிறது. இத்தகு நயங்கள் மல்கிய இந்நூல் கற்போருக்கு களி விருந்தாகும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இந்நூலை வெளிக்கொணர அனுமதி நல்கிய சரசுவதிமகால் நூலகக் கௌரவக் காரியதரிசி தமிழ் மூதறிஞர், திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கட்கு என் வணக்கம் உரித்தாகும். மேலும் இதைப் பதிப்பிப்பதில் ஆர்வமூட்டிய நூலகர் திரு. வே. கோபாலய்யங்கார் அவர்களுக்கும், இதற்கு உதவியாய் இருந்த வித்துவான் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்கட்கும் என் உள்ளங் கனிந்த நன்றி உரித்தாகுக.

எல்லாம் வல்ல இறையருள் துணைநிற்க இயைந்த இந் நூலைத் தமிழுலகம் ஏற்று இன்புறுவதாகுக.

தஞ்சாவூர்,
15—8—1970.

எம். சீரானன்,
துணை நூலகர்,
சரஸ்வதிமஹால் நூல் நிலையம்.

# இரண்டாம் பதிப்புரை

காஞ்சி மன்னன் அம்மானை என்ற இச்சிறு நூல் பல ஆண்டு கட்குப் பிறகு மீண்டும் வெளிவருகிறது. சிறிய நூலானாலும் இலக்கிய நயம் மிகுந்தது. நூலாசிரியரின் சொல்லாட்சி எண்ணி யெண்ணி இன்புறத்தக்கது. எடுத்துக்காட்டாக மலைகளைப் பற்றிக்கூறும்போது தொங்குமலை, குடகுமலை, பச்சைமலை, பவளமலை, குவட்டுமலை, கோடிமலை, வள்ளிக்கொடிமலை, செம்மலை, கல்மலை எனப் பல பெயர்களை கூறுவதும்; சிங்கம், புலி, கரடி, யானை, ஆளி, புரவி, கடமா, மந்தி காட்டெருமை, புள்ளிமான், மரநாய் என மிருகங்களின் பெயர் களை அடுக்கிக் கொண்டே செல்வதும்; கிளி, காடை, காக்கை, மயில், அன்னம், வானக்கோழி சித்திரப்புள், கூகை, கொக்கு, குருவி, கோலவண்டான், கடல்புள், கழுகு, பருந்து, ஆலா, கவுதாரி, செம்போத்து, ஊர்க்குருவி, புறா, குப்பைகெல்வி, கலைக்கோட்டான், மரங்கொத்தி, பழுஞ்செட்டான், கலக்கிளி, கருங்குருட்டி, சுளிமடையான், குக்குறுவன், மாடை, மடையான், மனுக்குருவி எனப்பறவையினங்களைப் பட்டியல் இடுவதையும் காணமுடிகிறது

இப்பதிப்பில் ஆய்வாளர் நலன் கருதி முகற்பதிப்பு முன்னுரை யில் கொடுக்கப்பட்ட அம்மானை நூல்களின் அகரவரிசைப் பட்டியலில் பின்பு தெரிய வந்த அம்மானை நூல்களின் பெயர் களும் இணைத்து அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பிற் பகுதியில் இந்நூல்பற்றி நாளேடுகளில் வெளிவந்த மதிப்புரைகளும் கலைச்சொல் அகர வரிசைப்பட்டியும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலை வெளியிட்டுதவிய நூலக இயக்குநர் பேராசிரியர் பன்மொழிப்புலவர் மு. **சதாசிவம்**, எம். ஏ., எம். லிட்., அவர்கட்கு என் பணிவார்ந்த நன்றி கலந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

நூல் வெளியீட்டுக்குப் பொருளுதவி வழங்கிய மைய அரசுக்கும், செம்மையுற அச்சிட்டுத் தந்த ஜெமினி அச்சகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

**எம். சீரானன்**

# வேண்டுகோள்

கருணையுள்ளம்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் பத்துப் பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*3—07—90.*

*மு. சதாசிவம்*, எம்.ஏ.,எம்.லிட்.,
இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.

# BIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Kanchi Mannan Ammanai |
| Editor | : | M. Seeralan |
| Publisher | : | Prof. M. Sadasivam,<br>Director,<br>T M S S M. Library Society,<br>Thanjavur. |
| Publication Number | : | 295 |
| Language | : | Tamil |
| Edition | : | IInd Edition |
| Date of Publication | : | July 1990 |
| Paper used | : | 14.2 D. D. Seshasayee |
| Size of the book | : | 21 × 14 cm. |
| Printing types used | : | 10 Pt. |
| Number of copies Printed | : | 1200 |
| Number of pages | : | 84 |
| Price | : | Rs. 10/- (Rupees Ten only) |
| Printer | : | M / s. Gemini Printing House,<br>1837 / 1, West Main Street,<br>Thanjavur - 613 009. |
| Binding | : | Section Stitching |
| Subject | : | Literature. |

## எமது இலக்கிய வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| 1. | அதிரியர் அம்மானை | 12—00 |
| 2. | சித்ரபுத்ர அம்மானை | 20—00 |
| 3. | சீவகசிந்தாமணி அம்மானை | 15—00 |
| 4. | கஞ்சனம்மானை | 30—00 |
| 5. | மார்க்கண்டேயன் அம்மானை | 30—00 |
| 6. | பார்சுவநாதர் அம்மானை | 5—00 |
| 7. | திரௌபதை அம்மானை | 15—00 |
| 8. | இராமர் அம்மானை | 18—00 |
| 9. | வீரைய்யன் அம்மானை | 10—00 |
| 10. | இராமய்யன் அம்மானை | 15—00 |
| 11. | குசலவன் கதை | 12—00 |
| 12. | குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் | 17—00 |
| 13. | குடந்தை அந்தாதி | 5—00 |
| 14. | காமாட்சி தவசு | 10—00 |
| 15. | மாலைத் தொகுப்பு | 15—00 |
| 16. | நாராயண சதகம் | 6—00 |
| 17. | நளச்சக்ரவர்த்தி கதை | 15—00 |
| 18. | பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் | 10—00 |
| 19. | பிரபோத சந்திரோதயம் | 85—00 |
| 20. | வண்ணத்திரட்டு | 15—00 |

# காஞ்சிமன்னன் அம்மானை

## காப்பு

வாஞ்சையுடன் பூவுலகில் மன்னுபுல வோர்கள்மகிழ்
காஞ்சிய னம்மானைக்குக் காப்பதாய்—தோஞ்சதயிர்
நெய் பால் மிகவருந்து நேயன் மருகனைந்து
கைவா ரணமுகனே காப்பு.

## கடவுள் வாழ்த்து

சீரார் கமலத் திருமாது சேர்புயத்தான்
தாராரு மார்பன் தமிழ்க்காஞ்சி ம னவன்தான்
காரார் குழலணங்கைக் கலியாணஞ் செய்தகதை
வாராழி சூழுலகில் வண்மையுடன் பாடுதற்கு
வீரா கரனை விநாயகனைப் போற்றுகிறேன் [1]
எந்தன் வினை தீர்க்கும் ஈசுரனார் தான்பயந்த
கந்த னறுமுகனைக் காப்பாக வைத்தேனே
மைவிழியார் தன்னை நல்ல மாயோன் மருமகளை
மொய்குழலை இக்கதைக்கு முன்பாக வைத்தேனே.

## அவையடக்கம்

கற்றதமிழ் வெற்றிக் கலைவாணர் தங்கள் முன்னே
நற்றமிழைப் பாடவென்று நான்தேர்ந் துரைப்பதுவே
(கொற்ற) விழுதாலின் கனியின் விதைபோன்ற
சிற்றெறும்பு வெள்ளத் திரைகடலை யுண்டதொக்கும்
செஞ்சொற் புலவர் இணையடியைக் கைதொழுது
நெஞ்சத்தி னுள்ளே நினைந்திருப்பேன் நேசமுடன்
செந்திருவே வாழுமியற் [2] றென்குரகை கற்கதிபன்
சுந்திரவே ளாகமதன் [3] சுமுகன் பெரியவன்காண்
கந்துலவுங் காஞ்சிப் பெருமாள் கதைநெறியை
இந்துலகிற் பாடினே னெல்லோருங் கேளுமென்றே
மேதினிக்கே யான்பாட மேயதமிழ்க் குற்றமெல்லாம்
பூதலத்தோ ரெல்லோரும் பொறுத்தருளும் புண்ணியரே.

---

1. இதற்கு எதுகை வரி இல்லை. 2. & 3 — ?

கடிய புலவர்களின் காலிற் சிறந்திருக்கும்
பொடியைத்தா னென்னுடைய பூந்தலைமேல் வைத்தேனே
எண்ணு மெழுத்தும் இலக்கணத்தின் சீரழகும்
பண்ணு மறியாமற் பாடுகிறேன் கேளுமெல்லாம்

## கதைச் சுருக்கம்

சீராருந் தென்மதுரைத் தென்னவர்கோ மான்பயின்ற
பேரார் பெரியபுகழ் பெண்கொடியார் தம்முடைய
காரார் குழலணங்கைக் கலியாணஞ் செய்தகதை
வாராழி சூழுலகில் வண்மையுடன் பாடுகிறேன்.

## பெண்கொடியார் வருணனை

காரார் குழலழகுங் கன்னிக் கழுத்தழகும்
போரா ரயில்விழியும் புருவச் சிலையழகும்
வாரா ரிளந்தனமும் வஞ்சி யிடையழகும்
துதிசெயிள மதிபோல் துய்ய நுதலழகும்
உந்திச் சுழியும் உரோமத் தொழுக்கழகும்
ஆர மணிமார்போ டமைந்த வயிற்றழகும்
காந்தள் மலர்போல் கையின் விரலழகும்
குமிழமலர் தனையொத்த கூரிய மூக்கழகும்
கோலவரிச் சிற்றாடை கொய்துடுத்த ஒப்பனையும்
முத்துநிரை பல்லும் முருக்கிதழ்போல் செவ்வாயும்
வள்ளைக் கொடியதுபோல் வடிந்த குழைக்காதும்
கரும்பைபோ லொத்தமனங் கட்டழகுங் கண்டதென்றால்
இரும்பைபோ லொத்த மனம் இற்றுவிடுங் கொற்றவனே

## காஞ்சி மன்னனை மணஞ் செய்துகொள்ளச் சொல்லல்

நாமெது சொல்லுவோம் நல்ல பெருமாளே
காமுகரைச் சிங்கி பயிற்றுகின்ற காரிழைதான்
மண்ணோர் புகழும்மன்னன் மாறன் திருமகளைக்
கலியாணஞ் செய்துகொள்ளுங் காஞ்சிப் பெருமாளே

## மணம்பேச அனுப்பல்

என்றுசொல்லிச் சென்றொருவ னுரைத்த மொழிகேட்டு
வென்றுபுகழ்க் காஞ்சியனும் விரும்பி மதிமயங்கி
பெண்பேச வேண்டுமென்றே பிராமணனைப் போகவிட்டான்

## மதுரை அரண்மனைவாசல் அடைதல்

சென்றுமறை வேதியனுந் தென்மதுரை யுட்புகுந்து
நீண்ட பெருந்தெருவும் நித்தக் கடைத்தெருவும்
கூண்ட குறுந்தெருவுங் கோபுரத்தேர் வீதிகளும்
வேண்டுந் தெருக்களெல்லாம் விட்டகன்று பார்ப்பானும்
பாண்டியனார் கோயிற் படிவாசல் தன்னில்வந்தான்

## வாசலவனுடன் உரையாடல்

வந்துநின்ற பார்ப்பானை வாசலவன் தான்கண்டு
எந்தஊ ராளப்பா உன்பெயரென் பார்ப்பானே ?
நல்லபுகழ்க் காஞ்சி நகர்சானு மென்னூரே
பல்லோர் புகழுமியற் பாண்டியனைக் காணவந்தேன்
கோமானைக் காணவந்த குண்டலப்பார்ப் பான்தனையும்
பூவாச லைத்திறந்து போகவிட்டான் வாசலவன்

## மன்னனிடம் செய்தி கூறுதல்

கற்றதமிழ் வேதியனுங் காண வரும்வழிக்கே
வெற்றிமணி மண்டபத்தே வீற்றிருந்தான் கோமானும்
இருந்தானே கோமா னெழுதரிய மண்டபத்தே
பெருந்தானை வீரருடன் புலவர்கலை வாணர்களும்
சேனைத் தலைவருடன் செம்பொற்கூ டத்திருந்தான்
இருந்த சமயத்தே இயலுடைய பார்ப்பானும்
கையில் கமண்டலமும் கைக்குடையும் முக்கோலும்
மெய்யிற் புரிநூலும் மெய்ஞ்ஞானப் புத்தகமும்
செய்யத் திருநாமத் தீர்த்தக் குடுமியுமாய்
உய்யும் வகைநின்ற உயர்மறையோ னைப்பார்த்து
செய்யபுகழ்க் கோமானும் செப்புவாய் போந்ததென்றான்.
பைய அவர்செவியில் பகர்ந்தானே வேதியனும்
பகர்ந்தமொழி வாசகத்தின் பண்பெல்லாந் தான்கேட்டு

## பாண்டியன் விடை

அப்போது கோமா னழன்று விழிசிவந்து
பிராமணனைக் கொன்றால் பிரமகத்தி சூழுமென்றும்
கட்டி யடித்தாலுங் கன்மம் விளையுமென்றும்
வேதியனைக் காட்டி வெகுண்டுரைத்தான் கோமானும்

தண்ணினார் வேதியனாந் தக்கதொரு பார்ப்பானை
கண்கள் இரண்டினையும் கடுகப் பறித்தெறிவேன்

## ஊர்திரும்பி காஞ்சியனுக்கு செய்தி சொல்லல்

அந்த வுரைகேட்டு அறிவுடைய பார்ப்பானும்
விந்தைசெறி திண்புயத்தான் வேந்தனையும் விட்டகன்று
சொக்கரையுந் தான்தொழுது சோதிமணி வாசல்விட்டு
வைகை தனைக்கடந்து வடகரைமேல் தானேறி
காஞ்சி புரத்தில்வந்து காவலன் முன்புசென்று
கோமா னுரைத்ததெல்லாங் கொற்றவற்குச் சாற்றினனே.

## காஞ்சியன் கூற்றும் புறப்பாடும்

காஞ்சிபுர மாளுமன்னன் கண்விழிகள் தான் சிவந்து
ஆண்டியாய்ச் சென்று அவளை மணம்புணர்வேன்
வேண்டுந் திரவியங்கள் விரையச் சொரிந்தெடுத்து
மாராப்புக் குள்ளே மடிப்புடவை தன்னைவைத்து
ஆரம் பலபூண்டு ஆபரணம் மேலணிந்து
பட்டுடுத்துக் கொட்டைகட்டிப் பாரவடி வாளெடுத்து
மட்டலர்ந்த தோள்மீதே மாராப்புக் கட்டியபின்
போனாரே காஞ்சியனார் [1]பூகா ரறியாமல்
ஆறு மருவிகளும் அன்பாக வேகடந்து
அங்கங்கே சென்றோர் உருதரித்தார் காஞ்சியனார்
[2]கென்றுவிடு தீவிட்டுத் தேசமெல்லாந் தான்கடந்து
மன்றலருஞ் சோலை மதுரா புரிபுகுந்து
கொற்றமணி வாசலையுங் கோட்டையதை யுங்கடந்து
நடந்தார் நெடுந்தெருவே நல்லபுகழ்க் காஞ்சியனார்

## மதுரையில் தட்டானின் சந்திப்பு

தட்டானைக் கண்டு தரித்துநின்றார் காஞ்சியனார்
கண்ட பொழுதே கருத்துடைய தட்டானும்
எங்கிருந்து வந்தீர் இராசாவைப் போன்றவரே
செப்பமுடன் கேட்டருளாய் தென்மதுரைத் தட்டானே
ஒப்பமுடன் சொல்வேனா னுடன்பிறப்பு நீ எனக்கு
வாழ நிதிதருவேன் வளநாடு நான்தருவேன்
ஊழிபல வுண்டிருக்க' உடைமை பலதருவேன்

---

1. பூலத்தார் என்னும் பொருளில் வந்த பூதார் போலும். 2 — ?

அரவணைக்க வென்று ஆசாரி தான்மகிழ
கோழைப் படாமல் கொடுத்தான் திரவியத்தை
திரவியத்தை வாங்கியபின் சீர்மையுள்ள தட்டானும்
வாருமென்று தட்டாமல் வருந்தி யழைத்தானே.
தட்டான் மனைதனிலே தான்சென்றார் காஞ்சியனார்

## தட்டானின் மனைவிக்கு காஞ்சிமன்னனை அறிமுகம் செய்தல்

தட்டான் மனைவியவள் தான்கண்டு மன்னவனை
ஆர்காணுஞ் சொல்லும் அறியவெனக் குரையுமென
பெண்கொடியே கேட்டருள்வாய் பெருவேந்த னூர்பதியும்
அம்பனைய கண்ணாளே அழைச்சடங்கக் கேட்டருளாய்
வம்பனென்று சொல்லாதே வடகாஞ்சி மன்னவன்காண் !
என்றுசொல்லித் தட்டான் இராசாவைத் தான்போற்றி

## அந்தணர் மனையில் காஞ்சியனுக்கு உணவிடுதல்

ஆதி மறையோர் அகத்தே செலவிடுத்து
என்தம்பி காணும் இவற்குயொரு சந்தியுண்ண
அசனங் கொடுமெனவே அரிசிகறி தான்கொடுத்தான்.
அகத்தே பிராமணனும் அசனங் கொடுத்ததற்பின்

## காஞ்சிமன்னன் ஓய்வுகொள்ளல்

தாராருங் காஞ்சியனார் தட்டான் மனையில்வந்தார்
காரார் சிலைக்கே கதிரோனுஞ் சென்றடைந்தான்
தட்டானார் பொன்சமைக்குஞ் சந்தனப்பொற் கூடத்தில்
கட்டில்மேல் நல்லதொரு கம்பளியுந் தான்விரித்து
மெத்தை யணைபோட்டு மேலொலியல் தான்விரித்து
சாந்தும் புனுகும்நல்ல சந்தனமும் மேல்தெளித்து
பாங்குடனே காஞ்சியனார் பள்ளிகொண்டார் மெல்லணைமேல்

## காஞ்சியின் கருத்தை வெளியிடல்

அந்தநாள் போயங் கடுத்தநாள் ஆனதற்பின்
தட்டானை நோக்கிநல்ல தார்வேந்தன் என்சொல்வான்
கோமான் மகளார் குலக்கொடியை நாடிவந்தேன்
ஆசைக் கலவி யணங்கையென் னாரமுதை
பூசற் கலவி பொருந்துவிப்பை யாமாகில்
தேசத்திற் பாதி திரவியமும் நான்தருவேன்.

## தட்டானின் பதில்

மன்னர்பெரு மான்மொழிய வாண்மையுடன் தட்டானும்
செஞ்சொல் மொழியாளைச் சேர்விப்பேன் மன்னவனே
பஞ்சாகு மெல்லணைமேல் பாங்குடனே சேர்விப்பேன்
அஞ்சாதே வேந்தே யணங்கையுனக் காக்குவிப்பேன்
என்றுசொல்லித் தட்டான் இராசாவைத் தான்போற்றி

## பாண்டியனிடம் காஞ்சியனை அறிமுகம் செய்து வைத்தல்

கோமான் திருமுன்பே கொண்டுசென்றான் தட்டானும்
தட்டானைப் பார்த்துநல்ல தார்வேந்த னேதுசொல்வான்
ஆரென்று கேட்டருளாய் என்னுடனே வந்தவன்தான்
ஆரென்று சொல்லாய் அறிவுடைய தட்டானே
அறியீரோ இவனைஎங்க ளய்யருள்ள நாளையிலே
தெருவிலே ஓடித் திரிவான் விடலையுமாய்
வெள்ளி யுருக்க விரகறிந்தா னில்லையென்று
தள்ளி யடித்துச் சினந்துவிட்டார் எங்களய்யா
அன்றே புறப்பட்டு யாரு மறியாமல்
போனான் பரதேசம் பூம்புகார்ப் பட்டணத்தே
பட்டணத்தே சென்று பலதெருவெல் லாந்திரிந்து
தட்டாராய் அங்கிருக்குஞ் சாதியார் தம்மருகே
சேர்ந்து வளர்ந்தான்காண் செல்வக் குடிதனிலே
அப்பெரிய தட்டான் அடித்துச் சினவாமல்
பிள்ளையாய்த் தான்வளர்த்துப் பேணி யரவணைத்து
பொன்சமைக்கும் பாடமெல்லாம் புத்தியினா லேபயிற்றி
இராசபணி யொழிய எளியபணி தான்சமையான்
எங்குந் திரிந்து இரவுவந்தான் யென்தம்பி

## பாண்டியன் கூற்றும் விடையும்

அந்த மொழிகேட்டு அறிவுடைய கோமானும்
கந்துவரும் பூஞ்சோலைக் காஞ்சிப் பெருமாளை
சிந்தை குளிரத் திறமாகக் கண்டதற்பின்
உள்ள முருகி உவமையற்ற கோமானும்
ஆணுக்கா ணாசைப் படுமென்று சொன்னதெல்லாம்
நாமொக்க நம்மளவில் கண்டோமே யென்றுசொல்லி
தெய்வமோ மாறவேள் செந்தில் அறுமுகனோ
மானிடத்தி லிப்படித்தான் மறுவற்ற நல்வடிவு

கண்டிலோ மென்றுக் கருத்துள்ளே தானினைந்து
திண்டிறல்சேர் வேந்தன் தென்மதுரைக் கோமானும்
உன்னுடைய தம்பிநல்ல ஒச்சமுள்ள தட்டான்காண்
எந்தன் மகளாற் கிசைந்தபணி தான்சமைக்க
விரையப்போ மென்று விடைகொடுத்தான் கோமானும்

## காஞ்சியன் மன்னன்மகள் மாளிகையடைதல்

கோமா னுடனே குளிரவிடை தான்வாங்கி
போனானே தட்டானும் பொற்கொடியாள் மாளிகையில்
மாசிலாப் பிள்ளை நறுநுதலாள் மாளிகையில்
வாசலவன் தானும் மறித்தானே தட்டானை
மறிக்கத்தா னில்லாமல் மாற்றமெல்லாம் பேசுகிறாய்
முறிக்கத் தழைக்க முருங்கையோ என்தலைதான்
கட்டிச் சமைந்துவந்துன் கையருகே நின்றவன்தான்
செட்டியோ சொல்லாய் திறமுடைய தட்டானே !
சத்தியமே சொல்லுகிறேன் தாயார் சினந்ததனால்
புத்திக் கலங்கப்[1] புருவறியா நாளையிலே
போனான் பரதேசம் பொழியுமலை நாடுதனில்
கொல்லமொடு கொச்சிநல்ல கோழிக்கோ டானதெல்லாம்
தில்லை நகரெங்குந் திரிந்துவந்தா னென்தம்பி
வம்புசொல்லா னென்று வழிவிட்டான் வாசலவன்
வாசல் தனைக்கடந்து வண்மையுள்ள தட்டானும்
கோமான் மகளார் குலக்கொடியாள் மாளிகையில்

## பொற்கொடியார் மாளிகையில் தாதியர்கள் கூற்று

தட்டானைக் கண்டளவே தாதியர்க ளென்னசொல்வார்
நீதியுள்ள தட்டானே நெறிகேட னாயிருந்தாய்
மற்றொருவ ரெங்கள் மனைதனிலும் வாரார்காண்
குற்றமல்லோ செய்தாயுன் கூடவந்தார் யாரென்றார்
ஆரென்று சொன்னீர் அடிமையல்லோ உங்கட்கு
வயிரக் கடுக்கன் வகைவகையே தான் சமைக்க
தட்டார் குலமொழியத் தையல்நல்லார் மாளிகையில்
மற்றொருவ ரிங்கே வருவாரோ வாணுதலே
பயிருமொரு வேலியும்போல் பார்த்திருக்குங் காவலிலே
உயிரும் படைத்திங் கொருவர் வருவாரோ

---

1. புருவை — இளமை

மருவாருந் தென்கூடல் மாமதுரைத் தட்டானே
உன்னருகே இருப்பவர்தான் யாரோ வெனக்குரையீர்

## தட்டானின் மாற்றமும் அறிமுகமும்

தென்னவன் திருமகளே தெய்விகமே கேட்டருளாய்
பொன்னென்று தட்டப் புருவறியா னாளையிலே
போனான் பரதேசம் பூர்புகார்ப் பட்டணத்தே
பட்டணத்தே சென்று பலதெருவெல் லாந்திரிந்து
தட்டாராய் அங்கிருக்குஞ் சாதியார் தம்மருகே
சேர்ந்து வளர்ந்தான்காண் செல்வக் குடிதனிலே
அப்பெரிய தட்டார் அடித்துச் சினவாமல்
பிள்ளையாய்த் தான்வளர்த்துப் பேணி அரவணைத்து
பொன்சமைக்கும் பாடமெல்லாம் புத்தியினா லேபயிற்றி
இராசபணி யொழிய எளியபணி தான்சமையான்
எங்குந் திரிந்து இரவுவந்தா னென்தம்பி
ஆரம் சமைப்பான் அழகுபணி தான்சமைப்பான்
பாரமுடன் நல்ல பதக்கங்கள் தான் சமைப்பான்
அப்படியே பொன்தான் அழகாய்ச் சமைப்பானாய்

## பெண் கொடியாள் நகைசெய்யப் பணித்தல்

கற்பதித்த கொக்குமுகத் தாரஞ் சமையுமென்று
கட்டிப்பொன் வெட்டிக் கனங்குழலாள் கைக்கொடுத்தாள்.

## அணிசெய்யத் தொடங்குதல்

பொன்னை நிறுத்துப் புதுமையுள்ள தட்டானும்
மாற்றுமுறை யுந்தெரிந்து மச்சம்வெட்டிக் கொண்டதற்பின்
புத்தோடு தன்னில்நல்ல புத்துமியுந் தான்வாங்கி
கரியும் நெருப்புமிட்டுக் கருப்பிடித்துப் பொன்னைவைத்து
ஊதக் குழலும் உலைக்குறடுந் தான்கொடுத்து
பற்றுக் குறடும் படிக்கல்லுந் தராசுடனே
நடுதறியும் சுத்தியலும் நற்காரம் பொன்மெழுகும்
எல்லா மெடுத்து இயல்புடனே தான்கொடுத்து
உடன்பிறந்த தம்பிகையில் ஊதுமென்றே தான்கொடுத்தாள்.
குழல்வாங்கிக் கைப்பிடித்து கூட்டி உலைகுறட்டால்
ஊதினார் காஞ்சியனார் உலையிற் புகையெழவே
புனலினக் கண்ணிரெண்டும் புனலாய் ஒழுகிடவே

கண்ணைப் பிசைந்தழன்று காஞ்சியனார் தான்குழைந்தார்.
சிந்தினார் மூக்கைத் திருக்கண் சிவந்திடவே
நாமறியா வாணிபந்தான் நஞ்சோடே யொக்குமென்று
நாழிகையில் தான்பெரிய நல்லதொரு[1] நீதிகண்டு
வெளியிலே ஓடிவந்து வீதியிலே நின்றாரே

## பெண்கொடியாள் காஞ்சியன்மேல் காதல் கொள்ளல்

வீதியிலே நிற்குமந்த வேந்தன் வடிவுதன்னை
கண்டாளே வேந்தன்மகள் காதலித்தே பெண்கொடியாள்
கண்ட பொழுதே கசிந்துருகி உள்ளமெல்லாம்
தட்டானோ நல்லதொரு சாதி இராசாவோ
எட்டாப் பழமா யிருந்தானோ வங்கிஷத்தில்
தென்றல் தேரேறிச் சிலைவளைக்கு மன்மதனோ
இலங்கை யழித்து இராவணனைக் கொன்றவனோ
அமணர் தமைக்கழுவில் ஏற்றி வைத்த ஐயனோ
[2]மகாவிருடி கூடல் மடந்தையரைக் கற்பழித்து
மானிடத்தைக் கற்பழிக்க மாய்கையால் வந்தானோ
பட்டாங்கு சொல்லவொரு பாங்கியரைக் காணேனே
திட்டெனவே சொல்லவொரு சேடியரைக் காணேனே
எந்தன் துயர்சொல்ல ஒருவரையுங் காணேனே
மன்னர்திரு முன்சென்றால் மரபுக் கிடரலவோ
என்று புலம்பி இருக்குந் தருவாயில்
என்னைமா விட்டுவைத்து இக்கொடுமை தான்கொடுத்த
மன்னன்மா விட்ட மருந்தறிவா ரில்லையல்லோ
மடலை யெடுத்தாலென் மரபுக் கிடமலவே
உள்ளத்தின் நோயங் கொருவற் குரையாமல்
விள்ளாம லுள்ளே விரும்பி வருந்தினளே
புல்கி யெனது புணர்முலைகள் தானெருங்க
அல்குல் தடத்தில் அணையானோ ஆகமுற
என்றுசொல்லித் தம்முள் எரிந்தெரிந்து தான்வருந்தி
ஊண்மறந்து வாடியுயிர் போகாப் பிணமானாள்

## காதல் மயக்கமும் தாதியர் கவனிப்பும்

பேச்சு முறைமறந்து பேதை இருப்பளவில்
தாதியர்கள் எல்லாருந் தங்களிலே ஓடிவந்து

---

1. மேனிகண்ட என்றுள்ளது. 2. (இருடி வேடந்தாங்கி தாருகாவனத்து ரிஷி பத்தினிகளின் கற்பையழித்த பின் மானிட மடந்தையைக் கற்பழிக்க வந்த பிட்சாடனர்.)

ஆயன் குறையோ அருகிருந்தார் குற்றமதோ
ஏதுகுறை யென்று யாமறிய மாட்டிலமே
பேயோ பிடித்ததுதான் பெண்கொடியாற் கென்றுசொல்லி
காசுபணம் நேந்திடுவார் கப்பணங்கள் கட்டிடுவார்
ஆவென்று சொல்லி யழுதார் வருவரோ
சென்று மடவார்கள் திருமுகத்தைக் கண்டுசொல்வார்
மாயப்பேய் காணு மயக்குது வென்றுசொல்லி

## தட்டான் வெண்ணீற்றால் வினைதீர்த்தல்

நல்லதொரு வெண்ணீற்றை நாழியிலே தான் வாங்கி
வட்டப் பெருஞ்சுளகை வாங்கினார் தட்டானும்
துய்யதிரு வெண்ணீற்றைச் சுளகில் பரப்பிவைத்து
எந்திரங்கள் தன்னை எழுதி வரைந்தாற்போல்
பெண்கேட்க வேணுமென்று பிராமணனை விட்டதுவும்
கோமான் மறுத்துக் கொடோமென்று சொன்னதுவும்
அந்த மொழிகேட்டு அறிவுடைய காஞ்சியனார்
கொந்தார் குழலணங்கைக் கொள்ளவென்று வந்தவர்காண்
அம்மே யுமக்கு அம்சடக்கஞ் சொல்லுகிறேன்.
உம்மை யொளிகளவா யுற்றுசெய்ய வந்தார்காண்
நிறைந்ததிரு வெண்ணீற்றை நிரைநிரையே பத்திபட
வரைந்தெழுதி வைத்ததெல்லாம் வாசித்துக் கண்டுகொள்ளும்
ஒன்றிகு நாளையிலே உமக்குமண வாளனுமாய்
மங்காமல் நானும்மணஞ் செய்விப்பேன் வாணுதலே
விரையநல்ல குத்து விளக்கொன்று தான்சமைத்து
அரசர் பெருமானை அறையினுள்ளே தானொளித்து
அப்பெரிய காஞ்சி வளநாடன் தன்னையுந்தான்
செம்பவளத் தோள்மீதே சேர்விப்பேன் தேன்மொழியே!
பட்டாங்கை யெல்லாம் படிப்படியே தானெழுதி
தட்டானார் தான்கொடுக்கத் தையல் துயர்தீர்ந்தாள்
உற்றதிரு வெண்ணீற்றை யோதித் தியானித்து
நெற்றியிலே சாற்றுமென்று நேரிழையார் கைக்கொடுத்தார்.
கொடுத்ததிரு வெண்ணீற்றைக் கொம்பனையார் தான்வாங்கி
பிள்ளை நுதலிலே பெருக்கவே பூசினராம்

## காஞ்சியனும் பெண்கொடியும் இருக்க இடம்சமைத்தல்

இட்டதிரு வெண்ணீற்றை இலாடத்திற் கண்டதற்பின்
தட்டானார் தான்திரும்பித் தார்வேந்தன் தன்னுடனே

திட்டெனவே தான்விரையச் சென்றார் மனைதனிலே
குத்து மணிவிளக்குக் குறைவறவே தான்சமைக்க
சந்தனத்தூண் தன்னைச் சதிராகத் தானிறுத்தி
தூணை நிறுத்தி தொடிவளை தான்போட்டு
கொம்பைக் கடைந்துநன்றாய் சேர்த்தா ரிடையிடையே
செப்புத் தகட்டுடனே செம்பொன் தகடுகளும்
கொண்டை படுத்துக் கொங்கை வளைபரப்பி
சுத்தெங்குந் தட்டிச் சூழ அறைசமைத்து
இருக்க அறையும் இடம்பெறவே தான்சமைத்து
ஒருவருங் காணாதே ஒளித்தடக்க மாகநன்றாய்
இருவற் கிருக்க இடமுஞ் சமைத்தானே
வண்ணக் கதவுடனே வாசல் வகுத்தானே
பூவால் மலர்வகுத்துப் பொன்னாய் நிறைத்ததற்பின்
பூட்டுந் திறப்புமொரு பூதா ரறியாமல்
மூட்டிப் பொருத்தி முடிமேல் தளம்வைத்து

## அறையில் எழுதப்பட்ட ஓவிய வருணனை

முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்களும்
செப்பத் துடனே திருந்த வெழுதினனே
காளி வயிரவனும் கண்ணனார் தம்முடனே
ஆழிதனிற் றுயிலு மச்சுதனைத் தானெழுதி
கந்த னுருவெழுதிக் கணபதிதன் னொப்பெழுதி
தேவாதி தேவன் திருவுருவ முள்ளதெல்லாம்
வேண்டும் படியே வியனாகத் தானெழுதி
இலங்குஞ் சுடர்விளக்கில் எல்லோரை யும்எழுதி
விலங்கின் குலங்கள் தன்னை விரைய வெழுதினனே
சிங்க முடனே சிறுபுலியுந் தானெழுதி
ஆனை யுடனே ஆளியுந் தானெழுதி
ஒக்கநல் லாளி உறுப்பு மெழுதினனே
மிக்கப் புரவிகளும் மேலாளுந் தானெழுதி
உள்ளியமுந் தானெழுதி ஒதிபமுந் தானெழுதி
கானகத்தில் வாழுங் கடமா விசையெழுதி
மந்தி யினங்களும் மாவன்றி தானெழுதி
காட்டெருமைக் கன்றுங் கடமாவுந் தானெழுதி
புல்வாய் கலையுடனே புள்ளிமான் தானெழுதி
கடிய மரையுடனே காரானைத் தானெழுதி

நாவியுடன் நாரி நாதம் பலவெழுதி
சென்னாய் மரனாய் சிலனாய்கள் தானெழுதி
வாயத்த கிளியுடனே வல்வாய்கள் தானெழுதி
மீண்டும் பறவையினம் மெத்த வெழுதியபின்
காடா வெழுதிநல்ல காக்கையுள்ளான் தானெழுதி
தோகை மயிலெழுதித் துணைப்பேடுந் தானெழுதி
அன்ன மெழுதிநல்ல யானையிறாஞ் சியெழுதி
வாரணங்கள் தானெழுதி வனக்கோழி தானெழுதி
சித்திரப் புள்ளெழுதிச் சென்றகளந் தானெழுதி
கூகையுடன் நல்ல குன்றாடும் மயிலெழுதி
கொக்குங் குருவியுடன் கோலவண்டான் தானெழுதி
முள்வாய் குரலெழுதி முதுகடலில் புள்ளெழுதி
பாரக் கழுகெழுதிப் பருந்தினங்கள் தானெழுதி
ஆலா வுடனே அருங்காகந் தானெழுதி
அங்கங்கே போய்விளிக்கும் ஆள்காட்டி தானெழுதி
கானச்சே வல்லழுதிக் கவுதாரி தானெழுதி
கொண்டக் குருவியுடன் குலக்குருவி தானெழுதி
செம்போத் துடனே சிறுபுலிகள் தானெழுதி
பச்சைப் புறாவெழுதி பனங்காடை தானெழுதி
ஊர்க்குருவி தானெழுதி உள்ளமடை யானெழுதி
அன்ன மெழுதி அருஞ்சேடை தானெழுதி
மஞ்சப் புறாவும் மயில்புறாவுந் தானெழுதி
மணிப்புறா தானெழுதி மரங்கொத்தி யும்மெழுதி
பச்சைப் புறாவெழுதி பன்னிசிட்டுந் தானெழுதி
செட்டிப் புறாவும் செம்பகத்தி தானெழுதி
நெற்குருவி தன்னுடனே [1] வேல்தச்சன் தானெழுதி
கழுகுழுப்பை தன்னுடனே கவுதாரி தானெழுதி
பஞ்சிலிவெட் டானுடனே பவளக்கால் தானெழுதி
மரங்கொத்தி தங்கணவன் மயில்கூவை தானெழுதி
பாலாங் குருவியுடன் பழுஞ்செட்டான் தானெழுதி
கலக்கிளி தன்னுடனே கருங்குறுட்டி தானெழுதி
குரங்குங் குருவியுடன் சுளிமடையான் தானெழுதி
குக்குறுவன் தன்னுடனே குப்பைகெல்லி தானெழுதி
கருங்குருவி தன்னுடனே கலைக்கோட்டான் தானெழுதி
மாடை மடையான் மனுக்குருவி தானெழுதி
அரசருடன் நல்ல அமைச்சரையுந் தானெழுதி

---

1. தட்டான் பூச்சி போலும்

தண்டு சிவியாரும் சாமரங்க ளும்மெழுதி
சேவிக்கும் சேவுகரும் சேர்ந்தபடை தானெழுதி
இங்கிங்கே பாக்கியங்க ளெல்லா மெழுதினனே
மத்தாளி வீரமுட்டி மல்லாரி கைத்தாளம்
வித்தாளம் சங்கூதும் வீணை பலவெழுதி
தம்பட்டம் நல்ல தவிலும் மணிமுரசும்
பேரிகை துந்துமியும் பெருத்ததிமி ரம்மெழுதி
கின்னாரம் வீணை கையாடப் பாணர்களும்
கூத்தருட னாசாரிக் கொம்பு மெழுதினனே
இப்படியே சித்திரங்க ளெல்லா மெழுதினனே
செப்பமுள்ள தட்டானும் சித்திரங்கள் தானெழுதி

## காஞ்சியனை அறையில் ஒளித்து வைத்தல்

எழுதி முடிந்ததற்பின் இயம் புடைய தட்டானும்
பழுதில்லாக் காஞ்சியனைப் பைய வரவழைத்து
சருவங் கொடுத்துச் சடுதியிலே தான்சமைக்க
அரிசிக் கறியும் அடைவுடனே தான்கொடுத்தான்
கல்லோடும் நெல்லோடும் காஞ்சியனார் வேகவைத்தார்
வேகவைத்த சோறும் வியன்கறிகள் உள்ளதெல்லாம்
விளக்கினுள்ளே சேர விரைய வெடுத்துவைத்தார்
தண்ணீ ருடனே தளிகையு மொக்கவைத்தார்
அரிபிளகும் வெற்றிலையு மடைவுடனே தான்கொடுத்தார்
பத்திரமும் வாளும் பரிவட்டந் தன்னைவைத்தான்
பொருந்த விளக்கினுள்ளே போயிருந்தார் காஞ்சியனார்
காஞ்சிப் பெருமாள் கருத்தா யிருந்ததற்பின்
வாசல் தனையடைந்து வலித்துநல்ல தாழ்பூட்டி
பூட்டுந் திறப்புமொரு பூதா ரறியாமல்
தேட்ட முடனே தெளிந்திருந்தார் காஞ்சியனார்

## மணிவிளக்குடன் ஊர்வலம்

உலகந் தனைக்கூட்டி ஓடிவந்தான் தட்டானும்
இலங்கு மணிவிளக்கை ஏந்திச் சகடுதன்னில்
குத்து மணிவிளக்கை கொற்றவன்முன் கொண்டுசெல்ல
தம்பட்ட மல்லரி சச்சரிக ளுள்ளதெல்லாம்
எங்கு மதி இசைந்ததெரு வீதியெல்லாம்
கொம்பு குழலூதக் குவளைசின்னந் தானூத
வெடிகள் அதிர வியன்குழல்கள் தானூத

வடத்தைப் பிடித்து வலித்தானே தட்டானும்
ஓடிற்றே நல்ல ஒளிவிளக்கு வீதியிலே
வீதியிலே கண்டவர்கள் விளக்கைப்பார்த் தென்செல்வார்
தேர்காணு மென்பாரும் திருக்கரும்பை யென்பாரும்
அம்பனைய வேல்நடுங்க ஆயிழையா ரெல்லோரும்
"கொம்பனை யார்குத்து விளக்குக்கா ணென்பாரும்"
மாதுநல்லா ரெல்லோரும் மறித்துவைத் துப்பாரும்
பக்தியுள்ளோர் கூடப் பதியிலுள்ளோர் கொண்டாட

## புது அறையை யாவரும் கண்டு வியத்தல்

குத்து மணிவிளக்கைக் கொற்றவன்முன் கொண்டுசெல்ல
கொண்டுசென்ற அப்பொழுதே சோமா னமைச்சரெல்லாம்
சென்றுசென்று கொண்டாடிச் சித்திரங்கள் பார்ப்பாரும்
மந்திரிகள் தன்னுடனே மன்னவனுங் கொண்டாடி
தட்டி யடித்ததோ தகடா யிணைத்ததோ
கட்டிப்பொன் தானுருக்கிக் கருப்பிடித்து வார்த்ததுவோ

## தட்டானை வியந்துகேட்க உரைத்தது

சுற்றமுள்ள தட்டானே சொல்லுமெனக் கேட்டார்
மூதாக்கள் மாதாக்கள் முன்தேடி வைத்தமுதல்
நானடியேன் வைத்திருந்து நாடாளப் போறேனோ
வித்தார மாக விளக்கொன்று தானமைத்து
கர்த்தாவே கேளும் கருப்பிடித்து வார்த்ததுவே

## பாண்டியன் பரிசு

என்றுசொல்லித் தட்டா னுரைத்த மொழிகேட்டு
மட்டறவே யுண்டிருக்க வாழ்நிதியுந் தான்கொடுத்தான்

## பாண்டியன் கூற்று

இந்த மணிவிளக்கை எந்தன் மகளாற்கு
கொண்டுபோய் நீர்தான் கொடுமென்றான் கொற்றவனும்

## தட்டான் மணிவிளக்கைப் பெண்கொடியார் மாளிகைக்குக் கொண்டு செல்லல்

கொம்பு தவில்முரசு கூடப் பெரும்படையும்
எண்புவியுங் கொண்டாட இருமருங்குஞ் சேவிக்க
தண்டு பரிசேரத் தளத்தோ டணிந்துவர

மாதுநல்லார் வாசலிலே மணிவிளக்கைக் கொண்டுசென்றார்.
கோமான் மகளார் குலக்கொடியார் தாதியரும்
நன்றாகச் சேவித்தார் நல்லநல்ல பாங்கியரும்
கண்டாளே தாதியர்கள் கருணைவிழி தான்குளிர
புளகித்த கொங்கை புணர்முலைக்கு வாய்த்தநல்ல
அழகாய் மணிவிளக்கை அகத்தினுள்ளே வையுமென்றார்
இரவிதனை விட்டு யிறக்கி மணிவிளக்கை
மாளிகையி னுள்ளே மணிவிளக்கை வையுமென்றார்.
ஆள்கூட்டி மெல்ல அரியோகரி யோவெனவே
தாளாம லேஎடுத்து தாங்கிவைத்தார் மாளிகையில்
வைத்த பொழுதேதான் வாழ்வேந்தன் சேனையெல்லாம்
கொற்றவரும் வேம்பணிந்த கோமான்முன் சென்றதுவே
அப்போது வெய்யோன் அவரறையில் தான்புகுந்தான்.

## ஒளிவிளக்கேற்றல்

சாந்தொழுக மென்முலையார் தாதியர்கள் எல்லோரும்
குத்து மணிவிளக்கில் கோதிநல்ல நெய்வார்த்து
திரியை முறுக்கியிட்டுத் தீபங் கொளுத்தினரே

## பெண்கொடியார் மாளிகையினுட் புகுதல்

சேயிழையார் தானுமங்கே திருமஞ் சனமாடி
கத்தூரி யுங்கதம்ப களபங்கள் தான்பூசி
சேனைக்கால் வைத்துநல்ல செம்பொன் தளிகை வைத்து
ஆயிழையார் தானு மாசனம் பொலிந்ததற்பின்
அடைக்காயும் வெற்றிலையும் ஆயிழைக்குத் தான்கொடுத்து
நற்கால மாளிகையில் நல்லமெத்தை தான்விரித்து
துவனி யதின்பேரில் துய்யபட்டு தான்விரித்து
புன்னை யிருவாட்சி புதுமல்லி கைமலரும்
செவ்வந்தி செங்கழுநீர் செவ்வலரி புட்பமுடன்
மெத்தச் சொரிந்து மிகப்பரப்பி மெல்லணைமேல்
பச்சைப் புனுகும் பன்னீரும் மேல்தெளித்து
சுற்றத் துடனே துவனி யலங்கரித்து
பள்ளிகொள்ள வேண்டுமென்று பாங்கியரைப் போகவிட்டு
மாளிகை வாசல் மணிக்கதவைத் தாழ்பூட்டி
மன்ன னிருக்கும் மணிவிளக்கின் முன்புசென்று
மன்னா மணிவிளக்கின் வாசல் திறவுமென்றாள்
அப்போது காஞ்சியவன் மனமது தானறிய

செப்பமுடன் சும்மா திறவா தொளிந்திருந்தான்
கலங்கினாள் கன்னிக் கருகிமனந் தான்வெதும்ப
புலம்பி விழுந்து புனல்கள்விழி நீர்சொரிய
தட்டான்தான் செய்த சதிமானங் கண்டாமோ
நட்டாற்றுக் கோரைபோல் நடுங்கிவிழுந் தாயிழைதான்
தட்டானை யென்சொல்வேன் சதியெனக்குச் செய்ததெல்லாம்
யாருக் குரைப்பேன் அவன்செய்த காரியத்தை
விள்ளாம லுள்ளே விழுந்தாளே மெல்லணைமேல்

## காஞ்சியனைக் கட்டி அளாவுதல்

செய்ய திருமாது சிலைமதனை ஈன்றாப்போல்
பொன்விளக்கி னுள்ளிருந்துப் புறப்பட்டார் காஞ்சியனார்
கண்டாள் மனமகிழ்ந்தாள் காதலெல்லாந் தான்சொரிந்தாள்
ஆகங் குளிர அளாவியுறக் கட்டினளே
வானத்து அம்புலிமான் வாசலிலே வந்ததென்பான்
விண்ணிலுள்ள தாரகையென் வீட்டினிலே வந்ததென்பான்
வேந்தனும் மெல்லியனும் விரைய எழுந்திருந்து
சாந்தனைய மெல்லணைமேல் தாம்பிணையப் பூசலுக்காய்
ஏறினார் மெத்தையின்மேல் இன்பந் தனைவிளக்க
சற்றே கலையைத் தாழ நெகிழ்ந்திருந்தான்
மதனும் பெரும்படையும் மாயப்போர் செய்தாற்போல்
செங்கரும்பு வில்வளைத்துச் சிறுநாணை ஏற்றினனே
தொடுத்துவிட்டான் வீரம்வைத்து வண்டாயன் தான்மயங்க
படுத்த அமளியிலே பைங்கொடியைக் கட்டினனே
அல்குல் கலவி அணைந்து பிணைந்திடவே
புல்கினார் காஞ்சியனார் பொறுத்தமழை பெய்ததுபோல்
முத்தி யுடனே முகத்தைமுகம் வைத்திடுவார்
செப்பனைய கொங்கை சினந்து மதங்கொடுக்க
அம்பனைய பன்னீ ரதன்பேரில் வேர்த்தொழுக
தாமக் குழலுஞ் சரிந்து குலைந்துவிழ
காமக் கலவி கசிந்துருகித் தங்களிலே
குங்குமமுஞ் சாந்துங் குளிர்ந்தநல்ல சந்தனமும்
எங்குமெங்கு மோடி இளகுவண்ட விட்டிடுமே
சுகத்தை யெனக்களித்த தோகை மடமானை
அகத்தை விழுங்கியுள்ளே யழைத்துவைத்துக் கொள்ளேனோ
தேனே அமுதே தெவிட்டாத தெள்ளமுதே
மானை மறந்தினனும் மணிவிளக்கில் போவேனோ

பச்சைக் கணைபோல் பனைபுயத்தை விட்டகன்று
குத்து விளக்கான குகைக்கு ளிருப்பேனோ
அரவின் படம்போன்ற அல்குல்தனைக் காணாமல்
இரவும் பகலும் இருப்பேனோ வஞ்சிறையில்
பொன்னையொத்த மேனியுமுன் பூமுடியுங் காணாமல்
மன்னற் கழகோ மறைய இருப்பதுதான்
ஒருவற் கொருவர் உள்ளாசை யால்மயங்க
இருவற்கு மொக்க எழுந்ததுவே இன்பமையல்
இப்படியே தம்மில் இன்ப நலம்விளைந்து
காமப் புணர்ச்சியிலே கட்டி யுறத்தழுவி
பூசற் கலவி பொருந்துகின்ற அந்நேரம்
கூவிற்றே கோழி குவலயத்தோ ரெல்லோர்க்கும்
ஆடை குலைய அழகாக வேர்வைசிந்த
வாடை யெதிர்மதனன் வாதினைகள் காணாமல்
மிக்கமணிக் கோர்வைசிந்தி மெல்லணையின் மேற்கிடக்க
மேலோதி தான்குலைந்து மேனியெல்லாந் தான்மறைக்க
வஞ்சிக் கலாபமயில் போலே யெழுந்திருந்து

## காஞ்சியனுக்கு அறைக்குள் அன்னமிடல்

அழகுடைய காஞ்சியனை யறைக்குள்ளே கொண்டுபோய்
புறம்பாய் படுத்தநல்ல பூம்பட்டுத் தான்விரித்து
சேணைக்கால் வைத்துநல்ல செம்பொன் கலம்பூசி
அன்னம் படைத்தா ளழகுகறி தான்படைத்தாள்.
தித்திக்கப் பால்வார்த்து சீனியும் மேல்விசிறி
உண்ணுமுண்ணு மென்று உடம்பை மிகத்தடவி
போதுமென உண்டதற்பின் பொற்கலத்தில் நீர்வார்த்து
திருக்கை தனைவிளக்கிச் செழுநிலத்தில் நீர்படுத்தி
பழுக்கா யரிபிளகும் பாகுமுடன் தேன்போல
கற்பூரச் சுண்ணாம்பும் காச்சுண்டை வெற்றிலையும்
திருக்கை தனில்கொடுத்துத் திருமேனி யைத்தழுவி
வேந்தன் தனைப்போற்றி விளக்கினுள்ளே தான்விடுத்தாள்.
அப்போது மன்னன் அணிவிளக்கி னுட்புகுந்து
செம்பொன் கதவடைத்துச் சிறுதாழைப் பூட்டியபின்
பஞ்சணை மெத்தையின்மேல் பள்ளிகொண்டார் காஞ்சியனார்
காலம் புலர்ந்து கதிரோனும் தோன்றியபின்
மாளிகை வாசல் மணிக்கதவைத் தாழ்திறந்தாள்.

## பொழுதுபுலர்ந்து தோழியர்கள் பணி

தோழியர்க ளெல்லோரும் தோன்றவந்து நின்றார்கள்.
அரங்கும் விளக்கி யடுக்களையுந் தான்விளக்கி
முத்தம் விளக்கி முறைத்தொழிலுஞ் செய்தார்கள்.

## கன்னிக் கருவுறுதல்

இப்படியே தாங்கள் இனிதிருக்கும் நாளையிலே
உள்ளறையிற் கள்ள னொளிந்திருக்கும் நாளையிலே
பூம்பாளை நாறும் புரிகுழலார் தன்னுடனே
வாய்ப்பாக உள்ளறையில் வாழுகின்ற நாளையிலே
அற்ப சலம்பாய்ந்து அமுதக் கருவிளைந்து
வெண்முத்துப் போலும் விழுதாலின் காய்போலும்
வீங்குநெல்லிக் காய்போலும் விளாவின் கனிபோலும்
உந்தி மலர்குளுந்து உள்கருப்பந் தாங்கியபின்
முலைக்கண் ணதுகறுத்து மூன்றுதிங்க ளானதுவே
பேதை திருமேனி பெரும்பசலை பூத்ததுவே.

## தோழியர்கள் ஐயுற்றுக் காரணம் கேட்டல்

மேனிதனைக் கண்டளவே மெல்லிநல்லா ரென்சொல்வார்
செம்பவள மேனியெல்லாம் சேரப் பசலையதாய்
வெண்பவளம் போலே வெளுப்பானே னென் மெல்லியரே
கோமா னறிந்தக்கால் கொல்வரோ மெல்லியரே
உற்றா ருடனே உறமுறையார் தானறிந்தால்
சித்திரம் போல்நீதான்[1] சிரிக்கவுடம் பாயிற்றே
வெற்றிதருங் கொம்பே வேந்தன் திருமகளே
கற்றவரைக் கூட்டிக் கருமருந்து நாங்கள்தர
இக்களவு செய்தவர்கள் ஆரென் றெனக்குரையீர் !

## பெண்கொடியார் மாற்றம்

உரையுமென்று சொன்னீரே யொண்ணுதலே தாதியரே
சிறுதாய் எனக்குத் திருப்பூத்த நாளையிலே
திரட்டிக் கலியாணம் செய்தீரே யெல்லோரும்
அன்றுமுத லின்றளவும் அசலகத்திற் போவதுண்டோ
ஐநூறு தாதியர்கள் அருகே யிருப்பீரே

1. சிரிக்கடவும்பாவர்களோ என்றுளது

முந்நூறு தாதியர்கள் முறைக்காவல் வைப்பீரே
எங்ஙனே வந்ததுதான் இக்களவு தானெனக்கு
மண்ணகத்தி னுள்ளே மனித ரறியாமல்
விண்ணகத்தில் நின்று விழுந்தானோ கள்வனென்றான்.
மற்று மற்றுமுள்ள மரங்களா யுள்ளதெல்லாம்
காய்த்துப் பழுத்ததெல்லாங் கள்ளந்தான் கொண்டதுவோ
குந்தி விலக்கமதாய்க் குளித்துநல்ல மாத்துடுத்து
அந்தியிளந் தென்றல் அடித்துக் கருப்பிடித்து
வீமன் பிறந்து வெகுசமத்த னாகிலையோ
அஞ்சனையே தானு[1] மசலப்புறப் பட்டிருந்தும்
மஞ்சநீ ராடிநல்ல மாற்று மெடுத்துடுத்து
வஞ்ச நெடுங்கரத்தில் வாடை யணைந்திடவே
உள்கருப்பந் தாங்கி உகந்திரண்டு கெர்பமதாய்
அனுமான் பிறந்து அடல்வீர னாகிலையோ
பெண்ணரசு நாடுதன்னில் பெண்பிறந்தார் ஆனவற்கு
மண்ணுலகில் காற்றலவோ மணவாள னானதுதான்
கோடை யடித்துக் குளிர்ந்ததென்றல் தான்வீச
வாடை யடித்து வளர்ந்ததுகாண் சூலெனக்கு
தாதியர்கள் சொல்லிலுமாம் தகப்பனார் சொல்லினுமாம்
சேதி இதுகாணும் தேன்மொழியீ ரென்றுரைத்தாள்.

## தாதியர்கள் அச்சம்

அப்போது தாதியர்கள் அனைவோருந் தாங்கலங்கி
இதுக்கேது செய்வோம்நாம் என்றே மிகக்கலங்கி
மன்ன னிதைக்கேட்டால் நம்மை வதைத்திடுவான்
என்று கலங்கி எழில்தாதி மார்களெல்லாம்
நின்று கலங்கி நெடுமூச்சுத் தானெறிந்தார்
இனிநாமே யஞ்சினால் இனிப்போமோ செய்ததெல்லாம்
என்று மனந்தேறி எல்லோருந் தான்கூடி
சொல்வோ மெனநினைந்து துணிந்தார்கள் தங்களிலே
மன்னனுக்குப்[2] பின்சொல்வோம் மாதவிக்கு முன்சொல்வோம்
சென்றார்கள் தேவியின் செல்வமணி மாளிகையில்
மாதுநல்லாள் தானிருக்கும் மாளிகையிற் சென்றுபுக்கார்
மாளிகையிற் சென்றுபுக்கு மன்னவனார் தேவியரை
சே! சே! யெனப்போற்றித் தெண்டனிட்டா ரெல்லோரும்

1. மசலப்பிறப்பட்டிருந்தும் என்றுளது. 2. 'பின்சொலுவேற்' என்றுளது.

போந்தீ ரழகான பொற்கொடியீர் எல்லோரும்
வேந்த ரருளாலே விக்கினங்கள் வந்ததுண்டோ ?
[1] நாதன் வெறுப்புமில்லை நம்மாலே குற்றமில்லை
பேதைநல்லாள் செய்தகுற்றம் பேர்ந்துப் பறையவந்தோம்
மன்னவனார் தேவி மனது துணுக்கிடவே
செய்ய நுதலி சிறுக்கிசெய்த குற்றமெல்லாம்
பைய அவர்செவியில் பகரும் படிப்படியே
என்றுசொன்ன வப்பொழுதே யெழுந்திருந்தாள் மூதாதி
கீதமொழி வேதங் கிடக்குந் திருச்செவியில்
மேதினியோர் தாமறியா மெள்ள உரைத்தனளே.

## செய்தி கேட்ட அரசியின் மாற்றம்

பைய உரைத்துப் பகர்ந்த மொழிகேட்டு
கையை நெரித்துக் கலங்கிநெடு மூச்செறிந்து
ஏங்கி மனந்தளர்ந்து எல்லா மிருந்தாலும்
பாங்கியர்க ளில்லாமல் பயிலுமோ இக்களவு
நெருப்பைக் குவித்துநல்ல நெய்காய்ச்சி கைவிடுங்கோள்
வேந்தன் திருச்செவியில் விண்ணப்பஞ் செய்ததுண்டால்
அங்கே பெருமாள் அழைத்தக்கால் வாருமென்று
செங்கை மடமாது செப்பி விடைகொடுத்து
சேவிக்கும் பெண்களுக்குச் சேர விடைகொடுத்துப்
போனாரே தாதியர்கள் புத்தியொத்துத் தங்களிலே

## பாண்டியன் வேட்டையாடி மாளிகைக்குத் திரும்புதல்

போன பிறகேதான் பூபாலன் மாளிகையில்
மானும் மரையும் மயில்வேங்கை தானாடி
சேனையுடன் வேட்டைபோய்த் திரும்பினான் மன்னவனும்
மன்னனும் மாளிகையில் வந்தே யினிதிருந்தான்.

## பாண்டியனுக்குச் செய்தி கூறல்

வேந்தனுந் தேவியுமாய் வீற்றிருக்கும் வேளையிலே
யெந்தன் பெருமாளே [2] யேருத விண்ணப்பம்
சொல்லப் பயப்படுவேன் சுந்தர பாண்டியனே
ஏது பயந்தா னிளங்கொடியே யுந்தனுக்கு
உன்மனதி லுள்ளதெல்லாம் உற்றுரையீர் பெண்கொடியே !

---

1. 'தாயன்' என்றுளது. 2. = ?

செல்ல மகளார் திருவயிறு வாய்த்ததுகாண்
வம்பனெனும் காற்றடித்து மாயத் துகில்பறந்து
கொம்பனையார் தன்வயிற்றில் குமாரனுமுண் டானதுவே.

## பாண்டியன் தாதியர்களை அழைத்துவரக் கட்டளையிடுதல்

அப்போது கோமான் அதிகோபங் கொண்டானே
தாதியர்கள் தன்னையெல்லாந் தானழைத்து வாருமென்றார்.
ஒற்றன் தனையழைத்து ஓடவிட்டான் கோமானும்
சென்றானே ஒற்றன்தான் சேயிழையார் வாசலிலே
தாதியர்கள் எல்லோரும் சடுதிக்கு வாருமென்றான்.
கூட்டி மறித்துக் கொண்டுவந்தான் கோமான்முன்

## பாண்டியன் சினந்து கூறல்

வந்த பொழுதேதான் வாழ்வேந்தர் கோமானும்
சிந்தை யழன்றுபொங்கிச் சேயிழையார்க் கென்சொலுவான்
எட்டுமிரண் டுங்கூட்டி எத்தனைதா னென்றாலும்
பத்தென்று சொல்லப் பயனறியாப் பாலகனை
ஆசார மாக அடங்கவே நீர்கூட்.
கூசாமல் நீங்களெல்லாங் கூட்டி முடித்ததுதான்
வைத லுடனே வயிற்றில்வடு வானதெல்லாம்
செய்தபுத்தி யானதெல்லாந் திட்டெனவே கட்டுரையீர்.

## தாதியின் பதில்

அப்போது மங்கே யதிலொருத்தி யென்சொல்வாள்
[1]காலிதான் தின்னாமல் காத்திடவே காவல்செய்தோம்
வேலி பயிரழித்தால் விளையுமோ எம்பெருமான்
பெருமாளே யெங்கள்மொழி பிரமாணந் தானாக்கி
நெய்யிலே கைவிடுவோம் நெருப்பிலே தான்நடப்போம்
வேண்டும் பிரமாணஞ் செய்திடுவோ மெங்கோவே

## பாண்டியன் தீர்ப்பு

கைப்பொருள் ஆனதுதான் கையிலே தானிருக்க
நெய்யிலே கையிடவும் நீதியோ பெண்கொடியே !
சம்பந்த னன்று சமணர் தனைப்பிடித்து
நிர்பந்த மாக நிரைக்கழுவில் வைத்தானே
உங்களையுஞ் சேர உயிர்க்கழுவில் வைத்திடுவேன்.

1. காலி-பசுக்கூட்டம்.

## தாதியின் மாற்றம்

அப்போது மங்கே அதிலொருத்தி யெங்சொல்வாள்
வாய்ப்பாக நல்ல வசனம் உரைத்தாலும்
காற்பாரிற் கள்ளன் வலியவக்காண் காவலனே
கள்ளனைத்தான் நாங்களினிக் காத்துப் பிடித்தாலும்
தேவரீர்க்கு மாறா வடுக்காணு மன்னவனே
பாடும் பறைச்சியையும் பாணிச்சியைக் கையாளும்
பாண்டியர்கள் தங்களுக்குப் பண்டுவடு வானதுதான்

## பாண்டியன் கட்டளை

ஏதுவடு வாகிலுமாம் இனிப்பிடித்து வாருமென்றான்.
பூவையரைப் போக விடைகொடுத்தான் பூபாலன்

## களவைக் காண தாதியர்கள் முனைதல்

போனாரே தாதியர்கள் புத்தியொத்துத் தங்களிலே
இக்களவு தன்னை யாம்பிடிக்க வேணுமென்று
தங்களிலே புத்தியொத்துச் சம்மதித்துக் கொண்டதற்பின்
சம்பா வரிசியிலே தண்ணீரைப் போதவைத்து
சோற்றைக் குழைத்துச் சுடச்சுடவே தானிறக்கி
சுண்டைக்காய் தூதுளங்காய் சூரைக்காய் தன்னுடனே
கூடவதை வேகவைத்துக் கொட்டினார் தாதியர்கள்
இலுப்பைக்காய் கோவைக்காய் பறித்துஇளம் பிஞ்சுடனே
ஒக்க அதைக்காய்ச்சி ஒருகறியாய்த் தான்படைத்தார்.
குளத்துச் சிறுமீனைக் குடலுடனே தான்திருத்தி
அதுவும் ஒருகறியாய் அடைவே படைத்துவைத்தார்
பச்சைப்பால் தன்னை பகலோ னெதிர்வைத்து
[1] கும்பவதைக் காய்ச்சி குழப்பென்று தான்படைத்தார்
உப்பிலி யாக்கி யுகமையுடன் தான்படைத்தார்
செப்புக் குடங்கொண்டு சேற்றுநீர் தானெடுத்து
அப்புச் சிறந்த அமுதுநீ ரென்றுவைத்தார்
குற்றேவ லெல்லாம் குறைவறவே செய்ததற்பின்
வெற்றி யிரவி விழுந்தான் படுவானில்
எங்குமெங் குஞ்சேர இருள்வந் தடைந்ததற்பின்
போனாரே தாதியர்கள் பொன்னரங்கு மாடம்விட்டு
காஞ்சிப் பெருமாளும் கடுகவிளக் கேயிருந்து

---

1 .?

மெள்ள இறங்கி மெல்லணைமேல் தானிருந்தான்
பண்டுபோல் மாது படைத்தாள் அமுதுதன்னை
சோறுகறி தன்னிற் சுவையுளதுங் கண்டுமன்னன்
கச்சுது பாகற்காய் கசந்ததென்று சொல்லாமல்
உண்டாரே காஞ்சியனார் ஒன்று முறையாமல்
அமுது செய்தபின்பு அருள்காஞ்சி மன்னவனும்
கூடி விளையாடிக் குளிர்ந்தங் கிருந்ததற்பின்
பொழுது விடியப் புகலேழு நாழிகையில்
மணிவிளக்கின் மீதேறி மன்ன னிருந்தானே
பொங்கு கதிரோனும் புகழ்ந்துவெளி யானதற்பின்
தாதிமா ரெல்லோரும் சடுதியிலே வந்துநின்று
பார்த்தார் அசுவைதன்னைப் பைய்யவே தாதியர்கள்
காணாமல் எல்லோருங் கண்டு மனம்வெதும்பி
இதுக்குமொரு மாற்றங் கண்டிலோ மென்றுசொல்லி
தாதியர்க ளெல்லோருந் தங்களிலே தான்கூடி
அற்றைப் பகற்போந்த அடுத்தரசர் சென்றதற்பின்
அடிக்காண வேண்டுமென்று ஆயிழையா ரெல்லோரும்
மணிவிளக்குச் சூழ மணலைப் பரப்பினரே
மணலைப் பரப்பிவைத்து வல்லியர்கள் போனாரே
போனாரே தாதியர்கள் பொன்னரங்கு மாளிகையில்
காஞ்சிப் பெருமாளுங் கடுகவிளக் குள்ளிருந்து
பாய்ந்திறங்கி காஞ்சியனார் பைய்யஅமு துண்டதற்பின்
கூடினூர் காஞ்சியனார் கொங்கையின்மே லேயிறுக
ஈருடலு மோருடலாய் இன்ப நலம்விளைத்து
எரி(யும்) மணிவிளக்கு இல்லில் மறைந்ததற்பின்
மாதேவி அம்மணலை மன்னனடி காணாமல்
தலைமுடியா லேயழித்தாள் தானடிகள் காணாமல்
அந்த மணலை யழித்தாளே மாதேவி
பொழுது விடிந்து புலர்ந்துவெயி லானதற்பின்
பரப்பிவைத்த வெண்மணலைப் பார்த்தார்கள் தாதியர்கள்
துய்ய மணல்மீது துணையடிகள் காணாமல்
அங்கே அடிபார்த்து ஆயிழையா ரெல்லோரும்
அதிலும் ஒருகளவு கண்டிலோ மென்றுசொல்லி

## தாதியர்கள் கள்வனைக் கண்டுபிடித்து அரசனிடம் ஒப்புவித்தல்

அந்தநாள் போயங் கடுத்தநாள் ஆனதற்பின்
நல்ல உறக்கத்தே நடுச்சாமஞ் சென்றதற்பின்

கபாடமத னைத்திறந்து காண்போமே யென்றுசொல்லி
அடைத்த கதவுதன்னை யார்தான் திறக்கிலுமாம்
அடித்துத் திறந்ததென்றால் ஆரப் படுவதுண்டே
தாளருகில் மண்ணையொரு சற்றே பறித்துவைத்து
சுவரைத் துளைத்துத் திறப்போம்நா மென்றுசொல்லி
மண்ணைத் துளைத்து மலர்த்தாளைத் தானொட்டி
தாளைத் திறந்துவைத்துத் தள்ளினார் பொற்கதவை
தேறித் தெளிந்து திருமாலுந் தேவியரும்
ஏறிக் கிடந்தனரே இடபவணை மெத்தையின்மேல்
கள்ளனையுங் கள்ளியையுங் கண்டோமே யென்றுசொல்லி
வள்ளைப்பெருங் கண்ணானை வளைத்துப் பிடித்தனரே
அப்போது மங்கே யதிலொருத்தி யெஞ்சொல்வாள்
தட்டானார் கூடவந்த தம்பிகாண் என்பாரும்
கெட்டேனே மன்னவர்க்குக் கேடு விளைந்ததுகாண்
பெருமையுள்ள கோமானார் பெற்று வளர்த்தெடுத்த
அருமை மகளார் அவசாரிப் பட்டதென்றால்
இருவரையுங் கூட இனிக்கொல்வா னென்பாரும்
மருவனைய பூங்குழலார் மன்னன் மகளாரை
பழுதற்ற சீர்வடிவைப் பார்க்கப் பசிதீரும்
கள்ளிக்கு வாய்த்தநல்ல கணவனைக்கண் டெல்லோரும்
வள்ளிக்கு வாய்த்தசெந்தில் வாழ்முருக னென்பாரும்
இரதியுங் காமனும்போல் இருவரையுந் தான்கண்டு
மாறொட்டிப் பாய்வார்காண் மண்ணதிரப் பாய்வார்காண்
சீதையும் நல்லசீ ராமனுங்கா ணென்பாரும்
வீணிலே சாக விதித்ததுவோ வென்பாரும்
பழிமுடிக்க வந்ததொரு பாலன்கா ணென்பாரும்
திண்டிறல்சேர் சொக்கர் திருப்பதியில் வாழவென்று
பண்டே இருவருந்தான் பழியென்று வந்தீரோ
கோதையுடன் கூடஇன்று கொல்வரே யென்பாரும்
உற்றாரும் உம்முடைய வூரும் உடன்பிறப்பும்
பெற்றாருங் காணாமல் புறஞ்சாய்ந்து போனீரோ
நாளின் கொடுமையோ நாழிகையின் பொல்லாங்கோ
ஆளான மன்னன் அவதாரப் பட்டதுதான்
வேதா விதித்த விதிப்படியோ வென்பாரும்
கோமான் சமயத்தே கொண்டுசெல்ல வேண்டுமென்று
கையினால் தீண்டாமல் காஞ்சிப் பெருமாளை

முன்னேபோ மென்று முனியாமல் எல்லோரும்
அண்டர் பெருமாள் அயோத்தியர்கோன் போனாற்போல்
கொண்டுசென்று விட்டாரே கோமான் திருமுன்பே

## பாண்டியன் சீற்றம்

தட்டா னுடன்பிறந்த தம்பியென்று வந்தவன்தான்
வெட்டுமென்று சொல்லி வேந்தன் எழுந்திருந்தான்.

## காஞ்சியனை யாரென்று அறிய ஏற்பாடு செய்தல்

மற்றுமந்த மன்னவனை மந்திரிமார் தான்விலக்கி
ஆரென்று கேட்டு அறிந்துகொல்வோ மென்றுசொல்லி
தட்டானைக் கொண்டு சடுதிக்கு வாருமென்றார்.
மூண்டுவினை வாரதெல்லாம் முன்னே யறிந்துதட்டான்
கூடுவிட்டுக் கூடு கோரக்கர் பாய்ந்தாற்போல்
வீடுவிட்டுக் காடுறைந்து விட்டானே தட்டானும்
போய்விட்ட தட்டானார் புக்கிருந்த வாழ்மனையில்
ஈக்கூட்டைப் போட்டு இருட்போலக் கிடந்ததுவே
போனானே ஒற்றன் பூமியனார் வாசலிலே
தட்டானு மில்லையவன் சாதியார் தானுமில்லை
சேர ஒளிந்தோடிச் செடியிலே போனார்காண்

## பாண்டியன் மழுவரசனை அழைத்துவரப் பணித்தல்

இயலுடைய ஒற்ற னிவ்வா றுரைத்தற்பின்
அப்போது கோமா னழன்று விழிசிவந்து
மழுவரசன் தன்னை யழைத்தோடி வாருமென்றான்
ஓடினான் ஒற்றன் ஒருநொடியில் தாளாமல்
ஆன [1] மழுவரசே யருளிப்பா டும்மையென்றார்.

## மழுவரசன் ஐயமும் ஒற்றன் தெளிவும்

ஏதுக்குக் கோமான் எனையழைத்த காரணந்தான்
மன்னன் மகளுக்கு வாய்த்தகள்ள னங்கொருவன்
கன்னி வயிற்றில் கருப்பமுந் தான்வளர
கண்டு பிடித்தார்கள் கள்ளனைத்தான் தாதியர்கள்
வெட்டிவைக்க வேண்டுமென்று வேந்தன் முனிந்ததனால்
கூட்டி மழுவரசைக் கொண்டோடி வாருமென்றார்.

---

1. மழுவன் - நகர்காப்போன் ; அஞ்சாதவன்

## மழுவரசன் புறப்பாடு

அந்த மொழிகேட்டு ஆன மழுவரசன்
துய்யகருங் கச்சைகட்டித் தோள்மேலே காசமிட்டு
பார மழுவெடுத்துப் பாண்டியன்முன் வந்துநின்றான்

## பாண்டியன் கட்டளை

வீர மழுவரசே! வெண்பாமா லைத்தலைவா!
ஆரமுட னல்ல ஆபரணம் நான்தருவேன்.
கழுவன் திடல்தனிலே கள்வனைநீ கொண்டுசென்று
மழுவாலே வெட்டியவன் மார்பைப் பிளந்துவைத்து
கீழ்நரிகள் தின்னக் கிழித்துழக்கி யாருமென்றார்
கள்ளிக்கு வாய்த்தநல்ல காஞ்சிப் பெருமாளை
கட்டி மழுவரசன் கைக்கொண்டு போனானே
கோவலனைக் கொண்டு கொலைக்களத்தில் தானிறுத்தி

## காஞ்சியனிடம் மழுவரசன் செய்தி கேட்டல்

மன்னர் பெருமாளை மழுவரசன் தான்பார்த்து
தேச முமக்கெது திருப்பதியுந் தானேது
பேரு முமக்கெது பெருமாளே யென்றானே
பேருதான் சொல்வானேன் பிறந்தவூர் சொல்வானேன்

## காஞ்சியன் மறுப்பு

மட்டிருக்குந் திண்புயனே மாறன் முனியாமல்
வெட்டிவைத்துப் போடாஉன் வேந்தன் முனியாமல்

## மழுவரசனின் மயக்கம்

ஆதிக் கலைமதிபோல் அழகுதன்னைக் கண்டதென்றால்
தீயில் மெழுகதுபோல் சிந்தை யுருகுதுகாண்
வரைசேரும் திண்புயனே வரைதனிலே யுட்புகுந்து
மரையோடே மானைவெட்டி மழுவில்ரத்தங் காட்டுகிறேன்
அரசேநீ போடா அவ்வூர் மலையருகாய்

## காஞ்சியன் கூற்று

தக்க மனைவியுடன் தலைவனும் பட்டுதென்றால்
சொக்கர்பத முண்டெனவே சொல்லவும்நாம் கேட்டிருப்போம்

[1] ஆறணியாப் பெண்கொடியை அடிக்களவு செய்தவர்தான்
புறஞ்சாய்ந்து போனால் பெருநரகில் வீழ்வர்கண்டாய்
காளைய ரச்சங் கலங்கி உயிரோப்பும்
கோழையரைக் கொல்லாய் கொடிய மழுவரசே
மட்டாருஞ் சோலை மதுரையிலே பட்டுதென்றால்
அட்டாலைச் சொக்கர் அமுத பதந்தருவார்
வெட்டாய் மழுவரசே வேந்தன் முனியாமல்

## மழுவரசன் காஞ்சியனை அரசன்முன் மீண்டும் நிறுத்தல்

கையாரத் தீண்டுவனோ கனுக்கையினால் வெட்டுவனோ
கோலத் திருமுகமுங் கொஞ்சுகிளி வாய்மலரும்
சீலொத்த மேனி திருவழகுங் கண்டெனக்கு
கையெழுந்து வெட்டக் கருதுகிலே னென்மனது
என்று மழுவரசன் இராசாவைத் தான்போற்றி
கோமான் திருமுன்பே கொண்டுவந்து விட்டானே
மழுவாலே நீரெனது மார்பைப் பிளந்திடினும்
கையினால் தீண்டேனென் காவலனே யென்றுரைக்க
சங்குவளை கோர்க்கும் சாரைக்குடல் நானெனவே
எங்கும் மழுவெடுத்து யான்திரிந்தே னித்தனைநாள்
என்றுசொல்லித் தம்மி [2] வீராதபுத்தி தான்பேசி
[3] என்றுசொல்லிப் போனா னிராச மழுவரசன்

## பாண்டியன் சேவகரை வரப்பணித்தல்

அப்போது கோமா னதிகோபந் தன்னுடனே
சேவிக்குஞ் சேவுகரைச் சென்றழைத்து வாருமென்றார்
ஓடினான் ஒற்றன் ஒருநொடியில் நில்லாமல்
சிறந்த கடைத்தெருவுஞ் சிங்கார வீதிகளும்
சென்றுபோய் ஆராய்ந்து சேவுகரைத் தான்கூட்டி,
கூட்டிவந்து சேவுகரைக் கோமான்முன் னேவிடுத்தான்

## பாண்டியன் கட்டளை

அப்போது கோமான் அவர்களைப்பார்த் தென்சொல்வான்
துங்கவடி வாட்காரர் சொட்டைச்சுரி கைக்காரர்
இங்கிவனைக் கொல்லுமென்று ஏவினான் கோமானும்
காலாட்கள் மேலாட்கள் கள்ளர் கொலைகாரர்

---

1. ?    2. விராதபுத்தி என்றுளது.    3. சொற்றொடர் சரியில்லை.

மேலாட்கள் தான்கூடி வெட்டு மிவனையென்றார்
ஒன்றென்று சொல்ல (எ)வர்க்கு மனமுருகும்
சேவித்த சேவுகரைச் சேர அழையுமென்றான்
சேர அழைத்துவந்து தென்மதுரைக் கோமான்முன்
வந்துநின்று சேவுகர்தான் வார்த்தைபல தானுரைப்பார்

## சேவகர் மாற்றம்

ஏன்தம்பி ரானே இவனைநாம் கொல்வதற்கு
எங்கள்கையி னாலிவனைக் கொல்லமன தெண்ணாதே
ஒன்றுரைக்கக் கேட்டருளாய் யுற்றதொரு பாண்டியனே
கள்ளமரும் பூங்குழலாள் கண்ணகியின் காற்சிலம்பைக்
கொள்ளவென [1] வஞ்சிக் கொலைமுடித்தான் கொற்றவனை
மற்றுமந்தத் தட்டான் மறுபிறவி தான்பிறந்து
இன்றுமக்குத் தானே இழுக்குவைத்தான் தட்டானும்

## பாண்டியன் ஆணை

என்று பலசொல்ல இராசப் பெருமாளும்
எத்தனைநீர் சொன்னாலும் இவனைநான் கொன்றிடுவேன்
கலையாருந் தென்மதுரைக் கள்வனைநாம் கொல்வதற்கு
கொலையானை தன்னையிங்கே கொண்டோடி வாருமென்றான்.

## பாகனின் ஐயம்

அப்போது பாகன் அரசனைப்பார்த் தென்சொல்வான்
போரானையோ வெற்றிப் பொருப்பைப் பிடுங்கியதோ
சூரனையும் வென்றதொரு சுப்பிர மணியனையோ
செம்பொற் சடையனையோ சீர்பரம நாதனையோ
கோட்டை யிடி(த்)தானோ குழல்சூடிக் கையனையோ
பட்டத்தில் வாய்த்தானோ பனையைப் பிடுங்கியதோ
ஒற்றை மருப்பனையே(ா) உறங்காப் பிலியனையோ
கொல்லமது கொண்டானோ கொல்மத வாரணமோ
படைகண்டா ர(ய்)யனையோ பாலைக்காட் டய்யனையோ
அமருலகங் கொண்டானோ ஆலவாய்ச் சொக்கனையோ
சோணாடு காத்தானோ சுல்தானை வென்றானோ
சீரங்க ராயனையோ திருக்காளத்தி நாதனையோ
பட்டுருவத் தொட்டானோ பகர மடக்கியையோ

---

1. வஞ்சிபெற்றன.

மண்டலிகர் போற்றியையோ மயிலக் குருவினையோ
ஈழத்திறை கொண்டானோ இராசா திடுக்கனையோ
இராசகும்ப நாதனையோ எமதூத நாதனையோ
ஒன்னலரைக் கொன்றானோ உலகதிரப் பாய்ந்தானோ
கண்டா (கண்ட) கண்டனையோ கந்துக் களிறனையோ
படையுடைய (கை) தானோ பராசுர நாதனையோ
இன்னமின்ன மெண்ணத் தொலையாத யானையிலே
எந்தானை யாண்டவனே யான்பிடித்துக் கொண்டுவர

## பாண்டியன் பதில்

துச்சினார் கொண்டுவந்தால் சுருட்டி எடுத்தடிக்கும்
அச்சுறுத்து மாவை அழைத்தோடி வாருமென்றார்
ஓடினான் ஒற்றன் ஒருநொடியில் தாழாமல்
சென்றானே ஒற்றன் திருவோட சுந்தனிலே
மன்னர் பணிவிடைதான் மறவாமல் கண்டுசென்று
யானையும் பாகனையு மருளிப்பா டென்றுரைத்தான்.

## பாகனும் ஒற்றனும் உரையாடல்

அப்போது பாகன் [1] அறியாமல் கூறெனவே
கோமான் மகளார் கொம்பனையார் தன்னுடனே
கண்டு பிடித்ததற்குக் கள்வனை நாம் கொல்லவென்ன
கொண்டோடி வாருமென்று கொற்றவன்தான் கூறினனே
அங்கொருவர் தானிலையோ அவனைத்தான் கொல்வதற்கு
இங்கேதான் வந்தா யெனக்கவனோ பாரமென்றான்
மழுவரசன் தன்னுடனே மற்றுமற்று முள்ளோரும்
சேரமான் படைகளெல்லாங் கொல்லோமே யென்றார்கள்.
மத்தகரி யானைதனை மதப்படுத்து நீயெனவே
சினக்கப் படுத்தித் திட்டெனவே வாருமென்றான்.

## யானையை மதப்படுத்துதல்

அப்போது பாகனுந்தான் யானை மதப்படுத்த
மத்தங்காய் தன்னுடனே மதமத்தங் காய்தீற்றி
பெருங்கோரை மூரியுடன் பேய்க்கரும்பு வேர்தீற்றி
பக்கி நிணத்துடனே [2] பகர்காயி னாலூட்டி

---

1. ஒளியாமல் எனல் பொருந்தும்
2. 'பகர்காயி என்று' காப்பீடுநூலிலும், 'பாஸளயி' என்று சுவடியிலும் உள்ளன.

சாராயந் தன்னுடனே தலைவிரிச்சான் வேர்தீற்றி
இஞ்சிவேர் தீற்றி எலுமிச்சம் வேர்தீற்றி
கோழி நிணந்தீற்றி கொழுகொழுப்பான் வேர்தீற்றி
பிச்சியிலை தீற்றி பெருங்கரும்பு வேர்தீற்றி
நாரத்தி முல்லை நற்குரை வேர்தீற்றி
காழ்மருதி இலையுங் காக்கணான் வேர்தீற்றி
குறிஞ்சி யிலைதீற்றி கோவைவேர் தான்தீற்றி
குப்பைமணி வேருங் குறுங்கரும்பு தான்தீற்றி
கஞ்சாவைத் தீற்றி களிப்பித்தான் யானைதன்னை.

## யானையின் மதச்செயல்கள்

வெறியா(ல்) மதங்கிளம்பி வீரிட்டு வென்றுழக்கி
தலைதழைத்து நின்றதொரு தன்னரிய வேங்கைதனை
முறிய வெடுத்தடித்து மூட்டோடே தான்கிளம்பி
சாத்தி வெகுண்டுழக்கிச் சங்கிலியைத் தான்முறித்து
கூற்றுவன்போல் பாகனையுங் கொல்ல [1] வெருட்டி
ஓடுவான் பாகன் [2] உறுக்கி யெதிரிடுவான்
கூடுவான் சென்று குதிதனிலே குத்திடுவான்
யானை ஒடித்தடித்து ஆளைப் பிடுங்கியதே
சோலைவி ளாகமெல்லாந் துய்தாய்ப் பறித்தெறிந்து
குத்திக் குலைத்தெடுத்துக் குன்றுதனைத் தான்பிளந்து
வருமே மதவானை வானிடிகள் போலதிர
சிற்றூரும் மற்றச் சிறுகுடிகள் உள்ளதெல்லாம்
வெற்றிமத யானைகண்டு வெருண்டுகுடி வாங்கிடுமாம்
எதிர்த்தாரைக் கொன்று இடிபோல மிகமுழக்கி
சென்று புகுந்ததுகாண் தென்மதுரைக் கோட்டை யுள்ளே

## மதயானையைக் கண்டு மக்கள் செயல்

ஆவென்பார் கோவென்பார் யானை வருகுதென்பார்
ஓடுவென்பார் தானுமங்கே ஓடஇடம் பார்த்திடுவார்
பிள்ளை தனைஎடுப்பார் பெண்டுகளை ஓடுமென்பார்
பேதையர்க ளெல்லாரும் பெருமூச்சுத் தானெறிவார்
ஐயோதான் அவர்களைத்தான் யானைகொல்லப்
போகுதென்பார்
விதிப்படி தான்வந்து மெள்ள அகப் பட்டானே
பெற்று வளர்த்த பெரும்பாவி தானிலையோ

---

1. 'வெருட்டிதீயதித்' என்றுளது. 2. ?

எவ்வூரி லுள்ளவனோ எங்கே பிறந்தவனோ
மன்னர் குலமோ மந்திரிகள் தங்குலமோ
தென்னர் குலமோ தென்காஞ்சி யுள்ளவனோ
ஏதுகுல மென்றறியோம் ஏந்திழையே யென்பாரும்
சிங்காரம் போலே சிறந்தசிங்க மானவனை
கொல்லவென்று போகுதுகாண் கோலமத யானையல்லோ
தள்ளி நடந்திடுவார் சங்குவளை கோத்திடுவார்
தேனார் மதுரைத் தெருவே நடந்ததுவே

## மதயானையைக் கண்டு பெண்கொடியாள் செயல்

யானை வருகிறதை ஆயிழையுந் தானறிந்து
தெருவேதா னோடிவந்து தேன்மொழியார் வாசலிலே
அங்கே வரவழைத்தாள் யானைப் பெருமாளை
சென்றுகண்ட தப்பொழுதே தெய்வமத வாரணந்தான்
காரிழையைத் தானோக்கிக் கையெடுத்து நின்றதுவே
ஆனைப் பெருமாளே அறிவுடைய அண்ணாவி
நானுனக்கு நல்லதங்கை நாயகனும் மைத்துனன்காண்
மாது தனக்குநீ வாய்த்தமகன் தானலவோ
மண்டலத்தை யாளவொரு மன்னரில்லை யானாலும்
கண்டெடுத்துக் கொண்டுவந்து [1] காசினியில் வைப்பாயே
அரசர் மரபுநிலை யெல்லாம்நீ தானறிவாய்
வம்பாரும் கொங்கையின்மேல் வைத்தணைந்த மன்னவரை
கொம்பாலே குத்திக் குலையாதே யானையரே
கையாலும் அணைத்த காஞ்சிப் பெருமாளை
மெய்யாகத் தீண்டாதே மிக்கமத வாரணமே
அப்பாதான் உம்மை யழைத்து பணிவிடைதான்
இப்போதே போமென் றினிய கனிதீற்றி
அப்போது பெண்கொடியாள் யானைதனைப் போகவிட்டாள்.

## மதயானை மன்னன் மாளிகை அடைதல்

பண்டுபோல் சீறிப் பனையை முறித்தெடுத்து
கொண்டுபோய்க் கோமான்றன் கோயில்முன்னே போட்டதுவே
கண்டு பயப்பட்டு கருத்துடைய கோமானும்
வெண்டு வெதும்பியுள்ளே வேகித்து மெய்சோர்ந்து
ஒக்கநின்ற மந்திரிக ளோடவழி பார்ப்பார்கள்

---

1. காசினி — பூமி

சாகப்பயந்து தனித்தனியே ஓடி நிற்பார்
பாகரெல்லாந் தூரப் பதியிலே பார்த்துநிற்பார்
ஆனபடை வீரரெல்லாம் அப்பாலே பார்த்துநிற்பார்
பாகனுந்தான் தூரப் பதியிலே தானழைத்து
வாகன கிடக்கும் வழியிலே கொண்டுசென்று
மன்னவனைக் காட்டி மதகரியை ஏவினனே

## யானை காஞ்சியனைத் தன்மீது அமர்த்திக்கொள்ளல்

சென்று கண்ட அப்போதே தெய்வமத வாரணந்தான்
வெட்டவெளி தனிலே வெகும்புகின்ற கோமானை
கட்டையெல்லாந் தானவிழ்த்துக் கயிற்றைப் பொடியாக்கி
தொட்டெடுத்து மெல்லமெல்லத் தூசியெல்லாந் தான்துடைத்து
அடுத்து வணங்கி அழகாய்ப் படிகொடுத்து
எடுத்துத்தன் மத்தகத்தில் இராசாவை வைத்ததுவே
மகபேரு பே லுயர்ந்த மத்தக் கரியானை
சுகமேதான் சென்றதுவே சொக்கருட சன்னதியில்
திக்கெனவே யானை தெருவே நடந்ததுவே

## யானையின் செயல்பற்றி அறிவுடையோர் கூற்று

அப்போது மந்திரிகள் யானையைப்பார்த் தேதுசொல்வார்
ஒத்தபுகழ் பாப்பாரும் உயர்ந்தமறை யோர்களையும்
துய்ய [1] வயித்தியரைச் சூத்திரரைக் கைதொழுமோ
நலந்தழையா யுள்ளதெல்லாம் நாள்தோறும் வெட்டியிடும்
பத்தியத்தை [2] மெந்திழைக்கும் பாகனையுங் கைதொழுமோ
நன்னாட்டை யாளவோர் நாயகனில் லாதிருந்தால்
எந்நாட்டில் போயு மிராசாவைக் கொண்டுவரும்
யானையல்லோ கொண்டு அரசுக்கு வைப்பதுதான்
எந்நாட்ட னாகிலுமே அவனுமொரு ராசாக்காண்

## பாண்டியன் காஞ்சியனைப்பற்றி அறிய ஏவுதல்

பெயரும் அவனூரும் பெரியநல்ல ராச்சியமும்
சென்றுபோய்க் கேளுமென்றுத் திறல்வேந்தன் சொன்னானே
சென்றுபோய்த் தூதக் திறல்காஞ்சி மன்னவனை
எவ்வூர் ராசாநீ எந்தப் பதியுனக்கு

---

1, வயித்திரரை என்றுளது. 2. —?

## காஞ்சியன் கூற்று

நிச்சயமாய் கேட்டபின்பு நீள்புகழா னென்சொல்வான்
மானிடமா யுள்ள மரபுநெறி யத்தனையும்
கல்வெட்டி நாட்டிருக்கும் காஞ்சியர்கோன் தானென்றான்

## பாண்டியன் கட்டளை

என்ற மொழியை இராசாவுந் தான்கேட்டு
அன்று மனறயோ னறிவித்த வேந்தனிவன்
நன்றுகுறை யில்லை இனி நாம்பெண் கொடுப்பதற்கு
என்றுசொல்லி வேந்த னிடுங் [1]காவ ணங்களென் றான்

## பந்தல் அலங்கரிப்பு

பொற்றூணை நாட்டிடுவார் பொற்பலகை சேர்த்திடுவார்
பந்த லலங்கரிப்பார் பாளை குலைவிரிப்பார்
பண்டந் தனையிட்டுப் பேரரசு தானாட்டி
பூரண பொற்சயனம் போத வலங்கரித்து
பலவிளக்கு நின்றெரியப் பார்ப்பார்கள் தற்சூழ
மணிவிளக்கு முத்து வைடூரியம் சிறந்து
ஆணிப்பொன் னாலே அழகு பலகையிட்டார்
வண்ணவண்ணப் பூவணையை வட்டவணை மேல்விரிப்பார்
மேற்கட்டி கட்டி வெளியடையுந் தான்தொடுத்து

## காஞ்சியனை அலங்கரித்தல்

யானைப் பெருமாளை அடிதொழுதங் கெல்லோரும்
எந்தன் பெருமாளை இறக்கியங்கே கொண்டுவந்து
செய்ய பெருமாளைத் திருமஞ் சனமாட்டி
கத்தூரிக் கண்ணங் களபங்கள் தான்பூசி
ஒப்பித்து பட்டுடுத்து உடைவாளுங் கைகொடுத்து
கண்டங்கா றைசவடி கடுக்கண் பலபூட்டி
சேர்ந்திருக்கும் வேள்வி திருமுடிக்குச் சாந்தணைந்து
மார்புக் கிசைந்தநல்ல மாணிக்க மாலையிட்டு
செம்பொன் பலகையின்மேல் திருந்த இருத்தினரே

## பெண்கொடியின் ஒப்பனை

கோமான் திருமகளைக் குற்றமற ஒப்பித்து

---

1. காவணம் — பந்தல்

தாதியர்கள் சொன்டு சடுதிக்கு வாருமென்றார்
ஓவியப்பூங் கொம்பனையை ஒப்பனைகள் செய்யலுற்றார்
கோதி மயிர்முடித்துக் கூர்விழிக்கு மையெழுதி
தாதியர்கள் தானும் சவ்வாதுசந் தனம்பூசி
காறையுடன் நாணூர் கழுத்தில் மிகவணிந்து
ஒப்பமுடன் நல்ல ஒளிவயிரந் தான்பூட்டி
கைக்கேற்ற நல்ல கருவளையல் தானுமிட்டு
நெற்றிக்குப் பட்டமுடன் நித்தசங்கு தானுமிட்டு
தோள்வளையல் தன்னுடனே துய்யநல்ல பொன்மணியும்
பாடகமும் நூபுரமும் பரிபுரஞ்சேர் காலாழி
பீலி மயிலடியும் பின்னும்நல்ல கிண்கிணியும்
கோர்வைக் கிசைந்த குடமணியுந் தானணிந்து
சிற்றிடைக்கு வாய்த்தநல்ல செம்பட்டுங் கொய்துடுத்து
விரும்பிமிகச் சந்தனமும் [1] வேரித்த குங்குமமும்
கரும்புனுகும் பன்னீரும் காதலுடன் தான்பூசி
வல்லிக் கொடியை வகைவகையே ஒப்பிவித்து
பல்லக்கின் மீதே பரிவுடனே தானிருத்தி
விசலைப் பொருநுதலார் விரையவே கொண்டுவந்தார்

## மண விழா

மன்ன னிடமாக மடக்கொடியை வைத்தனரே
இயலுடைய மாமறையோர் இட்ட முகிழ்த்தமதில்
பொற்கொடியை யானுமினிப் போர்வேந்தே யென்றுசொல்லி
கைப்பிடித்து நீர்வார்த்துக் கட்டிக் கொடுத்தனரே
வகைவகையாய்ச் சீதனங்கள் வார்க்கத் துடங்கினரே
யானையோ ராயிரமாம் அடப்பரிகள் ஆயிரமாம்
தானங்க ளங்கிருக்குந் தாதிமார் ஆயிரமாம்
என்று முடிவேந்தன் இயல்புடனே நீர்வார்த்தான்
பெண்கொடியாள் தானும் பிரமானை மாயிருந்தாள்
மங்கை யுடனே மணவறையி லுட்புகுந்தான்

## பாண்டியனிடம் காஞ்சியன் வேண்டுகோள்

அன்றுக ழித்தங் கடுத்தநாள் ஆனதற்பின்
மன்னர் பெருமாள் மாமனாற் கேதுரைப்பான்
பொன்னிலங்கள் காஞ்சிவிட்டுப் போந்தேன் பரதேசம்

---

1. வேரி — வாசனை

காஞ்சிப் பதிபுகுந்து கடுக வருவேன் நான்
வேந்தர் பெருமாளே விடைதாரும் போய்வாறேன்

## பாண்டியன் விடை

எண்ணாசை மருகா ! அழகுடைய காஞ்சியனே !
என்பேதை மணவாளா பிரிந்திருக்க மாட்டேனே
புண்ணியத்துக் கொத்தவண்ணம் போய்வாரீ ராமாகில்
எ [illegible] டு நாளையிலே இங்கேநான் வாருமென்றான்

## காஞ்சியன் ஊர்திரும்ப யானை கேட்டல்

மாமுடியே கேளாய் மறுத்துமொரு விண்ணப்பம்
இச்சுவத்து மாக யென்னுயிரை மீளுவித்த
அச்சுவத்த மாவான் ஆனையுந் தாருமென்றான்
யானையுந் தான்கொடுத்தான் அரசர் பெருமாளும்

## யானைபெற்ற காஞ்சியன் செய்கை

யானைவந்த நாழிகையில் அப்போது காஞ்சியனார்
அன்றொளிந்த தட்டானை ஆராய்ந்து கூட்டிவந்து
சென்றுமிக்க கோமான்முன் சீர்பாதம் போற்றிவித்தான்
போற்றிநின்ற தட்டானைப் பூமிபற்கோன் தானோக்கி
வேண்டுந் திரவியமும் வெண்பட்டுந் தானுமொடுத்தான்
தண்டு பரியும் சகலபாக் கியங்கொடுத்தான்
கரும்படா கந்தனையே காராளை மேற்போட்டு
அந்தயா னைமேலே அரசனுந்தா னேறினனே
மொய்குழலார் தன்னைநல்ல மூடரசன் மீதுவைத்து
துய்ய சிவியார்கள் தோள்மே லெடுத்தார்கள்

## வழியனுப்புதல்

யானை குதிரை அணியணியாய்த் தான்நடக்க
ஆலாத்திக் காரி அடியாரு முன்னடக்க
தாரை தவிரி தவில்முரசு மல்லாரி
மூரிமுரல் வாத்தியங்கள் முழங்க நடந்தனரே
செய்ய தமிழ்மணக்குந் தென்மதுரை நாடுவிட்டு
நாடு நகரியும் நல்லபொன்னி யாறுவிட்டு

## காஞ்சியன் வருகையும் ஊர்மக்கள் அதிர்ச்சியும்

சென்றாரே மன்னவரும் தென்காஞ்சி நாடருகே
பாண்டிய ராசாக்கள் படைதான் வருகுதென்று
வேண்டுவோம் நங்குடிதான் வேறுமொரு நாட்டிலென்பார்
எங்கள் பெருமாள் இயலுடைய காஞ்சியனார்
இருந்தாரே யாகிலுமே(ர, இப்படியும் வாராதே
அஞ்சலென்பார் தானுமில்லை யானை குதிரையில்லை
வேலி யில்லாத வெளியிலப் பயிரதுபோல்
காலிபுக்குத் திஞ்னுங் கதையா யிருந்ததுவே
இன்று கண்டாய் காஞ்சி இறந்ததுகாண் என்பாரும்

## காஞ்சியனின் ...றுதல்

மற்றுமந்த நாட்டார் மலங்கும் அந்நேரம்
கலங்காமல் காஞ்சியனார் காளவிரு தூதுமென்பார்
உடலு முயிரும்போல் உற்ற மனுவேந்தன்
நாட்டுக்கு வாய்த்த நரசிங்க மூர்த்தி வந்தான்
கோட்டைப் பெரும்புலியான் கொற்றவர்கோ டாலிவந்தான்
தக்கவர்கள் கண்டன்வந்தான் சாமந்தகோ டாலிவந்தான்
என்றுசொல்லி நல்ல இயற்காள மூதினரே

## மகிழ்ச்சியில் மக்கள் செயல்

தேசம் மறந்தே போனதேன் காஞ்சியனே
ஆசையுடன் சென்று அனைவோருங் கும்பிடுவார்
சென்றுசென்று கும்பிடுவார் திருவடியைப் பூண்டுநிற்பார்
கோயில்கள் தானொலிப்பார் கோபுரத்தேர் வீதியெல்லாம்
தூற்பார் தெளிப்பார்கள் துப்புரவு செய்திடுவார்
தழைத்த மகிழடியில்ச் சங்கிலியைத் தானமைத்து
பைங்கொடியே உன்னைவிட்டுப் போந்தேன் பரதேசம்
நின்றஉங்கள் தேயத்து நிலைமை பிழைத்ததற்பின
கண்ணிரண்டுங் கெட்டுக் கருத்தழிந்து சூரியனை
புண்ணியனார் வாழுமந்தப் பொற்கோயில் மண்டபத்தே
அழைத்துவிட்டுக் கண்கொடுக்கும் ஆதியையுஞ் சென்றுகண்டு
நிலத்தில்கை வைத்துநல்ல நீம்சடையோ னைப்போற்றி
பிறத்தி சுகம்பெறவே பிரதெட்ச ணங்கள்வந்து
மீண்டு மெழுந்திருந்து மேகவண்ணக் கோயில்புக்கான்
அரையாத அம்பியுடன் ஆடாத மந்தசெக்கும்

வரையாத வண்ணக்கரி [1] மாரிப்பாஞ் சாலைகளும்
தூண்டா மணிவிளக்கும் துய்யசி வாலயமும்
பன்னு புகழ்மாறன் பதியோ டிருபதியும்
பண்டுபோற் சென்றுகண்டு பாதம் பணிந்தானே!
பாதம் பணிந்து நின்று பச்சைமுகில் மேனியனும்
வேதக் கொழுந்தும் விடைகொண்டே கொற்றவனும்
கோதையுடன் மன்னவனும் கோயிலுள்ளே தான்புகுந்தார்.

### பாண்டியன் மகள் திருமணம் நிறைவெய்தியது

# குறமாது திருமணம்

---

### கடவுள் வாழ்த்து

சீனியுந் தேனும் செழும்பாகு மாங்கனியும்
[2]ஆன(க)த லிப்பழமும் அவலுடனே தேங்காயும்
காரமணி எள்ளுருண்டை கடலை சிறுபயறு
ஈரப்ப லாச்சுளையும் இளநீருஞ் செங்கரும்பும்
சேரத் திரட்டி திருக்கலத்தி லேசொரிந்து
ஆர அமுதுசெயும் யானைமுக வேதியனே
முக்கண்ணன் மைந்தன் முருகனுக்கு முன்னோனே
விக்கினங்கள் தீர்க்கும் வினாயகனே முன்னடவாய்.

### காஞ்சியனிடம் பாண்டியன்மகள் மலைமிதுக்கம்பழம் வேண்டல்

வேந்தனுந் தேவியுமாய் வீற்றிருக்கும் வேளையிலே
மன்னர் பெருமாளே விண்ணப்பங் கேட்டருளீர்
அன்னம் இறங்குதில்லை அறவே தலைதியக்கம்
சிலைநுதலா ளப்போது தேசிகனோ டென்சொல்வாள்
மலை [3] மிதுக்கம் பழந்தேடி வரவேணு மென்றாளே.

### காஞ்சியன் பதில்

அந்த மொழிகேட்டு அரசனவ ளுக்குரைப்பான்
மந்திரியைப் போகவிட்டு வரவழைப்பே னஞ்சாதே

---

1. = ? 2. 'ஆனதவிற்பழமும்' என்றுளது
3. ஒருவகை வெள்ளரிப்பழம் போலும் (மிதுக்கை, மிதுக்காங்காய்).

## காஞ்சியனைச் சென்றுவருமாறு வலியுறுத்தல்

எந்தன் பிரானே யானொன்று சொல்லுகிறேன்
மந்திரிமார் போனாலும் வந்துதவ மாட்டார்கள்
நீரே நடந்தருளி நெடிய மலையேறி
தீரக் குறவர் திருநகரி யுட்புகுந்து
வண்டு மதுவுண்ணும் மலைமிதுக்கம் பழமதுவைக்
கொண்டுவர வேண்டுமென்று கொற்றவனை ஏவினளே.

## காஞ்சியன் மலைமிதுக்கம்பழம் கொண்டுவரப் புறப்படுதல்

மங்கை மொழிகேட்டு மன்னன் எழுந்திருந்து
செங்கனக மாளிகையில் சென்று புகுந்தானே
தொட்ட மிதியடியுந் தூய்யபசும் பட்டுடையும்
இட்ட திருநீறும் இலங்க நடந்தானே
சிங்கம் புலியாளி சிறந்தமலை தான்கடந்தான்
கொங்கு மலையுங் குடமலை யுங்கடந்து
நச்சுவிழி வள்ளி மலையருகே சென்றானே
[1] சிறுத்தைக் குரல்கேட்டு சிந்தை மிகக்கலங்கி
பொற்குறவர் சேரியிலே போனாரே காஞ்சியனார்.
கண்டார் மலைப்பழத்தைக் காஞ்சிப் பெருமாளும்
[2] அன்புமனைக் காகவென்று அறுத்து மடியில்வைத்து
[3] தாற்று மடிநிரம்பத் தார்வேந்தன் கட்டுகையில்

## கானக்குறவரிடம் அகப்படல்

கண்டு பிடித்தாரே கானப் பெருங்குறவர்
சென்று மலைப்பழத்தைத் திக்கெனவே தான்பார்த்து
தாரிக்குந் திண்புயத்தான் தன்காஞ்சி மன்னவனை
நாரறுத்துக் கட்டி நரபால பூபதியை
கொண்டுபோய் வேடர் குடியி லிருத்தினரே

## குறமாது சந்திப்பு

கண்டாள் மலைக்குறத்தி காஞ்சிப்பெரு மாளழகை
கண்டவுடன் மன்னன் கணையஞ்சுந் தான்தொடுத்தான்
வண்டார் குழலி மயங்கி அறிவழிந்து
மெய்யெல்லாம் புண்ணாகி மேலெழுந்த சிந்தையளாய்

---

1. சித்தை என்றுளது. 2. 'அவைபிரான் காற்க' என்றுளது.
3. சாற்று என்றுளது.

ஐயரே நீர்தாம் அறியாமற் கட்டிவந்தீர்
வேந்த னிவன்காணும் வினைசெய்ய எண்ணாதே
காஞ்சி புரமாளுங் காஞ்சிப் பெருமாள்தான்
[1] கன்னன் இவன்காணும் காவலனே தப்பாது
நெல்லுக் குறியாலும் நிமித்தக்குறி தன்னாலும்
பல்லிசொன்ன திசையாலும் பார்வேந்தன் தப்பாது
பொய்யாது யென்குறிகள் போர்வேந்தன் தப்பாது
விட்டுவிடும் அய்யரே யென்றாள் மலைக்குறத்தி
கட்டவிழ்த்து நீரவர்க்கு கட்டிக்கொடாதிருந்தால்
விட்டுவிடு வேனாவி யென்றாள் மலைக்குறத்தி
உள்ளமெத்த நொந்து உரைத்தாயே நீமகளே
கள்ளனுக்குப் பெண்கொடுத்தா பென்றுசொல்லிக் காசினியோர்
[2] வங்கிஷங்க ளுள்ளவற்கும் மரபிலுள்ளோர் தங்களுக்கும்
எங்கள் குடிக்கும் இழுக்குக்காண் என்மகளே
என்குறிகள் [3] பொய்த்தாலென் நெற்குறிகள் பொய்யாது
என்று குறமாது இயற்காஞ்சி மன்னவனை
ஒன்றுக்கு மஞ்சாதே யென்றங் கரவணைத்து
கட்டறுத்துக் கூட்டிப்போய் கானக் குறமாதும்
மட்டவிழ்தார் மன்னவனைக் பொய்கைநீ ராட்டிவைத்து
கொண்டுவந்து மன்னவனைக் குடியி லிருத்தினளே
அண்டர் பிரானே பசியாறு மென்றுசொல்லி
தேனுந் தினைமாவுந் தேக்கிலையிற் கொண்டுவந்து
மாயங் கலந்து கொடுத்தாளே மன்னவற்கு
மன்னவனார் தின்று மதிமயங்கி உள்மறந்து
தென்னவனு மப்பொழுதே சிந்தை மயலாகி
மன்றலணி திண்புயத்தான் மனையாளைத் தான்மறந்து
குறைக் குறவர் குடியி லிருந்தானே
அன்று புரமெரித்த அரனார் தனைநினைந்து
குன்று தனையுருட்டிக் குடில்வளைத்துக் கொற்றவனும்
காடுவெட்டி முன்பொறுக்கி கானத் தினைவிதைத்து
வேடர் புனந்தனிலே வீற்றிருந்தார் காஞ்சியனார்

## பாண்டியன் மகள் புதல்வனைப் பெறுதல்

மன்னன்வரு வானென்று மாதேவி அப்பொழுது
அன்ன முடையாளும் வழிபார்த்து வீற்றிருந்தாள்

---

1. கர்ணன் போலும் 2. வங்கிஷம் - வமிசம் 3. பொய்த்தாலும் என் நெற்குறிகள் என்பது பாடம்

பார்த்திருந்த காலமதில் பாலகனைப் பெற்றாளே
வாய்த்த மதலைக்கு வயதொன்று ஆனதற்பின்
பைங்கொடியாள் தன்னுடைய பாலகனு மப்போது
மைந்தன் வளர்ந்து வயதுமூன் றானதற்பின்
பைங்கொடியாள் தன்னுடைய பாலகனை அப்போது
வாசிக்க வேணுமென்று பள்ளிக்கு வைத்தாளே
காசினியோர் மெச்சக் கல்விகற்கும் நாளையிலே

## பள்ளிப் பிள்ளைகள் காஞ்சியன் மகனை இழித்துரைத்தல்

மாதேவி யார்பெற்ற மைந்தனையே அப்போது
ஓதுவிக்கும் பிள்ளைகள்தான் உதாசினமே சொல்லுவராம்
பெற்ற பிதாவை யறியாப் பிழைகேடன்
சற்று மறியான் தன்தகப்பன் தனையிவன்

## தாயிடம் வந்து உண்மையறிதல்

அந்த மொழிகேட்டு அவனொன்றும் சொல்லாமல்
தன்தாய் இருக்கும் இடத்தே நடந்தானே
அழுது விரைந்துசென்று அன்னையே நீரென்னை
பழுதுபட யாருக்குப் பெற்றெடுத்தீர் சொல்லுமென்றான்.
சாதிக் குலமுரைத்துத் தன்மையெல்லாந் தான்பேசி
ஓதுவிக்கும் பிள்ளைகள்தான் உதாசினமே சொல்லுகையால்
ஐயருட பேரெனுக்கு அன்னையரே சொல்லுமென்றான்
மெய்யாகி நீர்தான் [1] உண்மையுரை யீராகில்
உன்னையுங் கொல்வேன் நானும் உயிர்விடுவேன்
அய்யர் திருவாணை அன்னையரே சொல்லுமென்றான்.
மைந்த னுரைகேட்டு மாதா மனங்கலங்கி
சிந்தையுறக் கேள்மகனே செப்புகிறே னென்றாளே
தேசமியாக் குலத்துதித்த தென்காஞ்சி மன்னவன்காண்
பழுதுபடச் சொன்ன பாலகன்யார் சொல்மகனே
இரவி குலம்விளங்கும் இந்துநுதல் காஞ்சியன்காண்
அரசர் குலத்துதித்த அருட்காஞ்சி மன்னவன்காண்
என்னை மணம்புணர்ந்த இயல்காஞ்சி மன்னவன்காண்
உன்னை வயிற்றில் இருக்கையிலே உங்களய்யர்
மலைமிதுக்கம் பழந்தேடி வரவேணு மென்றேன்நான்
நல்லதென்று காஞ்சியனார் நன்நகரை விட்டகன்று

1. 'விசமுறை' என்றுளது

செல்வ முடனே திறல்காஞ்சி மன்னவனும்
அப்போது மன்னன் அருங்குறிச்சி கள்கடந்து
செப்ப முடனே திறல்காஞ்சி மன்னவன்தான்
ஏழு மலைகடந்து எட்டாம் மலைதனிலே
வாழைமர மாயுள்ள மலைதனிலே காஞ்சியனும்
காயும் பழமும் பறிக்கையிலே காஞ்சியனார்
மாயக் குறத்தி மருட்டிலகப் பட்டான்காண்.
அங்கே [1] இருக்கையிலே இங்கே பிறந்ததுகாண்.

## காஞ்சியனை அழைத்துவர ஏற்பாடு

அவரை யழைத்துவர ஆளனுப்பு மென்றாளே
மாதாவின் சொற்கேட்டு மைந்தனுமங் கேதுசொன்னான்
தீதாக நானுமொன்று செப்புகிறேன் கேட்டருளீர்!
அன்னையரே கேளும் அய்யருக்கு உம்முடைய
விண்ணப்பந் தீட்டு; விரைய வெழுது மென்றான்.
அய்யரும் நீரும் அனுதினமும் வாழ்ந்ததெல்லாம்
பொய்யெண்ணி மெய்யுரைத்துப் போதவே இப்பொழுது
உண்மை மொழியுரைத்து ஓலை எழுதிவிட்டால்
தன்மையுடன் அய்யர் சடுதியிலே வந்திடுவார்
நன்மைப் புலவரைப்போய் நானழைத்து வாறேன்காண்
மென்மையுட னேபுலவன் வெகுதீ விரம்போவான்
எழுமலையி லிருந்தாலும் இயற்புலவ னாராய்ந்து
நாளை யழைத்துவரச் சொல்லுகிறேன் மாதாவே
மாதாவே யுத்தன் மகிமையெல்லாந் தானெழுதி
தூதுவன் கையில் கொடுமென்று சொன்னானே
மலைக்கனிதே டிப்போன மன்னவனார் காஞ்சியற்கு
சிலைநுதலா ளப்பொழுது சீட்டெழுதுஞ் சிந்தையினால்
ஆணிப்பொன் னோலை தொழுதெடுத்தாள் ஆரணங்கும்
நேசமுடன் விக்கினவி னாயகனைத் தானினைந்து
ஆயன் தனைத்தொழுது அறுமுகனைத் தான்வாழ்த்தி
கங்கையுமை பாகனையுங் கருத்திலே தானினைந்து
மங்கையரும் பொன்னோலை மகிழ்ந்தே யெழுதலுற்றாள்

## பாண்டியன் மகள் விடுக்கும் கடிதம்

மண்ணிலுள்ளோர் வாழ வையகத்தோர் வாழவென்றாள்
மின்னும்வடி வேலெறிந்த மன்னவற்கே விண்ணப்பம்

1. இருக்கிறது என்றுளது.

கானக் குறத்தியுட கம்பத்தே சேர்புண்ட
மான மழிந்தருளு மன்னவற்கென் விண்ணப்பம்
ஆதரவு மேனியெலாம் அழிந்து வருந்துகிறேன்
காதலையுங் காணாத காஞ்சியற்கென் விண்ணப்பம்
காரார் குழலாருங் கன்னியருங் காணாமல்
வந்து மணிவிளக்கின் உள்ளே மறைந்திருந்து
தந்தா ரெனக்குத் தரியாத பேராசை
அன்று முதலாய் அடியேன் படுந்துயரம்
இன்றுமுதற் கொண்டுசொல்ல ஈராண்டு செல்லுமல்லோ
ஆசைக் கடலில் அடியேன் படுந்துயரம்
நேசத்தைத் தானினைக்கில் நெஞ்சுநெடும் புண்ணாகும்
கத்துங் குயிலுக்குங் காமசரந் தனக்கும்
நித்தந் தமியேன் நினைவு மறிவழிந்தேன்
இந்துகுலக் காஞ்சியனைப் பிரிந்தவின் நாழிகையில்
வந்தான் மதனன்[1] கருப்புச் சிலையேந்தி
அஞ்சு கணையும் அனலாகத் தானெரியும்
நஞ்சுண்ட கெண்டை யதுபோலே நானிருந்தேன்
விஞ்சுவிழி யில்லா முகம்போல் மிகமெலிந்தேன்
தஞ்சமென வொருவர் தாங்குவார் தானுமில்லை
வேழ[2] முகத்தில் விளாங்கனிபோ லாகிவிட்டேன்
வாழும் பெருமாள் மலைப்புயத்தில் சேராமல்
உங்களரு மனிதர் உறவின்முறை யெல்லோர்க்கும்
யாருமெனைப் பேசுதற்கு ஆக மிகமெலிந்தேன்
கத்துங் குயிலுக்குங் கன்னியர்கள் ஏசுதற்கும்
கோமான் தழலுக்குந் துயரமிக வாற்றேனே
திங்க ளிளம்பிறைக்கும் தென்ற லிளம்பிறைக்கும்
கொங்கையெல்லாம் புண்ணாகிக் குங்குமங்கள் கொப்பளிக்க
வஞ்சியர்க ளெல்லாம் வையகமே யேசுதற்கு
அஞ்சலென்பார் தானுமற்றும் அறவே மிகமெலிந்தேன்
பூபாலன் காஞ்சிப் புனக்குறத்தி யைப்புணர்ந்தால்
ஆரோதா னென்று அரசர் நகையாரோ
மன்னவனும் காஞ்சி மலைக்குறத்தி யைப்புணர்ந்தால்
இந்நிலத்தி லுள்ள இராசா நகையாரோ
மன்னன் கருங்கூந்தல் மலைக்குறத்தி யைப்புணர்ந்தால்
தென்காஞ்சி யூரார் சிரித்து நகையாரோ

---

1. மதனச்சிலை என்றுளது. 2. முண்ட எனல் நன்று.

வாடும் பயிரில் மழையில்லா வாறதுபோல்
ஆடுந் துரும்பதுபோ லாகினேன் மன்னவனே
தேயும் பிறைபோலே சிந்தையெல்லா முள்ளுருக
வாயும் வறண்டு மனமு மிகக்கருகி
குண்டக் குறத்தி கொடியிடையாள் தன்னருகே
சென்றிருந்து கொண்டாடச் சேனை நகையாரோ
தேசத்தின் பிள்ளையுங்கள் செல்வத் திருமகனை
ஏசுகள் தான்சொல்லி ஏசுதற்கு நான்மெலிந்தேன்
இப்போது புலவனுடன் எழுந்தருளீ ராமாகில்
அப்போ திருவாணை ஆவி விடுவேன்காண் !
ஓலைகண்ட அந்நேர மெழுந்தருளீ ராமாகில்
மைந்தன் திருவாணை மாளுவது நிச்சயமே
மண்ணாளுங் காஞ்சியரே ! மாதுநல்லாள் விண்ணப்பம்
எண்ணப்ப டாத துயரமெல் லாமெழுதி
விண்ணப்ப மாக முடித்தாளே மெல்லிநல்லாள்.
மங்கையும் பொன்னோலை மைக்காப்புச் சாற்றினளே
போரா ரயில்விழியாள் [1] புத்தியினா லேயெழுதி
மஞ்சனைய கூந்தல் மடவா ளிளமுலையாள்
ஐந்துசுற்றும் சுற்றி யடைவுடனே வைத்தாளே

## கடிதம் பெற்றுப் புலவன் புறப்படுதல்

பொன்னோலை தன்னைப் புலவன் தொழுதெடுத்து
நல்லதொரு பல்லி நலநிமித்தம் சொல்லுகையால்
நெல்லு [2] மறுகு முடித்தா னியற்புலவன்
நின்ற புலவனை நேரிழையார் தானழைத்து
சென்றழைத்து வாபுலவா சிந்தாத் திரைப்பயணம்
சென்று மலையேறிச் சேதியெல்லாங் காஞ்சியற்கு
ஒன்றுபட உரைத்து உண்மையெல்லாந் தான்பேசி
பங்கமறப் பேசிப் பருவத்தால் நீரிவரை
கொங்கையென்னுங் கம்பத்தே சேர்புண்ட கோமானை
நீங்காம லேபுலவா நீருடனே கூட்டிவந்தால்
ஆங்காண புலவா அப்பர் திருவாணை
சீராருந் தண்டுகுடை செங்கனகக் காஞ்சியனும்
நானே தருவிப்பேன் நற்புலவா உந்தனுக்கு
ஆரந் தருவேன் அழகுபணி நான்தருவேன்

---

1. 'புத்தகத்தி னாலெழுதி' என்றுளது. 2. 'மெருவு' என்றுளது.

ஊருந் தருவேன் உகந்தபணி நான்தருவேன்
சிங்கார மான சிறந்தபட்டு நான்தருவேன்
ஆழி தருவேன் அரியவயல் நான்தருவேன்
ஊழியெல்லா முண்டிருக்க உடமை பலதருவேன்
இத்தன்மை சொல்லி யியற்புலவ னைஅனுப்பி
எத்தன்மை யாலும் இங்கழைத்து வாபுலவா
விடைபெற்ற [1] பூசுரனும் மெல்லியலை விட்டகன்று
கொடைமிகுத்த காஞ்சியனார் கோயில்தனை விட்டகன்று

## புலவனும் அவன் மனைவியும் உரையாடல்

சென்று புலவன் சீர்மனையா ளைஅழைத்து
என்னையின்று மாதேவி ஏவிவிட்டா ளென்றுசொன்னான்.
அந்த மொழிகேட்டு அவன்தேவி யென்சொல்வாள்
எந்தன் பிரானே யானொன்று சொல்லுகிறேன்
என்னைத் தனிவைத்து இயல்வேந்தன் தன்னருகே
தன்னைசொல்லி யென்னைத் தனிவைத்துப் போனாக்கால்
மன்ன னிருக்கும் மலைதனிலே நீர்போனால்
குன்றக் குறத்திகள்தான் கூடி வழிமறித்து
[2] கண்விழிக ளால்மருட்டிக் [3] காயக்கம் பண்ணியும்மை
திண்ணமுடன் தேனும் சிறுகிழங்குந் தந்துமக்கு
வார்த்தை பலமொழிந்து மாயக் குறத்திகையில்
சேர்த்து வைத்துக் கொண்டுவிட்டால் திறல்வேந்தே
யேதுசெய்வேன்
மன்னர் பெருமாள் மகிழ்ச்சியுள்ள காஞ்சியனை
தேச நகராண்ட திறல்வேந்தர் மன்னர்தம்மை
மயக்குங் குறத்தி மாயம் பலகலந்து
இயக்கியே காஞ்சியனை இங்குவர வொட்டாமல்
மாயக் குறத்தியிட்ட மசக்கிலகப் பட்டானே
ஆய்வதுபோல் நீரும் அகப்பட்டுக் கொண்டதுண்டால்
நானேது செய்வேனென் நல்ல பெருமானே
ஆன புலவ னருள்வா னவனுடனே
பெண்மதியே நீயுரைத்தாய் பேதங்க ளெண்ணாதே
மதியில்லாக் காஞ்சி மலைக்குறத்தி கையிலேதான்
அதிகமாய் ஆசைகொண்ட அரசனென்று தானினைந்தால்

---

1. பூசுரன் = அந்தணன். 2. 'கணமுனிகளாய்' என்றுளது.
3. காயக்கம் — மருட்டுவித்தை.

மன்னவனைப் போலே மதியில்லையோ பெண்கொடியே
உன்னை மறந்து ஒரு நாளும் நில்லேன்காண்
பூவிற் றிருவனையாய் பூங்கமலத் தாளேகேள்
ஆவித் துணையே அணங்கேயென் னாரமுதே
செந்தாம ரைத்திருவே தேனே செழுங்கனியே !
எந்தனுயிர் அன்னமே ஏந்திழையே நீகேளாய் !
அஞ்சாதே நானுமங்கு ஒருநாளும் நில்லேன்காண்
நானும்வரு வேனென்றாள் நல்ல குலக்கொடியும்
தேனுண்டு மாவுண்டு தினைமவு மெத்தவுண்டு
போயங்கே நீர்நின்றால் பேய்அழைப்பா ரிங்குமில்லை
அஞ்சாதே யென்று அரவணைத்து (க்கைய) மத்தி
செழுந்தா வடம்புனையுந் தென்காஞ்சி யை அழைத்து
உகந்தருளு முன்னேதான் வருவேன்நீ யஞ்சாதே
மஞ்சார் குழலிதலை வைக்கோல் துரும்பெடுத்து
அம்மை திருவாணை அஞ்சாதே யாரணங்கே
உம்மாணை நானு மொக்க வருவேனோ
மன்னர் பணிவிடைக்கு வாணுதலே நான்போறேன்
உன்னை [1] யடைய ஒருமாதம் சென்றுவிடும்
யானை புலிகரடி அடவிகள் மெத்தவுண்டு
மான்மரைகள் சிங்கம் வரிவேங்கை யுண்டதிலே
உன்ஆணை என்ஆணை உறவின்முறை தன்னாணை
தானே வருவேன் நலங்காதே னாயகமே
சத்தியமுஞ் செய்து தலையில் அடித்துவைத்து
சித்திர மாக நடக்கத் துணிந்தானே

## வழியில் புலவன் கண்ட நிமித்தங்கள்

தொட்ட மிதியடியுந் துய்ய பசும்பிடியும்
இட்ட திருநீறும் இலங்க நடந்தானே
பாடும் புலவன் பதறி வழிநடக்கத்
தேடரிய நல்நிமித்தம் வந்துதலைப் பட்டதுவாம்
காடை யிடம்போமாய், கடினாயிடம் போமாம்
நீடுங் கருங்குரங்கு நெடுஞ்சாரை இடம்போமாம்
[2] துட்டனி ராசாளி தொண்ட ளிடம்போமாம்
அட்டையுடன் முஞ்சூறு ஆந்தை யிடம்போமாம்
பாலாழி யாமிருகம் பன்றி இடம்போமாம்

---

1. நடத்த 2 துட்டன்-தேள்.

வாலால் நெடிய வலியா னிடம் போமாம்
எத்திச்[1] சுரவி எருமை யிடம் போமாம்
போத்து வலம்போமாம்[2] புரிநா ரிடம்போமாம்
சொல்லரிய நாகம் தோற்றமாய்க் கண்டதற்பின்
நல்ல நிமித்தம் நலமாகக் கண்டதற்பின்
கன்னித் திருவழுதுக் கொத்ததொரு காஞ்சியனும்
மன்னவனும் நம்முடனே வருவதுமெய் யென்றறிந்து
என்று புலவன் இலங்க வழிநடந்து
பச்சை மலையும் பவளமலை யுங்கடந்து
நச்சிவிழி மலையும் நல்லமலை யுங்கடந்து
குன்றுச்சி யுள்ள குடுவைமலை தான்கடந்தான்
பேரால் கனகமலை பெரியமலை தான்கடந்தான்
மூங்கி மலைகடந்தான் முதியமலை தான்கடந்தான்
கனகஞ் சொரிந்த[3] கஞ்ச மலைகடந்தான்
குன்று மலையுங் குவட்டோ டுளமலையும்
சென்று நடந்து திறல்புலவன் போனானே
சென்று புலவன்தான் தேடியெங்குங் காணாமல்
மன்றலணி திண்புயத்தான் மலைக்குறவர் தானிருக்கும்
குன்றக் குறவர் குடியிருப்பைக் கண்டானே.

## காஞ்சியன் இருப்பிடம் அறிதல்

அந்நிலத்தில் கண்ட குறவர் தனையழைத்து
தென்னவனார் காஞ்சிக் குடிலேது செப்புமென்றான்.
சந்தனத்தால் கால்நாட்டிச் சாந்தகிலால் தான்சேர்த்து
சித்திரத்தால் வெண்கோட்டில் செந்நெல் தனைநிறைத்து
குங்குமத்தால்[4] வேய்ந்த குடிசையிலே இந்நேரம்
மங்கையுடன் வீற்றிருப்பாள் மன்னவனு மென்றானே.
நின்ற குறவன் இயம்பிய சொற்கேட்டு
சென்று புலவனுந்தான் தேடித் தினைப்புனத்தில்
மானும் மயிலும் வனக்கிளியுந் தின்னாமல்
யோவினங்கா ளென்றசப்தம் கேட்டுத் தமிழ்ப்புலவன்
தானே நடந்து தமிழ்ப்புலவன் கண்டானே.

---

1. சுரமதிபோலும் 2. ? 3. 'கரிந்சேர்' என்றுளது.

4. மேய்ந்த குடியிலே என்றுளது.

## காஞ்சியனிடம் கடிதத்தைக் கொடுத்தல்

கண்டளவில் காஞ்சியனை நகைத்தானே யிப்புலவன்
கொண்டுவந்த ஓலை கொடுத்தவனும் நின்றானே
ஓலை தனையெடுத்து ஒண்டொடியை விட்டகன்று
மாலைமுடிக் காஞ்சியனும் வாசித்துப் பார்த்தானே
வாசித்துப் பார்த்தவுடன் மன்னவனு மென்சொல்வான்

## காஞ்சியனின் வருத்தம்

மாயக் குறத்தி மருட்டிலகப் பட்டேன்காண்
கொங்கையெனுங் கம்பத்தே சேர்த்தாள் புனக்குறத்தி
மாயம் பலகலந்து மருந்து மிகக்கூட்டி
ஆசையினால் மெத்த அழுந்தினே னுன்புலவா
பேராசை தன்னாலே பெருக மெலிந்துவிட்டேன்
மங்கையரை விட்டகன்று மாயக் குறத்திகையில்
இங்குவந்து நானும் இருந்தே னிப்புலவா
காயமெல்லா மெத்தக் கனலா யுருகிவிட்டேன்
பேசி யிருக்கப் பெருந்துணையு மற்றுவிட்டேன்
பாசியி லிருந்து பழஞ்சங்கு போலஃனேன்
புரிகுழலாள் வரவிட்ட பொன்னோலை வாசகத்தால்
இருதலையுங் கொள்ளி எறும்பானே னேபுலவா

## புலவனின் அறிவுரை

பன்னு தமிழ்ப்புலவன் பாண்டியனுக் கென்சொல்வான்
மின்னுங் குழலாரை விட்டகன்று பெண்ணாளும்
பொன்னான புத்திரனை விட்டிருக்கப் போமோதான்
கொத்தார் குழலாரைக் கூடி யிருந்தாலும்
மைந்தன் தனைமறக்க ஆகாது மன்னவனே

## காஞ்சியன் தன்நகரடைய புலவனிடம் யோசனைகேட்டல்

இந்தக் குறமாதை விட்டுநீ ரிப்போது
போற்றும் பெருமாள் பூங்குறிச்சி மாநகரை
போற்றுந் தமிழ்ப்புலவா போமாறு செப்புமென்றான்.

## புலவனின் மதியூகம்

மன்னர் பெருமானே மதியுரைக்கக் கேட்டருளீர்
அன்னம் படைத்த அவர்குலத்தில் நானடியேன்

கல்லு மயிருங் கலந்து மிகப்போட்டு
பொல்லா தெனவே வெறுத்துப்போ வேனடியேன்
என்னை யழைக்க எழுந்தருளு மாப்போலே
மன்னவரே பூங்குறிச்சி மாநகரே வந்தருளும்
புத்தி யெனக்கருதிப் புழியனாங் காஞ்சியனும்
சித்திரமா கக்குறத்தி சிறுகுடியில் சென்றானே

## குறமாது சந்திப்பும் உரையாடலும்

கண்டான் குறத்திதனை கவிப்புலவன் என்சொல்வான்
வண்டார் குழலாரே வந்தேன்நா னித்தூரம்
தூர வழிநடந்து தொலையா மலையேறி
வீரப் புலிகரடி வேங்கையிருங் கானகத்தே
நடந்து வழிதொலைத்து நான்வந்தே னாயிழையே
தொடர்ந்து நடந்து தொலையா வழிதொலைத்தேன்
பதினெட்டு நாளுண்டு அடியேன் தலைமுழுகி
விதமாக எண்ணெய் தரவேண்டும் மெல்லியலே
புலவன் மொழிகேட்டுப் புனக்குறத்தி யப்போது
தலமுடன் எண்ணெய் நான்தரு வேன்புலவா
சிந்தை மகிழ்ந்து சினவேங்கைத் தோலுடுத்து
வந்து குடில்புகுந்து வாணுதலு மப்போது
வண்டணியும் பூங்குழலாள் மலைக்குறத்தி யப்பொழுது
கொண்டுவந்து எண்ணெய் அரப்புங் கொடுத்தாளே!
வாங்கி எண்ணெய்க் காப்பை மன்னவற்குத் தான்சாற்றி
தாங்கு தமிழ்ப்புலவன் தன்தலைக்கும் தான்வார்த்து
காவி விழிப்புலவா கடுகமுழு கென்றாளே!
வாவி யறியேன் வழியறியேன் மன்னவனே
நாடறியேன் இந்த நகர்தனையும் நானறியேன்
கூட எழுந்தருளிக் குளக்கரையைக் காட்டுமென்றான்
அல்லக்கா ணீபுலவா அரைதூர மில்லையது
கொல்லைதனக் குப்பிறகே குளக்கரைகள் தானுமுண்டு
இந்த மலைகடந்து இச்சுனைக்கு மப்பாலே
அருந்தாமல் நீரும் ஆற்றங் கரைதனிலே
இப்போ கடுக முழுகிவா நீபுலவா!
மல்லனைய திண்புயத்தான் மன்னர் பெருமானே
செல்லனைய திண்புயனே சேனைமன்னர் தன்கோவே
யானை புலிகரடி அடவிகளு மெத்தவுண்டு
வெட்டினா லும் அடிபோகா வேறே தனிப்போகேன்

எட்டுநாள் சென்றாலும் இருப்பேன் நான் இவ்விடத்தே
அந்த மொழிகேட்டு அருங்குறத்தி பொன்சொல்வாள்
வந்த புலவன் வழியறியா [1] னூரறியான்
பாடுந் தமிழ்ப்புலவன் பாண்டியனைத் தானறியான்
கூட எழுந்தருளிக் குளக்கரையைக் காட்டுமென்றாள்

## காஞ்சியனும் புலவனும் நீராடச் செல்லல்

குறத்தி மொழிகேட்டுக் கொற்றவனு மென்சொல்வான்
அரப்புடனே சீயக்காய் அடவுடனே தான்கொடுத்து
உற்ற புலவனுடன் சென்றான் குளக்கரையே
மன்னவனுங் காவலனுங் வாவிக்கரை மேல்வந்தான்
மன்னர் பெருமாளே விண்ணப்பங் கேட்டருளீர் !
மைந்தன் பிறந்து மகாசமத்த னாயிருப்பான்
இந்திரனும் தானும் இல்லையல்லோ கண்டீரே
செந்தாம ரைப்போல இருக்கின்ற மைந்தனை நீர்
வந்தாரும் போனாரும் மைந்தனையே பார்த்துநிற்பார்
பள்ளிக் கிருந்து பலநூலுங் கற்றறிந்தான்
மைந்தன் தனைமறக்க மனமெழுமோ மன்னவனே
சிவதேவி யென்னுந் திருவழகுக் கொவ்வாது
தேவி யிருக்குஞ்சிறை தேசமெல்லா மொவ்வாதே
அக்கசா லையெல்லாம் அருஞ்சிறைக ளாயிருக்கும்
நாடு நடுங்குதுகாண் நரபால பூபதியே
மாயக் குறத்திகையில் மன்னர் வரவழிந்து
தேசம் முழுதுஞ் சிரிக்கவுடம் பாவர்களோ
வார்த்தையொன்று சொல்லுகிறேன் மன்னவனே நீ கேளாய்
அன்னம் படைக்கும் அவர்குலத்தில் நானடியேன்
மன்னனென்று பாராமல் வார்த்தையொன்று சொல்லுகிறேன்
பொறுத்தருளும் பாண்டியனே பூபாலர் பூபதியே
அல்லக்கா ணீபுலவா அறிவல்லோ சொல்லுகிறாய்
நீ செய்த பிழைகளெல்லாம் நானேபொ றுப்பேன்காண்
மாயப் புலவனுடன் மன்னவன் பதிலுரைத்து
அங்கே பதிலுரைத்து அரசனுடன் காவலனும்
பொங்கி யரப்புமிட்டுப் பொய்கையிலே நீராடி
அங்கே மயிரெடுத்து ஆனகல்லுந் தான்முடிந்து
திங்கள்முடிக் காஞ்சியனும் சென்றான் புலவனுடன்

---

1. "னடியான்" என்றுளது.

## காஞ்சியனும் புலவனும் நீராடித் திரும்புதல்

மன்னவனும் பாவலனும் வந்தார் மனையிடத்தே
அன்னமிட வேண்டுமென அப்போ மலைக்குறத்தி
ஏழிசைக்கும் பாவலன்முன் இசைந்தே மலைக்குறத்தி
வாழை யிலையறுத்து வைத்தாள் புனக்குறத்தி
கைக்கு நீர்வார்த்துக் கலங்கழுவி நீர்மாற்றி
மைக்குவளைக் கண்ணாளும் வந்தமுது தான்படைத்தாள்
புலவனுக்குச் சோறுமிட்டுப் பூவைபுறங் காட்டியபின்
தலைமயிருங் கல்லும் தமிழ்ப்புலவன் தான்போட்டு
கல்லுங் கடித்தான் கருமயிருந் தானெடுத்தான்
வல்லியவள் கண்டு மனங்கலங்கி நின்றாளே
சந்தார்த் தடம்புயத்தில் தார்வேந்தன் காஞ்சியனும்
என்னரு மைப்புலவா திகைத்திருக்கக் காரணமேன்
மன்னர் பெருமாளே மயிர்கல்லு சோறுமுண்டால்
கண்காணா நாட்டடியேன் கபடமது நானறியேன்
செங்கனக ஓலையினை தேவரீர்க்கு நான்தரவே
மங்கை குறத்தி வயிராக்கிய மானாளே
இற்றைக்[1] கவதரித்தால் எல்லா வினையுமுண்டு
மன்னு மரசர்க்குக் சுற்றோர் சிறப்புடையோர்
எந்நிலமும் போற்றும் இராசாக்கள் வாசலுண்டு
உன்னிடத்தி லுண்டெனக்கு ஒவ்வாது உத்தமனே.

## காஞ்சியனும் புலவனும் தன் ஊர் திரும்புதல்

மெய்யாக்கி யேபுலவன் வெறுத்தவர்கள் போவதுபோல்
பொய்வார்த்தை சொல்லிப் புறப்பட்டுப் போனானே
எங்கும் புலவனைப்போய் யானழைத்து வாருமென்று
வாகுடனே காஞ்சியனார் வருந்தி யழைக்கலுற்றார்
பொற்புலவ னைத்தான் தேடிப் பிடிப்பவர்போல்
வாராய் புலவா வார்த்தைசொல்லக் கேள்புலவா
நில்லடா புலவா நான்வருமுன் போபுலவா
நில்லாய் புலவா நெடுந்தூரம் போபுலவா
வார்த்தைசொல்லக் கேள்புலவா வழிதொலையப் போபுலவா
அல்லக்கா ணீபுலவா யார்வரினும் போபுலவா
சொல்லக்கேள் நீபுலவா தொலைத்துவழி போபுலவா
பொல்லாத டாபுலவா போம்வழியே போபுலவா

---

1. கபதரித்தால் என்றுளது.

போடா புலவா போய்வாரும் நீபுலவா
வாடா புல்வா வார்த்தைசொல்லப் போபுலவா
1 பயில்பேசிக் காஞ்சியன்தான் பதறி நடந்தானே
சிங்கம் யாளி சிறந்தமலை தான்கடந்தான்
கொங்கு மலையுங் குடகுமலை யுங்கடந்தான்
பச்சை மலையும் பவளமலை யுங்கடந்தான்
கோளக வள்ளிக் கொடிமலையுந் தான்கடந்தான்
வண்ண 2 மரகதமும் வாழ்மலையுந் தான்கடந்தான்
குவட்டு மலையுங் கோடிமலை தான்கடந்தான்
செம்மலையுங் கல்மலையுஞ் சிறந்தமலை தான்கடந்தான்
நச்சுவிழி வள்ளி மலையருகே காஞ்சியனும்
நின்றுபின்னே பார்த்து நெடுமூச்சுந் தானெறிந்தான்
கண்ணிழந்த ஆவின் குணமானான் காஞ்சியனும்
தார்வேந்தன் தன்முகத்தைக் கண்டு தமிழ்ப்புலவன்
வாழ்வேந்தே யஞ்சாதே மன்னவனே அஞ்சாதே
நாளை யடியேன்போய் நற்குறத்தி வாழ்மலையில்
வாளனைய கண்ணாளை வரவழைத்து நான் வருவேன்
போர்வேந்தே நானும் புரிகுழலைத் தான்கூட்டி
கொண்டுவந்து நானடியேன் குறமகளைத் தான்கூட்டி
தேர்வேந்தே வாடாதே சிந்தனைத் தேறுமென்றான்
ஒன்றுபல பேசி இரவுபக லும்நடந்தான்
சென்று வழிதொலைத்துத் தேர்வேந்தன் காஞ்சியனும்
அன்று புலவனுடன் அரியவழி தான்கடந்தான்
கொண்டுவந்து காஞ்சியனைக் கொற்றவன்தன் பட்டணத்தில்
சென்று புலவனுடன் தென்காஞ்சி யுட்புகுந்தான்.

## ஊர்வந்த செய்திகேட்டுப் பாண்டியன் மகள் செயல்

சீராருங் காஞ்சிவந்த சேதிசொன்னார் மங்கையரது
மாராயப் பட்டு வழங்கினாள் மாமயிலும்
ஏழாந் தளத்தில் இருந்தருளு மேந்திழைதான்
தாழ இறங்கிவந்து தமிழ்ப்புலவன் தன்னைக்கண்டு
மங்கையர்கள் நாயகிதான் மாதேவி யென்சொல்வாள்
எங்கள் பெருமாள்தான் எங்கே புறப்பட்டார்
குறத்திதனை விட்டகன்று கொற்றவனார் வந்ததுதான்
பிற்புத்தி தன்னாலே விட்டகன்று வந்தார்காண்

1. —? 2. —?

வீரப் புலிகரடி வேங்கையுள்ள கானகத்தே
தூர வழிநடந்து தொலையா மலையேறி
வெயில்தனிலுங் கானலிலும் மெத்த மெலிந்துவிட்டேன்
பைய வழிநடந்து பாதியுடம் பாகிவிட்டேன்
அன்னங் கிடையாமல் அறவே மிகமெலிந்தேன்
மன்னவனைக் கொண்டுசென்று வந்தேனே வாழ்மயிலே
கொண்டுவந்தே னென்மேல் குறையில்லைக் கோதையரே
அண்டர் பிரானும் அடியேன்பின் வந்தார்காண்
வந்துநெடு நேரமுண்டு மன்னவனும் வாசலிலே
இந்துகல மானே இங்கே அழைத்தருளும்
அல்லக்கா ணீபுலவா அறிவிலையோ சற்றுனக்கு
எல்லோருங் கேட்க யானொன்று சொல்லுகிறேன்
சந்தனமுஞ் சாந்தும் சவ்வா தணிந்தவற்கு
எந்தன்பா லுடநாற்றம் பொறுக்குமோ பாவலரே
சுட்ட புலித்தோல் படுத்துக் கிடந்தவற்கு
எங்கள்பட் டுடைநாற்றம் பொறுக்குமோ பாவலரே
குன்றக் குறத்தி குடிபயி லிருந்தவற்கு
எங்கள்செம் பொற்கோயில் சேராது காண்புலவா
வம்பக் குறத்தி மனைதனில்சோ றுண்டவற்கு
எங்கள்சம் பாவரிசி தலைதியக்கும் மேபுலவா
பாடி யெழுந்தபரிப் பாண்டியனார் செய்தபிழை
அடியேனுக் காகப் பொறுத்தருளும் ஆரணங்கே
அல்லக்கா ணீபுலவா அழைத்தவற்குப் புத்திசொல்லும்
தோகை மயிலாரே சொன்னதெல்லா மெத்தவுண்டு
யாரை வெறுப்போம் அரசனார் செய்தபிழை
நீரே பொறுத்தருளு மென்றா னியற்புலவன்

## மன்னனை வரவேற்க மைந்தனை அனுப்பல்

மைந்தன் தனையழைத்து வார்விழிக்கு மையெழுது
கச்சைகட்டி முத்தியிட்டுக் காதில் கடுக்கனிட்டு
பல்லக்கி லேற்றிப் பால்வெண்சா மரம்வீச
மூப்பிமார் தாதிமார் முன்சூழப் பின்சூழ
உங்களய்யா வந்து ஒருசாம மாச்சுதென்று
சென்றழைத்து வாருமென்னத் திருமகனை ஏவினளே

## மைந்தனின் ஐயமும் மங்கையின் தெளிவும்

என்னமொழி சொன்னால் யானேது சொல்வேன்நான்
மற்றொன்றும் சொல்லாதே மன்னன் திருமகனே

உன்னை வயிற்றில் இருக்கையிலே எங்களய்யா
மலைக்கனிதே டிப்போன மன்னவனார் அம்மருகே
அந்தக் கனியைத் தரவேண்டு மென்றுசொல்லி
தந்தை மடியைப் பிடியுமென்றாள் தையல்நல்லாள்
அன்னையரே நீர்தா மறியாமற் சொன்னீரே
இந்த மொழிகேட்டால் அய்யர்வெக்கித் தான்விடுவார்
நின்றுநெடு மூச்செறிந்து நெடுநேர மானதற்பின்

## தந்தை மகன் சந்திப்பு

சென்றே குமாரன் திருக்காலில் போய்விழுந்தான்
மைந்தன் பணிந்துவிழ மன்னர்பிரா னென்சொல்வான்
வழியி லொருநெதியங் கண்டவர்போல் மன்னவனும்
தெங்குபுகழ் மன்னன் திருஉச்சி மோந்துகொண்டு
மைந்தன்தனைத் தானெடுத்து மார்பி லுறத்தழுவி

## அரண்மனையில் மன்னனும் தேவியும் சந்தித்தல்

மைந்தனுங் காஞ்சியனும் மாளிகையில் சென்றானே
பட்டால் அலங்கரித்துப் பவளத்தால் கால்நிறுத்தி
முத்தால் சமைத்த முழுநீல மாளிகையில்
மன்னர் பெருமாள் மணிக்கட்டில் மேலிருந்தார்
அன்றுடுத்த ஆடை களைந்துமுன்னே போட்டாளே
ஆடை யழுக்குகண்டு அரசர்பிரா னென்சொல்வான்
உம்மாலே பட்டது உலகறியப் பட்டேன்காண்
செட்டியென்று நானுந் திரிந்தேன் சிலகாலம்
தட்டானை அண்ணனென்று தார்குழலே நானிருந்தேன்
கட்டியென்னை யானைமுன்னே போட்டதுவு மும்மாலே
கானக் குறவர்கையில் கட்டுண்டேன் உம்மாலே
காட்டில் கிழங்குங் கதலிச் சிறுகிழங்கும்
தேனுந் தினைமாவுந் தேக்கிலையில் தின்றேன்காண்
அரசர் குலத்தில் அறிவழிந்தே னும்மாலே
பட்டவைகள் சொல்லப் பாரேழும் போதாது
1 உமக்காடை யுடுத்தது ஒன்றுமல்லோ ஆரணங்கே
மன்னன் மொழிகேட்டு மாது மனமகிழ்ந்து
திக்கெனவே சென்று திருக்காலில் போய்விழுந்தாள்.
மாதை யெடுத்தணைத்து மன்னர்பிரா னென்சொல்வான்

---

1. = ?

பட்டது யாங்களெல்லாம் படிப்படியே சொல்லுகிறேன்
முன்னாள் எழுத்துப் படிகாணும் மொய்குழலே
என்று சொல்லிக் காஞ்சியனார் ஏந்திழைக்குந் தானுரைக்க
கொற்றவருந் தேவியருங் கூடினார் பஞ்சணைமேல்
கூடி யிருந்து குவலையங்கள் தானானாள்.

## காஞ்சியனைப் பிரிந்த குறமாதின் துயரம்

மன்னவரைக் காணாமல் மலைக்குறத்தி பார்த்திருந்தாள்
காஞ்சியனார் போனவன்றே கானக் குறமாதும்
பூஞ்சோலை மீதிருந்து புலம்பலுற்றாள் பூவைநல்லாள்
அஞ்சு வயதிலே அடியே னுடன்கூடி
வஞ்ச நினையாமல் மலரணைமேல் வாழ்ந்திருந்தோம்
எந்நிலமும் போற்றும் இராசாவின் தேவியென்று
மன்னும் புனக்குறத்தி மங்கையற்கு மேலாக
சங்கு மணியுந் தாளத்தில் நல்மணியும்
தங்க வளையோலை தோடு மெனக்களித்து
மாணிக்கம் நீலம் வயிரம் வைடூரியமும்
ஆணிப்பொன் ஆபரணம் அடியேன் தனக்களித்து
பொன்மணி மேகலையும் பட்டு மெனக்களித்து
என்மருங்கு தன்னில் இருண்டவே தான்போட்டு
யெதித்த முத்து மிறுகமத மெல்லணைமேல்
உயிரு முடலும் ஒன்றாய்த் தழுவியபின்
உன்னைப் பிரியேன் ஒருகாலு மென்றுசொல்லி
என்னைத் தனிவைத்து இயற்புலவன் சொற்கேட்டு
நேசமும் பேச்சும் நிச்சயமுந் தான்மறந்து
பூசையு மன்பும் மறந்து போனாரே
ஒருவ ரிருக்கும் ஒருசாண் பலகையின்மேல்
இருவ ரிருந்தோம் இரணமுள்ள காலமெல்லாம்
பலகை அறுசாணாம் பன்னிருசாண் கட்டிலின்மேல்
இருவ ரிருக்க இரணமற்று விட்டோமோ
பொன்மலையை விட்டுமக்குப் போகத் திருவுளமோ
சாந்தால் குறையாச்சோ சந்தனத்தால் தாழ்வாச்சோ
போந்த சவ்வாது புனுகுமிகப் போதாதோ
சொற்பெரிய காச்சுண்டை சொல்லரிய கற்பூரம்
வெற்றிலையால் தாழ்வாச்சோ வேந்தர் பெருமானே
மாவின் கனியிலையோ வாழைக் கனியிலையோ
முந்திரிகை மென்கனியும் மூங்கில் சிறுதேனும்

மந்தித்தினை மாவிலையோ மாவின் கனியிலையோ
விட்டாழந் தேனிலையோ விளாவின் கனியிலையோ
ஏது குறையாய் எனைமறந்து போனாரே
நித்த மலர்செறியும் பூங்காவில் தானுறைந்து
வார்த்தை தனைமறந்து போனாரே காஞ்சியனார்
யானை அருந்தும் விளாவின் கனியதுபோல்
என்மேனி இருக்க உயிர்வாங்கிப் போனாரே
காவிலுமைக் கண்டேனே காதல்மிகக் கொண்டேனே
பாவிமயல் விண்டேனே பனைமடற்கை கொண்டேனே
அன்புசெய்ய மாட்டேனோ அந்தரமஞ் சூட்டேனோ
இன்பநலங் காட்டேனா இங்கிதக்கூத் தாட்டேனோ
கலவிசெய்ய வாரீரோ காமவிடாய் தீரீரோ
இவ்விடத்தே வாரீரோ இங்குமுகம் பாரீரோ
கொங்கைக் குடமு மிதட்கோவை மருந்தளித்தால்
அங்கை யுறவளை அல்குற்பாம் பாட்டேனோ
காமன்னர் மனையைக் கட்டளையிட் டீரானால்
சோமன் றனைப்பிடித்துச் சூட்டரவு தீப்பேனோ
ஒல்கு மிடைதுவள ரோம வரிப்பாந்த
அல்கு மிசையே அமுதசல ராசிபொங்க
ஆவியே ஆவிக் குறுந்துணையே ஆசைகொண்ட
பாவி யெனைமறந்து போவர்களோ பாண்டியனே
ஐயோ விரக மயலால் முடியாது
பைய வாவென்று பகர்ந்தால் பழுதாமோ
ஆற்ற முடியா தரிகரி யானாலும்
நேற்றை நிலவை நெருப்பாக வைத்தீரே
சுற்றும் வளைகழற்றித் துயிலும் பறித்தெறிந்து
பித்தளையை வைத்தகன்று போனார் பெருமாளும்
தோற்றம் பதிபோலத் தொல்லுலகில் வேறாத
காற்றுமண லும்வீச வைத்தாரே காஞ்சியனார்
தேரை யிருந்த தேங்கனித்த நீரதுபோல்
என்பாரத் தனத்தில் பசும்புண்ணை வைத்தாரே
என்மேனி யிருக்க உயிர்வாங்கிப் போனீரே
என்று குறமாது இருந்தழுத சொற்கேட்டு

## குறமகளின் துயர்மாற்ற பெற்றோரும் தோழியரும் முனைதல்

மண்ண லடுங்குழலாள் மாதாவும் தோழியரும்
சென்றிருந்து செங்கமலக் கண்ணீர் துடைத்தெடுத்து

ஒன் றுக்கு மஞ்சாதே உள்ளதெல்லாம் உள்ளதுகாண்
மன்னார் குழலாற்கு மனந்தேற்றி யென்சொல்வார்
இன்னும் இரணம் இருவற்கு முண்டானால்
மன்னவனும் நாளை வருவதுமெய் யென்றாரே
ஆங்காணு மாதாவே ஆகா மொழியுரைத்தீர்
போங்காலம் வைத்தபொருள் வாங்குவரோ பூபாலா
என்னை மணஞ்செய்து எருந்தருளிப் போனவரை
என்மன்னன் தனைக்காணப் போறேன்காண் மாதாவே
அல்லக்கா ணியமகளே ஆகா மொழியுரைத்தாய்
குன்றக் குறத்தியொரு கொற்றவன்பின் னேயெழுந்து
தாயு முடப்பிறப்புந் தந்தையையும் விட்டகன்று
வந்தா ளொருத்தியென்று வையகத்தோ ரேசாரோ

## குறமகள் காஞ்சியனைச் சென்றுகாண முடிவெடுத்தல்

நன்றாகச் சொன்னீரே நலமுடைய மாதாவே
ஒன்றாக வையகத்தி லுள்ளபடி கேட்டருளாய் !
மண்முழுது மாண்டிருக்கும் மன்னன்மக ளானாலும்
பெண்ணிருந்த வீட்டில் பிழைவருங்காண் மாதாவே
அப்படியே ஆனாலும் அய்யருக்கும் அண்ணருக்கும்
மைப்போதுங் கண்ணாளே வடுச்செய்தல் நன்றலவே
வாழ்விழந்து மாதாவின் மனையி லிருப்பதிலும்
தா(ழ்வே)வந் தாலுமஞ்சேன் தன்கணவன் தன்னுடனே
தாயே யெனைவிலக்க வேண்டாந் தவிறேன் நான்
நான்போய்நல்க் காஞ்சியனைக் கண்டொழிய மீளேன்காண்
தோழிமார் தன்னைத் துயர அருகழைத்து
காஞ்சியனைக் காணவென்று போறேன்காண் தோழியரே
அன்னையும் [1] பிதாவும் அறமெலிந்தால் நீங்களெல்லாம்
கன்னியர்க ளெல்லாங் காரியங்கள் சொல்லுமென்று
என்னுடைய அய்யரவர் என்னை நினைத்தாலும்
அன்னையு முங்கள் அடைக்கலங்காண் ஆயிழையே
மஞ்சனைய சாலை மணவறையி லுட்புகுந்து
பெட்டகத்தை வாங்கிப் பிரியமுடன் தான்திறந்து
பட்டெடுத்துச் சாத்திப் பணிச்செப்புந் தான்திறந்து
காலாழி பீலி கனக வளைச்சிலம்பும்
மேலொழி தண்டையுடன் மிக்கவிரு பாடகமும்

---

1. 1 தாயும் ' என்றுளது.

கையில்மணி மோதிரமுங் கனக வளைச்சவடி
காறையுடன் நாஹும் கனகச் சிலம்பணிந்து
கூறசெம்பொற் கச்சணிந்து கொங்கைதனி லேயணிந்து
மாணிக்க நீல மணிக்கனங்கப் பாடகமும்
ஆணிப்பொன் மேலை யழகுடனே சாத்தினளே
காதிற் றிளப்பமுடன் சாத்தரிய முத்துருவி
நெற்றிக் கிசைந்த நிரைத்தமணிக் கோர்வையுடன்
கற்றைக் குழல்மீது கடைத்தாழைப் பூமுடிந்து
சீரார் தனத்தில் செழுங்குங்கு மம்பூசி
துங்க வடமுடையத் தோழிமா ரெல்லோரும்
சந்தனமுஞ் சாந்தும் சவ்வாதுங் கொடுத்தனளே
கஞ்ச மலத்திருவின் காரியமுங் காரிழையார்
பஞ்சவர்ணக் கிளியும் பாங்கிமார் கைகொடுத்தார்
சீதேவி யென்னுந் திருவமுதக் கொவ்வாது
மாதாவின் கையில் மடிச்சீலை கைகொடுத்தார்
மாதாவின் காலில் மலர்தூவித் தெண்டனிட்டாள்
வேதா விதித்த விதியை நினைந்துகொண்டு

## காஞ்சியனைத் தேடிப் புறப்படுதல்

போய்வாறே னென்று புறப்பட்டாள் பூங்கொடியும்
மாது நடந்த வழியிலெதுப் பட்டதுவே
தண்டை சிலம்பு தகுதிகென வேமுழங்க
விண்டமொழி குழற மெல்லிடைகள் தான்சுவள
கையில் வளைகள் கலீரென்று தான்புலம்பி
மெய்யில் மடிக்க மேவி நடந்தனளே
வள்ளியம்மை தன்னை மனதுதனி லேநினைந்து
கீதமொழி வாய்வசனங் கேட்டு நடந்தாளே
ஆடும் மயிலினங்காள் என்னாவி தனைப்பறித்து
பாடும் புலவன்பின் போனவரைக் கண்டீரோ
தென்றல்காள் மாடைப் புறாவின் குருகினங்காள்
தென்காஞ்சி மன்னவனைத் தென்னவனைக் கண்டீரோ
காமன் வளர்த்துவிட்ட காமனுக்குக் கார்குலமே
கோகுலமே யென்னுடைய கொற்றவனைக் கண்டீரோ
1 செங்கோல் கொண்டு தேசமெல்லா மீடேற்றும்
வண்ணப் புனத்தில்வந்த மன்னவனைக் கண்டீரோ

---

1. 'சென்னறந்திர' என்றுளது

கொக்கினமே நாரையே கோகுலமே தாராவே
தக்கழ நக் காஞ்சியனார் தாம்வரவுங் கண்டீரோ
மூக்கு நெடிய முழுநாரைக் குஞ்சினங்காள்
வார்க்கும் வடிவுமுள்ள மன்னவனைக் கண்டீரோ
சிவந்தமுகி லன்னமே செங்கால்நா ரைக்குலமே
பாதங்கள் காணவைத்தப் பாண்டியனைக் கண்டீரோ
காடைகவு தாரீரே காடைகப் புள்ளினமே
பாடுபட வைத்ததொரு பாண்டியனைக் கண்டீரோ
திணைக்குருவி யன்னமே சிலப்பறவைப் புள்ளினமே
தென்காஞ்சி போனவழி கண்டீரோ நீங்களெல்லாம்
அருவிசெறி முகத்தில் யானைக் குலத்தினமே
உயிரிருக்க நெஞ்சுகொண்ட உத்தமனைக் கண்டீரோ
வேங்கை வரிப்புலிகாள் வெண்மையுள்ள சேவகனே
ஆங்காரந் தான்குறைத்தென் ஆண்டவனைக் கண்டீரோ
காட்டுக் கருமாவே கரடியே கஞ்சுகமே
வீட்டில் இருட்டடைத்த மீனவனைக் கண்டீரோ
மானே மரையே மருவங் கலையினமே
ஈயிருக்கத் தேன்பறித்த இராசாவைக் கண்டீரோ
ஒட்டைக் குலமே ஓடிவரும் நாயினமே
கட்டைச் சிகப்பனொரு காஞ்சியனைக் கண்டீரோ
ஓனாய் நரியினமே ஒளிக்குங் குளுநரியே
புண்தனக்குக் காரம்வைத்த பூபதியைக் கண்டீரோ
என்று குறமாது ஏங்கி வழிநடக்க
மன்றார் குழலார்தன் வார்த்தை புழுகொழுக
வாசலக் குழலில் மலர்தனக்கு வண்டயர்ந்து
நேசமுடன் அமர்ந்தார் நீழைக் கதவாக
நீலக் கயல்விழியார் நீரோடிப் பூங்குழலின்
கோலத் தனத்தில் நடுவே குதியாய்
சுறுக்கினங்கள் மூக்கினங்கள் தாழ்ந்து குழலசைய
துங்கப் பசுங்கழையை வென்றதிருத் தோளசைய
கொங்கைக் குவடசையக் குங்குமத்தின் தோடசைய
உள்ள மசைய ஒளிகனகத் தோளசைய
வள்ள லசைய வனக்குறத்தி வந்தாளே
வந்தாள் மலைக்குறத்தி வாழும் மலைகடந்து
தென்னாருஞ் சோலை சிறுகுறிஞ்சி கண்டாளே
அயலாரும் வேல்விழியார் அந்நிலத்தி லேவாழும்
மயிலேறுஞ் செவ்வேல் மலர்ப்பாதம் போற்றினளே !

தஞ்சமத்தா ளென்தனையே தான்பிரிந்த மன்னவனை
காஞ்சிப் பெருமாளைக் காண்பேனோ காவலனே
கருதி மனங்கருகிக் காதவழி தான்கடந்தான்
மருத நிலத்தில் மலைக்குறத்தி வந்தாளே
வந்து புகுந்தாள் மருத நிலந்தனிலே
இந்திரனார் பாதம் பணிந்தாளே ஏந்திழையும்
மன்னர் பிரானும் வழியறியான் காடறியான்
கவிப்புலவன் பின்போன காஞ்சியனைக் கண்டீரோ
என்று குறமாது இந்திரனா ரைப்போற்றி
நன்றிரியு மென்று நடந்தாள் வனக்குறத்தி
நடந்து வழிதொலைத்தாள் நல்லதொரு காதவழி
சென்றுநெய் தல்மீதே சேர்ந்தாள் மலைக்குறத்தி
நெய்தல் நிலத்தில் நெடுஞ்சுரனைத் தான்போற்றி
போனான் புலவனுடன் பொற்காஞ்சி மன்னவனே
தேடியே போறேன்நான் தென்காஞ்சி மன்னவனை
என்று குறமாது ஏங்கி வழிநடந்தாள்
நடந்து தொலைத்தேழு நாழிகையில் தானடக்க
கானக் குறத்திகொடும் பாலைநிலங் கண்டாளே
பாலை நிலத்தில் பகவதியைக் கண்டாளே
கண்டு பகவதியைக் கைதொழுது காரிகையும்
ஆலைப் [1] பழுத்ததீய அந்நிலத்தில் வாழ்ந்திருக்கும்
மாலைப் புனமழித்த மன்னவனைக் கண்டீரோ
சீராரும் பூங்கொடியும் சென்றா ளிடைதுவள
காராரும் பூங்குறிச்சி கண்டுவந்து தேறினளே
கண்டாள் குறமாது கார்குலமுஞ் சோலைகளும்
விண்டிரியுஞ் சோலைகளும் மெக்கக் குலப்பயிரும்
விஞ்சுமலர்ப் பாளைகளும் வெறிபுனமுங் கண்டாளே
மல்லிகைசெவ் வந்தியுடன் மாமகிழும் பிச்சிகளும்
தைய நுதலாள் தயவுடனே கண்டாளே
சோலை தனில்வாழுஞ் சூதனைய கொங்கைநல்லாள்
சாயலுக்கு ஒத்து தடந்தோற்றுப் போனதுவே
அன்ன நடையார் திருமுகத்துக் கொவ்வாமல்
வானில் கலைமதியும் வானுலகந் தேய்ந்ததுவே
வானிலத்துக் கெல்லாம் மலைக்குறத்தி வாள்விழிக்கு
கானகதந் தேய்ந்து கடந்தோடிப் போனதுவே

---

1. = ?

அம்பனைய கண்ணாள் கரும்புருவக் காவல்கண்டு
வேப்பிலையு மஞ்சிச் சருசாய்த் திரிந்ததுவே
தெங்குபுகழ் மானார் திருமுகத்தைக் கண்டிருந்து
அம்புலியு மீள அலைந்தோடிப் போனதுவே
பொன்பவள வாயார் திருவழகுக் கொவ்வாமல்
அம்பொன் முருக்கிலைப்பூ அங்கோடிப் போனதுவே
அம்பனைய கண்ணாள்தன் பல்லழகுக் கொவ்வாமல்
அழகாங் கடலில்முத் தழுகி ஒழுகியதே
பாகா மொழியார் பசுங்கழுத்துக் கொவ்வாமல்
பூங்கமுகு வெல்லாம் பூரிகானஞ் சேர்ந்ததுவே
கஞ்சமலர் மானார் கயலழகுக் கொவ்வாமல்
காந்தள் மலருங் கருகி உலர்ந்ததுவே
காவை மலர்க்குறத்தி கரடுதனக் கொவ்வாமல்
செவ்விளநீர் கொங்கை சிதறி விழுந்ததுவே
செல்லையக் கண்ணாள் திருவயிற்றுக் கொவ்வாமல்
ஆலிலையு மஞ்சி அருங்கொப்பி லானதுவே
காரார் குழல்மானார் கருதிய நுண்ணிடைக்கு
நூல்கள் பழஞ்சி நுடங்கியகா வானதுவே
பாகனைய தேன்மொழியாள் பவ்வமுட னல்குலுக்கு
நாகமெல்லாந் தோற்று நஞ்சுதனைக் கவ்வியதே
மானார் திருக்குறங்கு வன்வடிவுக் கொவ்வாமல்
வாழைமர மானதெல்லாம் வனகானஞ் சேர்ந்ததுவே
முண்டகத்தில் மானார் முழங்காலில் பெய்யழகை
கண்டலவ னஞ்சிக் கழியில் விழுந்ததுவே
காரார் குழலார் கணைக்காலுக் கொவ்வாமல்
சீரார்வி ராலினங்கள் சென்றுகுளம் பாய்ந்ததுவே
பண்ணார் மொழியார் பாதநடை கண்டிருந்து
தண்ணீர்க்குள் மீனெல்லாந் தலைநீட்டிப் பார்த்ததுவே
தண்டலையும் பொய்கைகளுந் (தவழ்ந்து மீண்டதுவே)
வண்டலையுங் கூந்தல் மகிழவந் தாளவளை
பார்த்துக் குறமாது பையவழி சென்றாளே
கன்னல் பறிப்பதுவும் (கழுநாற் றெடுப்பதுவும்
செந்நெல் நடுவதுவும் சேர்த்தகளை (பறிப்பதுவும்)
தண்ணீர் விடுவதுவும் தானங் கடைப்பதுவும்
பார்த்துக் குறமாது பண்புடனே பார்த்துநின்றாள்
வயல்கள்நடுங் கீழ்க்குலத்து மாதரெல்லாங் கூடிவந்து

புயலழகு மாணாரைக் கண்டுநின்று போற்றினரே
வந்த குலத்தானை மாயமகள் பார்த்துநின்று
இந்தநக ரின்பேர் சொல்லெ ன்றாள் ஏந்திழைதான்
கேட்டருளுந் தையலுக்குக் கீழ்குலத்தோ ரெ(ல்லோரும்)
வாட்டந் தவிழ்ந்து மதிமயங்கித் கள்ளாடி
வீட்டி லிருந்தபொருள் போனவர்கள் (நிற்பதுபோல்)
தலைவன் தனைப்பார்த்துத் தான்திரிவார் (தங்களது)
பொன்னான மேனியெல்லாம் போய்வா (டுர்மங்கையரே)
முண்டகப்பூ போலே முகம்வாட (வந்தீரே)
கண்டநிகர் சொல்லுடனே கவியினையுந் தான்கோர்த்து
ஏதுக்கு நாச்சி யெழுந்தருளிச் சென்றாரே
கேட்டருளும் வையகத்தில் கீழ்குலத்தி லுள்ளவரே
ஏட்டி லெழுத்தின் படிகாணு மேந்திழையே
உலகுதன்னில் சுந்தரனார் மன்னர் தம்பிலொருவன்
தார்வேந்தன் காஞ்சியனார் வந்து மலையேறி
வெள்ளத்தில் மூழ்கும் மிருகந் (தனை காக்க)
மெய்போலே பொய்பேசி மெய்யாக வந்தாரே
ஏந்திழையாற் குண்டான இன்(னல் தனைநீக்க)
அன்புந் திறமு மடியேனுக் கேசந்து
என் ஆவி பறித்து அரும்புலவன் பின்போன
பாவியெனுங் காஞ்சியனைத் தேடிவந்தே (னித்தூரம்)

## குறமாது காஞ்சிநகர் அடைதல்

ஆனால் இதுவும் அவன்பதிகாண் ஆரணங்கே
தேன்மருவுஞ் சோலை திருக்காஞ்சி ஊரிதுவே
என்றுசொல்லி நீர்போம் இதுவே வழியுமக்கு
மன்றலணிச் சோலை மலைக்குறத்தி வந்தாளே
வேதியரை விட்டு விரைய நடந்தாளே
விரைய நடந்துவந்து வீதிதெரு வானதற்பின்
சந்தனமும் குங்குமமும் சாதிப் பலசரக்கும்
பட்டுடனே வெள்ளைப் பலபுடவை விற்குமந்த
செட்டித் தெருவழியே சேயிழையும் வந்தாளே
அன்னம் படைக்கும் அருள்மிக்க வள்ளாலர்
தன்னை அகன்று குறமாது கடந்தாளே

அத்தெருவுந் தான்கடந்து அன்ன நடைமாது
அடுத்தார் தனைக்கெடுக்கும் ஆண்டவனை வெட்டிவிக்கும்
மீண்டும் புறங்காட்டும் கம்படியார் தெருக்கடந்து
நாவிக் கருங்குழலார் நறுங்கமல மேனிநல்லாள்
சேவிக்கும் பெண்கள் தெருக்கடந்து சென்றாளே
மல்லனைய திண்புயத்தார் மாச்சாத்து (வாணிகனின்)
செல்ல நகையார் தேசிகனார்க் கொவ் (வாதோ)
கோவலனைக் கொன்ற நெடும்பாவி (தன்குலத்து)
கம்மாளர் தன்தெருவுங் கடந்தாளே கா(ர்குழலாள்)
வெட்டிப் பறிப்பதுவும் மேல்புடவை தானுரியும்
துட்ட மறவர் தெருவுங் கடந்தாளே
வண்ணப் புடவை வகைவகையே நெய்துவிற்கும்
சேணியர் தங்கள் தெருவுங் கடந்தாளே
பத்தொரு கோடி பணமிசவுண் டானாலும்
செத்த னெனக்கிடக்குஞ் சிங்காரப் பார்ப்பார்கள்
அந்தத் தெருகடந்து ஆயிழையும் போனாளே
சென்றுசென்று சேமனுடன் சேர்ந்த படைபொருது
துன்மையிலுந் துய்யான் குலத்தெருவே போனாளே.

## குறமாது வண்ணான் வழிகாட்ட அரண்மனையை அடைதல்

கண்டானே ஏகாலி கன்னித் திருவடியை
எங்குநின்று நாச்சி எழுந்தருளிச் சென்றாரே
எந்நிலமும் போற்றும் இந்துகுலக் காஞ்சியனார்
மலைமிதுக்கம் பழந்தேடி அங்குவந்த மன்னவன்தான்
பாவியென்னுங் காஞ்சிப் பதிசொல்லாய் வண்ணானே
அஞ்சாதே நாச்சி அடியேன் அரண்மனைக்குள்
சாத்துப் படிகொடுக்கப் போறே னடியேனும்
என்னுடனே வந்தால் இராச்சியத்தில் ஒவ்வாது
வண்ணான்பின் போனால் வண்ணாத்தி என்பார்கள்
முன்னே குழைபோட்டுப் போறே னடியேனும்
அந்தக் குழைவழியே வந்தருளும் ஆரணங்கே
வண்ணான் முன்போக வனக்குறத்தி பின்போக
சென்று குறுகினார் தென்காஞ்சி மாளிகையில்
மாளிகையில் வந்து வண்ணானு மென்சொல்வான்
இந்த நகரி யெழுந்தருளும் நாச்சியென்று
கைகாட்டி வண்ணான் கடைத்தெருவே போனானே,

மருவார் மலரணையில் வாழ்ந் திருக்குங் காஞ்சியனார்
திருவாசல் தன்னில்வந்து சென்று இளைப் பாறிநின்றாள்.

## குறமகள் வாசலவனிடம் தன் சிறப்புக்கூறல்

வாசல்தனில் வந்துநிற்க வாசலவ னென்சொல்வான்
எவ்வூர் குறத்திநீ யிங்குவரக் காரியமேன்
வாசலவன் வந்து மாதுகன்னைச் சூழ்ந்துகொண்டு
ஏது குறமாதே யெங்குநின்று வந்தீர்நீர்
கேட்டருளும் வாசலற்கு கிளிமொழியு மென்சொல்வாள்
மேட்டுவரை தானிருக்கும் மிக்க குறமகள்நான்
எந்நிலமும் போற்றும் இந்துகுலக் காஞ்சியனார்
மலைமிதுக்கம் பழந்தேடி வந்ததொரு மன்னவன்தான்
கொங்கையென்னுங் கம்பத்தே சேர்ந்துக் குறுகிநின்ற
கம்பத்தி லானைதன்னைக் கையிறுகக் கட்டிவைத்தேன்
கம்ப முறிந்து கயிறுபறி போனதுவே
இந்த நகரிதன்னில் இங்குவந்த தென்றுசொல்லி
தந்தி யடிப்பிறகே வந்தேன் தனித்தனியே
அந்த மொழிகேட்டு வாசலவ ரென்சொல்வார்
எந்நிலமும் போற்றும் இந்துகுலக் காஞ்சியனார்
மலைமிருக்கம் பழந்தேடி வந்ததொரு மன்னவற்கு
ஆசையு மன்பும் அறவே மிகக்கொடுத்து
எற்றிமா விந்திரியக் கூகைநீர் தன்னுடனே
ஆடையொட்டி தன்னுடனே அவுரிவேர் தான்கூட்டி
பின்துடரி வேரும் பெருங்கழற்சி வேர்கூட்டி
மடிச்சீலை கொட்டிவேர் மதமததம் வேர்கூட்டி
கருங்காகப் பித்துடனே காக்கணான் வேர்கூட்டி
புத்தாந்தைக் கண்ணுடனே பேய்க்கருப்பச் சாறுவிட்டு
உத்திவேர் நல்ல சுழல்வண்டு தான்கூட்டி
நிழலில் உலர்த்திவைத்து நெற்பயிறு போலுருட்டி
சோறுதயிர் தன்னிலையும் சுண்ணாம்பி லுண்டையிட்டு
மன்னவனார் தின்று மதியயங்கி உள்மறந்து
மாதேவிக் காகாமல் வஞ்சனைகள் செய்ததிவள்
கானப் புனக்குறத்திக் காஞ்சியரைத் தான்தேடி
துடிக்கும் நிகரிடையாள் துய்யமணி வாசல்வந்தாள்
குடிக்கரிய தேவியற்குங் கொற்றவற்குங் கூறுமென்றாள்
வாசலோன் போக வனக்குறத்தி பின்போக
வாசலெல்லாந் தான்கடந்து மாளிகைக்குள் போகலுற்றார்

## காஞ்சியனைச் சந்தித்தல்

ஓங்குபுகழ் காஞ்சியனா ருயர்ந்தகொரு மேடைதனில்
மாதேவி தன்னுடனே மகிழ்ந்துசதிரங் கம்போட
மாணிக்கப் பொற்பலகை வைடூரியக் கயிறும்
ஆணிப்பொன் ஒட்டி அரசஞ்சதி ரங்கம்வைத்து
பாண்டியருந் தேவியரும் பார்த்துப் பொருமிடத்தே
நின்ற விழிக்குறத்தி நிகரெதிரே சென்றாளே
அந்தக் குறமாதை யரசனும் கண்பார்த்து
சிந்தை யுருகித் திருக்கண்கள் முத்துதிர
கண்டாளே மாதேவி தன் காஞ்சித் திருமுகத்தை

## குறமாதைக் கண்டு பாண்டியன்மகள் வெகுண்டு பேசுதல்

கொண்டாளே நெஞ்சகத்தில் கோபமென்னுஞ் செந்தீயை
மருந்தோம்ப லென்று வையகத்திற் சொல்வதுண்டு
பெருந்தகமை பீடழிய வந்ததுகாண் பெண்ணணங்கே
உங்கள் குலத்தில் உனக்கொருவ னில்லையோடி
எங்கள் குலத்தில் எழுந்தரசைப் பட்டுவந்தாய்
ஊரார் கணவனுக்கு உத்தாசைப் பட்டுவந்தாய்
ஏதாக வாழ்நாளை விடவந்தா யித்தூரம்
தேசத்தில் பெண்களெல்லாம் தேடிவந்து நிற்பார்களோ
என்று திருத் தேவிசொல்ல ஏங்கிக் குறத்திசொல்வாள்

## குறத்தியின் ஏசுதல்

என்னையோ காஞ்சிப் பெருமாள் இருளறுத்து
மன்னன் திருவிளக்கி னுள்ளே மறைந்திருந்து
நரவுலகந் தன்னில் நால்வர் நகைத்திடவே
காவ லழிந்து களவினா லுட்புகுந்து
வாட்கைப் படுமுன்னே மைந்தனையு முண்டாக்கி
தாய்க்குந் தகப்பனுக்குந் தாதிமார் தான்பேசி
நன்மை மிகப்பேசி உதாசினங்கள் தான்பேசி
தன்னிக ரில்லாத சந்திரகு லத்துதித்தோன்
மால்யானை ஏறி மழுவுடனே வீதிவந்து
சூலோடே கலியாணம் செய்தேனோ சொல்லுமென்றாள்.

## பாண்டியன் மகளின் மாற்றம்

அம்மாள் குறத்தி யடைவுடனே சொல்லுகிறாய்
சகல கலையும் சர்வகலை யும்படித்தாய்.

உவகந்த மெய்க்க உள்ளங்கால் மயிர்முளைக்க
கண்ணிலிட்ட மையைக் கரையாம லேயெடுப்பாள்
இன்னம் பொறுத்தால் என்னையும்வாய் கட்டுவிப்பாள்

## குறமாதின் சீற்றம்

ஆங்காணும் பெண்ணே அதுக்கும் மறிந்தறிவேன்
அரசன்திருத் தேவியென்று அஞ்சிப் பொறுத்திருந்தேன்
மன்னன்திருத் தேவியென்று வையப் பொறுத்திருந்தேன்
தென்னன்திருத் தேவியென்று திட்டப் பொறுத்திருந்தேன்
என்னென்ன வோஆசைப் படுவா ரிதுகேளும்
பெண்களிலே ஆசைப் படுவார் பெருகவுண்டு
ஆசைப் படுங்கதைகள் அடைவுரைக்க நீகேளாய்
ஐவர் தனிலொருத்த னதுசவரி வாழ்வீமன்
சுந்தரிக்கா யன்று சேனை படைபொருது
காரார் விழியாள் தமையனையங் கொல்லுவித்து
போதுபுகழ் வீமனுடன் போயிருந்து வாழலையோ
சூர்ப்பனகை யென்று துடியிடையா ளாசையினால்
சீர்பெரிய மாலுக் கிளையோனைச் சென்றணுகி
ஆவ லுடனே அணைந்தா ளமளியிலே
கோபித்துக் கண்சிவத்து கொற்றவனார் தம்பியரும்
சீராவைத் தானுருவிச் சேயிழையைத் தான்பிடித்து
மூக்கரிந்து விட்டகதை கேட்டிலையோ மொய்குழலே
ஆசையினா லந்த அரிவைதனில் தானொருத்தி
நீதியினால் காஞ்சியனார் நெறிகேடு செய்தாரோ
என்று குறத்திசொல்ல ஏந்திழையு மேதுசொல்வாள்

## தேவியின் மறுமொழி

பத்தாக் குறத்திநீ பாராமல் பேசுகிறாய்
ஒவ்வாக் குறத்திநீ உதாசினங்கள் சொல்லுகிறாய்
பூனைக் கருங்காகம் புன்பருந்து உள்ளதெல்லாம்
ஈனமறத் தின்றவளே ஏசுவது நீயோதான்
என்று சொல்லப் பூங்குறத்தி ஏந்திழையு மேதுசொல்வாள்

## குறமகள் தன்குலத்தியல்பு கூறல்

எங்கள் குலத்தியல்பு சொல்லக்கே ளும்பெண்ணே
நரைத்துத் தடியூன்றி நடையொருகால் மூச்செறிந்து

முகத்தில் திருநீறும் முன்னூலுந்[1] தாவடமும்
கோர்வையுறத் தன்னுடனே குளிர்மணிகள் தான்சூடி
மண்ணில்நட மாடியைப்போல் வந்தான் அறுமுகனும்
இராசப் பெருவழுத இலந்தைக் கனிப்புழுபோல்
நரைத்த தலைமயிரும் நடுங்க நடுங்கவந்து
தள்ளி விழுவார்போல் தடியூன்றித் தள்ளாடி
மெல்ல வெழுந்திருந்து விறாக வேலவனர்
ஈசன் திருமகனார் ஏறுமயில் வேலவனார்
வாசம் புரிகுழலாள் வள்ளிதனக் காகவந்து
குன்றப் பெருவனமுங் கூசாம லேதிரிந்து
வள்ளிதனை வேலவனார் வாகாகக் கைப்பிடித்து
சம்மந்தம் செய்த தழல்பாயும் எங்கள்குடி
ஆன குலத்தில் பிறந்த குறமகள்நான்
என்குலத்துக் குன்குலத்தான் நீதிசைக்கப் போதுமடி
தேனுந் தினைமாவுந் தேக்கிலையில் கொண்டுவந்து
வேல்பாதங் கொண்டாடி வேலவற்குந் தேவியற்கும்
சப்பந்தஞ் செய்த குடிகாணு மெங்கள்குடி
அந்த நிலத்தில் பிறந்த குறமகள்நான்
என்றே குறமாது ஏந்திழையும் சொல்லுகையால்

## தேவியின் வேண்டுகோள்

மன்னன் மகளெழுந்து வனக்குறத்தி யைநோக்கி
மாணிக்கம் நீலம் வைரம்வை டூரியமும்
ஆணிக் கனகமணி ஆபரணம் நான்தருவேன்
வேண்டும் நிதிதருவேன் வெள்ளிவெண் கலந்தருவேன்
யானை சுமந்த வதிபாரத் தினைப்பொன்
அங்கே வரவிடுவேன் ஆயிழையே யுன்தனக்கு
குன்றக் குறமகளே கொற்றவன்மே லாசைவிடாய்

## குறமகள் கூற்று

பண்டை பெருமை பரிவுடனே சொல்லுகிறாய்
தண்ணீர் தவித்துத் தளர்ந்து விழுந்தவற்கு
எண்ணெய் குடித்தால்விடாய் நீங்குமோ ஏந்திழையே
கானகத்தி லேநெருப்புக் கலந்தே யெரிந்ததென்றால்
ஊர்தனிலே வந்து ஊறுங்கிணற்றுத் தண்ணீரை

---

1. தாவடம் - உருத்திரமணிமாலை

கொண்டுபோய் வார்க்கவென்றாக் கோதையரே ஒண்ணுமடி
மானிறைச்சி வேங்கை வரித்தோ லுடுத்தவற்கு
தேனிருக்க வேப்பங்காய் தின்பர்களோ தேன்மொழியே
நெல்லரிசிச் சம்பாவும் நெரியசோ றுண்டவற்கு
புல்லரிசிச் சோறு பொறுக்குமோ பூவையரே

## தேவீ குறமகளை உடன்பாட்டிற்கு அழைத்தல்

ஆங்காண் குறத்தி யடைவுடனே சொல்லுகிறாய்
உன்னாணை நானும் உண்மைசொல்லக் கேட்டருளாய்
நீயொருத்தி நானொருத்தி இங்கிருந்து வாழ்ந்திருப்போம்
ஏழு மலைகடந்து எட்டா மலைதனிலே
நீயங்கே போனாலும் இங்கேநீ வந்தாலும்
இன்றுமுதல் நீயெனக்கு உடன்பிறந்த தங்கையர்காண்
அங்கையுந் தங்கையுமாய் அனுதினமும் வாழ்ந்திருப்போம்
ஒக்கக் கலந்திருப்போம் ஒத்தாட வாழ்ந்திருப்போம்

## குறமகள் உடன்படாமைக்குக் காரணம் சொல்லல்

என்றுசொல்ல மாதேவி யியற்குறத்தி யென்சொல்வாள்
மன்னர் குடியில் முறையில்லை வானுதலே
எங்கள் குடியில் இருந்தோம் இருந்தறியோம்
நித்தம் விடுவாயாய் நெடுநா ளிருப்பேன்காண்
என்றுசொல்ல வேகுறத்தி இயல்புடைய மன்னன்மகள்

## தேவியின் சீற்றம்

ஆகாக் குறத்தி யடைவுடனே சொல்லுகிறாய்
ஒவ்வாக் குறத்தி உதாசினமே சொல்லுகிறாய்
என்று விடியுமிவள் ஏசுதலைக் கேட்டிருப்பேன்
கொன்றுபோ டென்றுக் குறமகளைக் கூறினளே
மத்தகத்தைப் பாகன் மதப்படுத்திக் கொண்டுவந்து
குத்திக் குறத்திதன்னைக் கொல்லும்படி யென்றுளே
அரனை மதப்படுத்தி அடைவாகப் பாகனுந்தான்
மத்தகத்தைப் பாகன் மதப்படுத்திக் கொண்டுவந்தான்
குஞ்சரத்தைக் கண்டு குறத்தி யெழுந்திருந்தாள்
குறத்தி யெழுந்திருந்து கூறுவாள் யானைதன்னை
யானைப் பெருமானே யறிவுடைய குஞ்சரமே
உன்பாத மேபணிந்தேன் பண்புடைய வாரணமே

உன்னுடைய தம்பியற்கு என்தங்கை தானிருந்தால்
உந்தனுக்கு நானும் கொழுந்தியல்லோ வாரணமே
அந்த மொழிகேட்டு அயிரா பதக்கெளிறும்

## தேவியின் வருத்தம்

யானையுங் கொல்லாது அரசனும் வாய்திறவான்
தென்னன் மகளுந் திருத்தாதி மார்களுடன்
கன்னக் குறத்தியிவள் காசுபெறா தன்வாயால்
இவள்வையப் பொறுக்க மனமெழுமோ தாதியரே
கற்பூரங் காயங் கலந்தும் அதில்கரைத்து
மாயக் குறத்தி மருட்டிலகப் பட்டாற்போல்
மாயக் குறத்தியின்மேல் வாழ்நாளை விட்டிடுவேன்

## குறமாது தேவியை மகிழ்வூட்டல்

மன்னர்த்திருத் தேவிசொல்லி மாளிகையில் பேசுகையில்
தென்னக் குறத்திபோய் திருக்கை தனைப்பிடித்து
மன்னர் குடியில் விழுந்தபழி யார்சுமப்பார்
எங்கள் குடிக்கு இழுக்குக்காண் ஏந்திழையே
மாதேநீ தானிருந்து மன்னவனைக் கைக்கொள்ளேன்
என்று சொல்லித் தான்குறத்தி ஏங்கி வழிநடந்தாள்

## குறமாது குளிர்ந்த நிழல் சோலையில் கலத்தல்

சென்றுசெழுஞ் செண்பகப்பூங் காவனத்தில் சென்றவளும்
பூண்டுக் கொடியறுத்து பிணைத்துக் கழுத்திலிட்டு
பிரிசமுடன் முடிந்து பெண்கள்நல்லா ளென்சொல்வாள்
மாதா பிதாவாழ மண்ணிலுள்ளோர் தான்வாழ
உற்றாரும் பெற்றாரும் ஊரும்மிக வாழ்ந்திருக்க
நாடு தழைத்திருக்க நல்லமழை பெய்திருக்க
மன்னர் தழைத்திருக்க மந்திரிமார் வாழ்ந்திருக்க
பாடும் புலவருடன் பாவலரும் வாழ்ந்திருக்க
ஆறிலொன்று கடமைகொண்ட அவனியெல்லாம் வாழ்ந்திருக்க
தேசந் தழைத்திருக்கத் திக்கிலுள் ளோர்தழைக்க
வேதா விதித்த விதியை நினைந்துகொண்டு
நாதா சரணமென்று நாண்கொண்டு சென்றாளே
நாண்கொண்ட பின்பு நரபால னெழுந்திருந்து
மன்ன னெழுந்திருந்து மாளிகையி னுட்புகுந்து
கச்சைகட்டி முத்தியிட்டுக் காதில் கடுக்கனிட்டு

## கண்ட காட்சியு காஞ்சிய திகைப்பு

பூங்கா வனம் சென்றான் புனக்குறத்தி யைப்பார்க்க
ஆங்கே விளாவில் அடியில் தூங்குவதைக்
கண்டான் கருத்தழிந்தான் கண்கள்புன லாறோட
சீராவைத் தானுருவி தென்காஞ்சி மன்னவனார்
அறுத்து மடியில்வைத்து அரசர் பெருமாளும்
மடியி லிருத்திவைத்து மன்னர் பெருமாளும்
தனனிலே சண்டை தவிருமே யென்றிருந்தேன்
மெய்யாக வந்து விளைந்ததே யென்றுசொல்லி
கொற்றக் குறத்திதன்னைக் கொற்றவனார் தாமெடுத்து
குங்குமச் சோலை குளிர்ந்தநிழல் மாலையிலே
நல்லடக்கஞ் செய்து நரபால பூபதியும்
குறத்தி யழகுதன்னைக் குறைவறவே தானெழுதி
காஞ்சி மடலெழுதிப் போனானே காவலனும்
கானக் குறமாதுங் காத்தங்கே நின்றாளே.

காஞ்சிமன்னன் அம்மானை முற்றும்.

# கலைச்சொல் அகரவரிசை


| | பக்க எண் |
|---|---|
| அசனம் | 5 |
| அடைக்காய் | 15 |
| அமணர் | 9 |
| அயோத்தியர்கோன் | 25 |
| அனுமன் | 19 |
| இராவணன் | 9 |
| இலங்கை | 9 |
| ஈசுரனார் | 1 |
| ஏகாவி | 62 |
| கடுக்கன் | 7 |
| கப்பணம் | 10 |
| கமண்டலம் | 8 |
| கலியாணம் | 2 |
| கலைவாணர் | 1 |
| காசினியோர் | 40 |
| காஞ்சி | 7 |
| காந்தள்மலர் | 2 |
| குங்குமம் | 48 |
| குத்துவிளக்கு | 10 |
| குமிழமலர் | 2 |
| குலக்கொடியாள் | 7 |
| கொங்கை | 48 |
| கொச்சி | 7 |
| கொல்லம் | 7 |
| கோட்டை | 4 |
| கோபுரத்தேர் | 8 |
| கோமான் | 8 |
| கோவலன் | 26 |
| கோழிக்கோடு | 7 |
| சிற்றெறும்பு | 1 |
| சுளகை | 10 |
| சூர்ப்பனகை | 65 |

| | பக்க எண் |
|---|---|
| சொக்கர் | 4 |
| சோதிமணி | 4 |
| தட்டான் | 4 |
| தாதியர் | 9 |
| தில்லை | 7 |
| தென்குரகை | 1 |
| நறுநுதலாள் | 7 |
| நெல்லிக்காய் | 18 |
| பதக்கம் | 16 |
| பல்லக்கு | 34 |
| பாண்டியன் | 8 |
| பார்ப்பான் | 3 |
| பிராமணன் | 2 |
| பிரமகத்தி | 3 |
| பூம்புகார் | 8 |
| பெண் கொடியார் | 2 |
| மதுரை | 8 |
| மறையோன் | 8 |
| மலைமிதுக்கம்பழம் | 38 |
| மாராப்பு | 4 |
| மைவிழியார் | 1 |
| மேலொளியல் | 6 |
| மொய்குழல் | 1 |
| வண்ணாத்தி | 62 |
| வண்ணான் | 62 |
| வாசலவன் | 8 |
| வாராழி | 1 |
| விடலை | 6 |
| விளாங்கனி | 42 |
| வேதியன் | 8 |
| வேந்தன் | 4 |
| வேப்பங்காய் | 67 |

இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்தவுடன் 1971 ஆம் ஆண்டு ஆங்கில, தமிழ் நாளிதழ்களுக்கு மதிப்புரைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. அப்போது வெளிவந்த மதிப்புரை பின்வருமாறு :

I Review dated 29—5—1971 : The Indian Express
Kanchimannan Ammanai
**Ed. By M. SEERALAN**

Ammanai is a form of ballad which was sung by girls in ancient Tamilnad while playing a particular game throwing and catching some toylike pieces. The girls used to narrate some story in their songs. The book under review presents the story of a King who ruled with Kanchipuram as his Capital his love affairs with a Pandyan princess and his military exploits. It is unfortunate that the name of the author of this fine work is not known. The editor has appended a list of Ammanai works which will be greatly useful to lovers of Tamil.

*(Sd.) R. Ponnappan,*

/ True copy /

II Review of the work with the compliments of
'The Mail' dated 24 — 4 — 1971.
Saraswathi Mahal Release
Kanchimannan Ammanai.
Ed. by **M. SEERALAN,**

Ammanai is a form of ballad that was in vogue from time immemorial in Tamil Nadu. In a way it belongs to the category of folk songs. According to the editor of this booklet, Kanchimannan Ammanai is one of the Ammanai's that is in vogue in Tamil Nadu. This Ammanai deals with the marriage of a king of Kanchi. The name of this author could not be traced

The Editor Mr Seeralan has proved enough material about the ballad in his introduction, which would go a great way to help Tamil research students.

/ True copy /

மதிப்புரை சுதேசமித்திரன் மார்ச்சு, 15, 1971
காஞ்சிமன்னன் அம்மானை; பதிப்பாசிரியர் ம. சீராளனார்

காஞ்சியை ஆண்ட ஒருவன் பாண்டியன் மகளை மணந்து வாழ்ந்த வரலாற்றை நாட்டுப் பாடலாகிய அம்மானையால் கூறுவது. பாடியவர் தெரியவில்லை. கருத்துநயம் இலக்கிய நயம் மிகுந்த நூல்.

/ உண்மைநகல் /